ப. பிலிஷேவ்ஸ்கி

# சோவியத் பொருளாதாரத்தின் சீரமைப்பு



ப. பிலிஷேவ்ஸ்கி

# சோவியத் பொருளாதாரத்தின் சீரமைப்பு

15413
15/14

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

NEW CENTURY BOOK HOUSE
Rs. 9-00
MADRAS-98

மொழிபெயர்ப்பாளர்: டாக்டர்
இரா. பாஸ்கரன்

**Б. Плышевский**

ИНТЕНСИФИКАЦИЯ ПРОИЗВОДСТВА
(ФАКТОРЫ УСКОРЕНИЯ)

*на тамильском языке*

**B. Plyshevsky**

RESTRUCTURING OF THE SOVIET ECONOMY

*in Tamil*

© முன்னேற்றப் பதிப்பகம், 1988

П $\frac{0605010000—076}{014(01)—89}$ 317—89

ISBN 5-01-001476-9

# பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . . . 5

1. ஒரு சில முடிவுகள் . . . . . 9

2. உற்பத்தியை தீவிரப்படுத்துவதை நோக்கிய திருப்புமுனை . 41

எதிர்காலத் திட்டங்கள் . . . 44

உற்பத்தியை துரிதப்படுத்தலின் முக்கிய உந்து சக்தி . . . . . . . . 75

3. உற்பத்தியை தீவிரப்படுத்தலை துரிதப்படுத்தும் வழிகள் . 97

மனித வளத்தைப் பயன்படுத்துவதை மேம்படுத்தல் . . . . . . . . . 97

மூலாதாரங்களின் சிக்கனம் . . . 111

ஏற்கெனவேயுள்ள உற்பத்தியின் பயனைக் கூட்டுதல் . . . . . . . . 127

நிர்வாகத்தின் தரத்தை உயர்த்தல். 154

4. உற்பத்தியை தீவிரப்படுத்தும் முறை நடைமுறைக்கு வருதல் . 173

பிரச்சினையின் வரலாற்றுச் சுருக்கம். 174

பதினொன்றாம் ஐந்தாண்டின் அனுபவம் . . . . . . . . . . . . 184

அடிப்படை சீரமைப்பு . . . . . 197

# முன்னுரை

சமூக-பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது தொடர்பாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரசால் முன்வைக்கப்பட்ட நீண்ட கால கொள்கை, சோவியத் சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் பண்பு ரீதியாக மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்டது. இக்கொள்கையின் நிறைவேற்றம் பொருளாதார, சமூக, அரசியல் துறைகளிலும் ஆன்மீக வாழ்க்கையிலும் புதிய எல்லைகளை அடைய சோவியத் யூனியனுக்கு உதவும்.

முன்வைக்கப்பட்டுள்ள கடமைகளின் நிறைவேற்றம், தேசியப் பொருளாதாரத்தை முற்றிலும் புதிய விஞ்ஞான-தொழில்நுட்ப, ஸ்தாபன-பொருளாதார மட்டத்திற்கு உயர்த்துவதுடனும், இதை தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவதுடனும் தொடர்புபடுத்தப்படுகிறது. இதன் பயனாய் சமூக உழைப்பின் உற்பத்தித் திறனும், பொருட்களின் தரமும், உற்பத்தியின் செயல்வன்மையும் உயரிய உலக மட்டங்களை அடைய வேண்டும், ஐக்கிய தேசியப் பொருளாதாரத்தில் சாலச் சிறந்த

கட்டமைவும் சீரிசைவும் ஏற்பட வேண்டும். இக்கடமைகளை நிறைவேற்ற ஒருசில ஐந்தாண்டுகள் தேவைப்படும். இந்நூற்றாண்டின் இறுதி வாக்கிலேயே தேசிய வருமானத்தை கிட்டத்தட்ட இரு மடங்கு உயர்த்தவும், உற்பத்தி உள்ளாற்றலை இரு மடங்கு கூட்டவும், இதை குணாம்ச ரீதியில் புதுப்பிக்கவும் திட்டமிடப்படுகிறது.

கம்யூனிஸ்டுக் கட்சியின் இன்றைய பொருளாதாரக் கொள்கையில் உற்பத்தியைப் பன்முக ரீதியில் தீவிரப்படுத்துவது தான் மைய அம்சம் என்று 27வது காங்கிரஸ் வரையறுத்துக் கூறியது. ''உற்பத்தியை தீவிரப்படுத்துவதை நோக்கி அடியோடு திரும்பியாக வேண்டும், முதலில் ஒவ்வொரு தொழில் நிறுவனமும் ஒவ்வொரு துறையும் பொருளாதார வளர்ச்சியின் குணாம்ச காரணிகளை முழுவதுமாகப் பயன்படுத்துமாறு செய்ய வேண்டும்''* என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

வாழ்க்கை முன்வைத்துள்ள கேள்விகளுக்கான பதில்கள் திட்டமிட்ட பொருளாதாரத்தின் உள்ளாற்றல், சோஷலிச ஜனநாயகம், கலாசாரம், மானுடக் காரணி ஆகியவற்

---

* **சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரசின் ஆவணங்கள்,** *மாஸ்கோ, அரசியல் பதிப்பகம், 1986, பக்கம் 141 (ருஷ்ய மொழியில்).*

றைப் பயன்படுத்தி, மக்களின் படைப்பாற்ற லின் அடிப்படையில் சோஷலிச வரம்பு களுக்குள், சோவியத் முறையின் உள்ளே கண்டுபிடிக்கப்படும். கட்சியின் அரசியல் கொள்கை சோஷலிச அமைப்பின் மேம் பாடுகளை முழுமையாகப் பயன்படுத்து வதையும் முன்னோக்கிய பாதையில் உள்ள எல்லா தடைகள், இடர்ப்பாடுகளையும் அகற்றுவதையும் சமூக முன்னேற்றக் காரணிகளுக்கு வாய்ப்பேற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது.

சோவியத் யூனியனில் பரவலான, ஆழ்ந்த சீரமைப்பு நடைபெறுகிறது. ‘‘சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட் டியின் ஏப்ரல் மாத முழுப் பேரவைக் கூட்ட தீர்மானங்களிலும், கட்சியின் 27வது காங் கிரஸ் முடிவுகளிலும் சுட்டிக்காட்டப்பட்ட நல் மாற்றங்கள், சீர்திருத்தங்கள் என் பவை சமுதாய உறவு முறை முழுவதிலும், மனிதர்களின் மூளையிலும் நெஞ்சங்களி லும், மனநிலையிலும் நவீன காலகட்டத் தையும், எல்லாவற்றிற்கும் மேலாக வேக மான விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி முன்வைக்கும் கடமைகளையும் புரிந்து கொள்வதிலும் ஏற்படும் உண்மையான புரட் சியாகும்’’ என்றார் சோவியத் யூனியன் கம் யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் மி.செ. கர்பச்சோவ்.*

---

* மி. செ. கர்பச்சோவ், சீரமைப்பு உடனடி யாகத் தேவையானது; இது எல்லோருக்கும்

இச்சிறு நூலில் சோவியத் பொருளாதாரத்தின் செயல்வன்மையை உயர்த்த 70ஆம் ஆண்டுகளிலும் 11வது ஐந்தாண்டு திட்டத்திலும், மேற்கொள்ளப்பட்ட பணிகளையும், கட்சியின் பொருளாதாரக் கொள்கையில் தீவிரப்படுத்தல் வகிக்கும் இடத்தையும் சுட்டிக்காட்டவும், கடமைகள் முன்வைக்கப் படும் விதம் மற்றும் இவற்றை நிறைவேற்றும் அணுகுமுறை ஆகியவற்றின் தொடர்ச்சியைக் கோடிட்டுக் காட்டவும் ஆசிரியர் முயலுகிறார். இது சம்பந்தமாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டம், ''1986—1990ஆம் ஆண்டுகள் மற்றும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சோவியத் யூனியனின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசைகள்'' ஆகிய ஆவணங்களில் அடங்கியுள்ள புதிய அம்சங்கள், இந்த ஆவணங்களின் அடிப்படையில் தீட்டப்பட்டுள்ள 12வது ஐந்தாண்டு திட்டம், கட்சி காங்கிரசின் முடிவுகளுக்கேற்ப பொருளாதார நிர்வாகத்திலும், பொருளாதாரப் பணியிலும் நடைபெறும் சீரமைப்பு ஆகியவற்றின் மீது இந்நூலில் முக்கியக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

---

எல்லாவற்றிலும் அவசியமானது, மாஸ்கோ, அரசியல் பதிப்பகம், 1986, பக்கங்கள் 36, 37 (ருஷ்ய மொழியில்).

# 1. ஒரு சில முடிவுகள்

சமுதாய உற்பத்தியை தீவிரப்படுத்துவதானது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் ஒரு அங்கமாக 70ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் முன்வைக்கப்பட்டது. எனவே இதற்குக் காரணம் என்ன, இக்கடமையை நிறைவேற்ற என்ன செய்யப்பட்டது என்று சுருக்கமாகப் பார்ப்போம். இக்கேள்விகளுக்கான பதில்கள் இன்று தீவிரப்படுத்தலின் உள்ளடக்கத்திலும் முறைகளிலும் தோன்றியுள்ள புதிய அம்சங்களைச் சுட்டிக்காட்ட உதவுகின்றன.

முதலில் 70ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் சோவியத் பொருளாதாரம் இருந்த நிலையைப் பற்றிப் பார்ப்போம். இக்கால கட்டத்தின் முக்கியமான குறிப்பிடத்தக்க அம்சம் தேசியப் பொருளாதாரத்தின் அளவுகளும், சோவியத் யூனியனின் உற்பத்தி மற்றும் விஞ்ஞான-தொழில்நுட்ப உள்ளாற்றலும் பிரம்மாண்டமாக அதிகரித்ததாகும். 1970இல் தொழிற்துறைப் பொருட்களின் உற்பத்தியும், அடிப்படை நிதிகளைப் புகுத்துவதும் இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் இருந்த குறியீடுகளுடன் ஒப்பிடும்

பொழுது 12 மடங்கு அதிகரித்தன, தேசிய வருமானம் 1940ஆம் ஆண்டுடன் ஒப்பிடு கையில் 8.7 மடங்கு கூடியது.

இதனால் உலகப் பொருளாதாரத்தில் சோவியத் யூனியனின் பங்கு கணிசமாக அதி கரித்தது. உதாரணமாக, உலகத் தொழிற் துறை உற்பத்தியில் சோவியத் தொழிற்துறை யின் பங்கு இருபது ஆண்டுகளில் கிட்டத் தட்ட இரு மடங்கு கூடியது. 1950இல் சோவியத் யூனியன் உலகத் தொழிற்துறை உற்பத்தியில் 20% தந்தது என்றால் 1970இல் இக்குறியீடு 38% ஆக உயர்ந்தது.

சோவியத் யூனியனுக்கும், முதலாளித்துவ உலகின் முன்னணி நாடாகிய அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இடையில் உற்பத்தி வளர்ச்சி மட்டங்களில் வரலாற்று ரீதியாகத் தோன்றிய பின்தங்கிய நிலை கணிசமாகக் குறைந்தது. சோவியத் புள்ளிவிவர இயல், குறிப்பாக 60ஆம் ஆண்டுகளின் ஆரம்பத் திலிருந்து முக்கியப் பொருளாதாரக் குறி யீடுகளைப் பற்றிய சர்வதேச ஒப்புமை விவரங்களைத் தருகிறது. தேசிய வருமா னம் என்ற பொதுக் குறியீட்டில் சோவியத் யூனியன் 1970ஆம் ஆண்டு அமெரிக்கா வோடு ஒப்பிடுகையில் 65% அடைந்தது இவ் விவரங்களிலிருந்து தெரிய வருகிறது. தொழிற்துறைப் பொருட்களின் பங்கு அமெ ரிக்க மட்டத்தில் 75% ஆக இருந்தது (1960 இல் 55%), விவசாயப் பொருட்களின் பங்கு கிட்டத்தட்ட 85% ஆக இருந்தது, சகலவித

போக்குவரத்து சாதனங்களின் சரக்குப் போக்குவரத்து அமெரிக்க சரக்குப் போக்குவரத்தை மிஞ்சியது(1960இல் கிட்டத்தட்ட 1/3 பங்கு குறைவாயிருந்தது); அதிலும் இருப்புப் பாதை சரக்குப் போக்குவரத்து அமெரிக்க மட்டத்தை விட 2.1 மடங்கு அதிகமாய் இருந்தது.

70ஆம் ஆண்டுகளில் முதலீட்டு அளவில் சோவியத் யூனியன் கிட்டத்தட்ட அமெரிக்காவை எட்டியது. தொழிற்துறையிலும் விவசாயத் துறையிலும் உற்பத்தி மட்டங்கள் குறைவானவையாக இருந்த போதிலும் சோவியத் யூனியன் அமெரிக்காவைப் போன்று கிட்டத்தட்ட அதே அளவு நிதியை தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில்நுட்ப புதுப்பித்தலுக்கும் ஒதுக்கியது, உற்பத்தித் துறையில் இது சற்று கூடுதலாகக் கூட இருந்தது. சோவியத் யூனியனின் உற்பத்தி உள்ளாற்றல், தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் அனைத்தின் மொத்த உள்ளாற்றலுக்குச் சமமாகத் துவங்கியது.

உற்பத்தி வளர்ச்சியில் அடையப்பட்ட வெற்றி சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மீது அதிக கவனம் செலுத்த உதவியது. 1971இல் நடந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24வது காங்கிரஸ் முதன் முதலாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது

தான் ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கியக் கடமையென்று வரையறுத்தது. இக்கொள்கை இந்த ஐந்தாண்டுகளுக்கு மட்டுமின்றி, எதிர்காலத்திலும் பொருளாதார வளர்ச்சியின் பொதுத் திசையமைவாக இருக்குமென்று கோடிட்டுக் காட்டப்பட்டது. மக்களின் பொருளாயத, கலாசாரத் தேவைகளை அதிகபட்சம் முழுமையாகப் பூர்த்தி செய்வதுதான் சோஷலிசத்தில் சமுதாய உற்பத்தியின் உயரிய லட்சியம் என்ற கருத்துநிலை பிந்தைய கட்சி ஆவணங்களில் வலியுறுத்தப்பட்டது, தொடர்ச்சியாக வாழ்க்கையில் நிறைவேற்றப்பட்டது. இது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் பிரதிபலிக்கிறது.

ஒன்பதாவது (1971—1975), பத்தாவது (1976—1980), பதினொன்றாவது (1981—1985) ஆகிய மூன்று ஐந்தாண்டுகளில் தொழிற்துறை பொருட்களின் உற்பத்தி இரு மடங்கு அதிகமாகியது, அடிப்படை நிதிகளை புழக்கத்தில் விடுவதும், தேசிய வருமானமும் இரு மடங்கு கூடின. அதே நேரத்தில் உற்பத்தி வளர்ச்சியின் சமூகத் திசையமைவு வலுப்பட்டது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் நேரடியாகத் தொடர்புடைய கடமைகளின் நிறைவேற்றத்திற்காக மேன்மேலும் அதிக நிதி ஒதுக்கப்படலாயிற்று. உதாரணமாக, தேசிய வருமானத்தில் நுகர்வு நிதியின்

பங்கு ஸ்திரமடைந்து பின் அதிகரிக்கத் துவங்கியது. ஒன்பதாவது ஐந்தாண்டில் தேசிய வருமானத்தில் 72.3% மும், பத்தாவது ஐந்தாண்டில் 73.9% மும் நுகர்வு லட்சியங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன என்றால் இக்குறியீடு பதினொன்றாவது ஐந்தாண்டில் 74.8% ஆக இருந்தது. தொழிற்துறையில் உற்பத்தி சாதனங்களை உற்பத்தி செய்யும் துறைகளின் வளர்ச்சி வேகங்களும் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் துறைகளின் வளர்ச்சி வேகங்களும் நெருங்கி வந்தன. ஒன்பதாவது, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் "A" துறைகளின்* பொருட்களின் உற்பத்தி வளர்ச்சி வேகங்கள் "B" துறைகளின்** பொருட்களின் உற்பத்தி வளர்ச்சி வேகங்களை 1.24 மடங்கு விஞ்சி நின்றன என்றால் பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் இது 0.95 மடங்காக இருந்தது, அதாவது நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி வேகம் அதிகரித்தது.

உணவுப் பொருள், பயிர்த்தொழில் மற்றும் கால்நடைத் துறை மூலப்பொருட்களை வழங்கும் விவசாயத் துறையின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தை வளர்த்து, வலுப்படுத்துவதற்கான நிதி

---

* உற்பத்தி சாதனங்களை உற்பத்தி செய்யும் துறைகள்.—ப-ர்.

** நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் துறைகள்.—ப-ர்.

ஒதுக்கீடுகளும் கணிசமாக அதிகரித்தன. கடந்த இரண்டு ஐந்தாண்டுகளில், தேசியப் பொருளாதார முதலீட்டில் மூன்றிலொரு பங்கு விவசாயத் தொழிற்துறை இணையத்தின் துறைகளுக்குச் சென்றது. எட்டாவது ஐந்தாண்டில் விவசாயத் துறையில் இக் குறியீடு 27%ஆக இருந்தது. விவசாயத்-தொழிற்துறை இணையத்தில் கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணைகளைத் தவிர, இவற்றிற்கான இயந்திரங்கள், இரசாயன உரங்கள், மற்ற தொழில்நுட்ப சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களும் விவசாயப் பொருட்களைப் பதப் படுத்தும், சேமிக்கும், சப்ளை செய்யும் அமைப்புகளும் அடங்கும்.

அதே நேரத்தில் இக்காலகட்டத்தில் உற்பத்தி வளர்ச்சிக்கான இடப்பரப்பு வாய்ப்புகள் கணிசமாகக் குறைந்தன. பொருளுற்பத்தியின் வளர்ச்சியில் இதுவரை இவைதான் முக்கியப் பங்காற்றின. உதாரணமாக, வேலை செய்பவர்களின் எண்ணிக்கை, எரிபொருள் எடுப்பு, முக்கிய மூலப்பொருட்களின் உற்பத்தி, முதலீடுகள் ஆகியவற்றின் அதிகரிப்பு குறைந்தது. 1971—1985இல் தொழிலாளர்கள், ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 27.6 மில்லியன் அதிகரித்தது, இதற்கு முந்தைய 15 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 41.8 மில்லியன் அதிகரித்தது; எனவே அதிகரிப்பு வேகம் மூன்றிலொரு பங்கிற்கும் மேலாகக் குறைந்தது. எஃகு உற்பத்தி அதிகரிப்பு 1956—1970இல் 71 மில்லியன் டன்னாக

இருந்தது, பிந்தைய கட்டத்தில் 39 மில்லியன் டன் வரை குறைந்தது, அதாவது கிட்டத்தட்ட இரு மடங்கு குறைந்தது.

இதே இரண்டு காலகட்டங்களில் எரிபொருள் உற்பத்தி அதிகரிப்பு 742 மில்லியன் டன்னிலிருந்து 915 மில்லியன் டன்னாக கூடியது; இதில் எண்ணெய், எரிவாயு எடுப்பு அதிகரித்தது முக்கியப் பங்காற்றியது. 1985இல் 2.1 டிரில்லியன் டன் (ஒப்பு நிலை அலகுகளில்) எரிபொருள் எடுக்கப்பட்டது. கூடுதல் எரிபொருள் முழுவதும் கிட்டத்தட்ட மீட்கப்படும் மேற்கு சைபீரியப் பகுதிகளில் கிடைத்தது; இப்பகுதிகள் கடந்த மூன்று ஐந்தாண்டுகளில் முக்கிய எரிபொருள்-எரிசக்தி மையமாகியுள்ளன. இவை சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியிலிருந்து—இங்குதான் பதப்படுத்தும் தொழிற்துறையின் கணிசமான பகுதி உள்ளது, இங்கே பெரும்பாலான மக்கள் வசிக்கின்றனர்—தள்ளியுள்ளன. எனவே எரிபொருளை எடுத்துச் செல்லும் போக்குவரத்துசெலவுகள் அதிகரித்தன.

கடினமான இயற்கை மற்றும் தட்பவெப்பச் சூழ்நிலைகளையுடைய தொலைதூரப் பிரதேசங்களில் எரிபொருள் கண்டுபிடிக்கப்படுவதானது எரிபொருள் எடுக்க ஆகும் செலவுகளை அதிகப்படுத்துகிறது என்னும் அம்சமும் முக்கியமானது.

கட்டுமானத்தில் இடப்பரப்பு காரணிகளின் பங்கு அவ்வளவு அதிகமாகக் குறையவில்லை. முதலீடுகளின் மொத்த அளவு

தொடர்ந்து அதிகரித்தது. 1971—1975இல் இவை முந்தைய மூன்று ஐந்தாண்டுகளில் தேசியப் பொருளாதாரத்தில் செய்யப்பட்ட முதலீடுகளை 2.4 மடங்கு விஞ்சின. ஆனால் முதலீடுகள் அதிகரிக்கும் வேகங்களும் பாதி குறைந்தன: ஆறாவது, ஏழாவது, எட்டாவது ஐந்தாண்டுகளில் 3.8 மடங்காக இருந்த இந்த வேகம் ஒன்பதாவது, பத்தாவது, பதினொன்றாவது ஐந்தாண்டுகளில் 1.9 மடங்காக குறைந்தது.

தொழிற்துறைக் கட்டுமானம் விரிவடைவதை இடப்பரப்பு வளர்ச்சியின் குறியீடாக மட்டும் கருதக் கூடாது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். முந்தைய தொழில்நுட்ப அடிப்படையில் இப்படி நடந்தால் மட்டுமே இது இடப்பரப்பு வளர்ச்சியாகும். உண்மையில் முதலீட்டில் கணிசமான பகுதி எப்போதும் புதிய தொழில்நுட்பம், தொழில் நுணுக்க முறைகளை உருவாக்கி, பயன்படுத்த செல்கிறது; இவற்றைப் பயன்படுத்தினால் உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டம் உயரும். மேற்கு சைபீரியாவிலும் சோவியத் யூனியனின் மற்ற கிழக்குப் பிரதேசங்களிலும் உள்ள புதிய படிவுகளைக் கண்டுபிடித்து பயன்படுத்துவதன் மூலம் எரிபொருள் தொழிற்துறையை வளர்க்கும் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். இப்படிவுகளிலிருந்து எரிபொருளை வெளியிலெடுக்கவும், எண்ணெய், எரிவாயுவை வேறிடங்களுக்கு எடுத்துச் செல்லவும் புதிய முறைகளைப் பயன்படுத்த வேண்டியிருந்

தது. இதனால் ஏற்கெனவே பயன்படுத்தப் படும் படிவுகளிலிருந்து எரிபொருளை எடுப் பதை விரிவுபடுத்த ஆகும் செலவுகளுடன் ஒப்பிடும் பொழுது எரிபொருள் துறைகளில் முதலீடுகளின் செயல்வன்மை கணிசமாகக் கூடியது. உற்பத்தியை தீவிரப்படுத்துவதன் மீது முதலீடுகளின் தாக்கத்தைப் பற்றி மேலே கூறியவை, இயந்திரக் கட்டுமானம், உலோகத் துறை, இரசாயனத் துறை, கன ரகத் தொழிற்துறையின் மற்ற அடிப்படைத் துறைகள் ஆகியவற்றை தொழில்நுட்ப ரீதியில் புதுப்பிப்பதற்கு இன்னமும் அதிக மாகப் பொருந்தி வரும்.

என்றாலும் தொழிற்துறைக் கட்டுமானத் தில் இடப்பரப்பு போக்குகள் ஓரளவு அதிக மாக இருந்தன. தோண்டியெடுக்கும் துறை மூலப்பொருள் துறை, விவசாயத் துறை ஆகியவற்றில் தொடர்ந்து பெருமளவில் முதலீடுகள் செய்யப்பட்டதிலும், விஞ்ஞான -தொழில்நுட்ப முன்னேற்றத்தை துரிதப் படுத்தும் துறைகளில், குறிப்பாக இயந் திரக் கட்டுமானத் துறையில் முதலீடுகளின் வேகம் குறைந்ததிலும், இயங்கும் தொழில் நிறுவனங்களைப் போதிய அளவு தொழில் நுட்ப ரீதியாகப் புதுப்பிக்காததிலும் மேற் கூறிய போக்குகள் வெளிப்பட்டன. பல நேரங்களில் உழைப்பின் உற்பத்தித் திற னைப் போதிய அளவில் உயர்த்தாத இயந் திரங்களும் உபகரணங்களும் புதிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. பல தொழில் நிறுவனங்களின் கட்டுமானம்

காரணமின்றியே நீண்ட நாட்கள் நடந்தது. கட்டமைப்புக் கொள்கையிலும் முதலீட்டுக் கொள்கையிலும் பல தவறுகளும் குறைகளும் இருந்தன.

உற்பத்தியை தீவிரப்படுத்தும் பிரச்சினைகளின் பால் கவனம் அதிகரித்ததானது சோவியத் நாட்டில் தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கான சூழ்நிலைகளும் காரணிகளும் மாறிவரும் புறவய நிகழ்ச்சிப் போக்கை பிரதிபலிக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கும், சமூகத் துறையில் சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளின் நிறைவேற்றத்திற்கும் தேவையான நிதிகளைப் பெரும்பாலும் உற்பத்தியின் செயல்வன்மையை அதிகரிப்பதன் மூலமும், உற்பத்தியின் அளவையும் தேசிய வருமானத்தையும் கணிசமாகக் கூட்டுவதன் மூலமும் பெறலாம்.

"உற்பத்தியை தீவிரப்படுத்துவது பற்றி கட்சி மேற்கொண்ட கொள்கையானது உழைப்பின் உற்பத்தித் திறனை கணிசமாக பெருக்குவது, மூலப்பொருட்களையும் மற்ற பொருட்களையும் சிக்கனப்படுத்துவது, உற்பத்தி நிதிகளைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவது, புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி, உற்பத்தியை விஞ்ஞான ரீதியாக ஒழுங்கமைத்து, தேசியப் பொருளாதாரத்தின் நிர்வாக முறைகளை மேம்படுத்துவதன் அடிப்படையில் முதலீடுகளின் செயல்வன்மையை உயர்த்துவது ஆகியவற்றின்

அவசியத்தை நிர்ணயிக்கிறது''*. இவ்வாக்கிய வடிவமைப்பில் ஒரு சில மாற்றங்களுடன் இதே போன்ற கருத்துநிலைகள் பிந்தைய எல்லா கட்சிக் காங்கிரசுகளின் ஆவணங்களிலும் இடம் பெற்றன. கட்சிக் காங்கிரசுகளின் தீர்மானங்களுக்கேற்பத் தீட்டப்பட்ட ஐந்தாண்டுத்திட்டங்களில் மேற்கூறிய கருத்துநிலைகளின் நிறைவேற்றம் சம்பந்தமான திட்டவட்டமான கடமைகள் அடங்கியிருந்தன.

பல்வேறு பொருளாதார, சமூக கடமைகளைத் தீர்க்க, உழைப்பின் உற்பத்தித் திறனை விரைவாக உயர்த்தி, உற்பத்தியின் செயல்வன்மையை அதிகரிப்பதைத் தவிர வேறு பாதையில்லை என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் (1976) சுட்டிக்காட்டப்பட்டது. இதன் அடிப்படையில், 1976—1980இல் தேசியப் பொருளாதார வளர்ச்சியின் முக்கியத் திசைகளைப் பற்றி காங்கிரசில் ஏற்கப்பட்ட ஆவணத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது: சமுதாய உற்பத்தியின் செயல்வன்மையை சகலவிதங்களிலும் உயர்த்தவும், பொருட்களின் தரத்தை மேம்படுத்தவும், சிக்கனத்தை வலுப்படுத்தவும் வகை செய்ய வேண்டும்.

---

* **சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24வது காங்கிரசின் ஆவணங்கள்,** மாஸ்கோ, அரசியல் பதிப்பகம், 1971, பக்கம் 142 (ருஷ்ய மொழியில்).

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 26வது காங்கிரஸ் (1981) 80ஆம் ஆண்டுகளில் நாட்டு வளர்ச்சியை கவனத்தில் கொண்டு நீண்ட காலப் பொருளாதார கொள்கையைத் திட்டவட்டமாக்கியது. விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துதல், பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுதல், நாட்டின் உற்பத்தி உள்ளாற்றலை மேலும் விவேகமாகப் பயன்படுத்துதல், எல்லா வித மூலப்பொருட்களையும் சகல விதங்களிலும் சிக்கனப்படுத்துதல், வேலையின் தரத்தை உயர்த்துதல் ஆகியவை சம்பந்தமான கருத்துநிலைகள் 11வது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கியக் கடமைகளாகச் சேர்க்கப்பட்டன. உற்பத்தியை சகல விதங்களிலும் தீவிரப்படுத்தும் கடமை உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்துவதில் ஒரு மிக முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது. இக்கொள்கையை நடைமுறைப்படுத்த 9வது, 10வது, 11வது ஐந்தாண்டுகளின் போது கட்சி, அரசு மற்றும் பொருளாதார ஸ்தாபனங்களும், உழைப்புக் கூட்டுகளும், எல்லா உழைப்பாளிகளும் பெரும் பங்காற்றினர். ஆனால் தேசியப் பொருளாதாரத்தில் வெற்றிகளோடு கூட குறிப்பிட்ட தீய போக்குகளும் தோன்றின. பொருளாதார வளர்ச்சி வேகங்கள் கணிசமாகக் குறைந்தன, தேசியப் பொருளாதார வளர்ச்சி பற்றி கட்சியின் வேலைத்திட்டம் முன்

வைத்த கடமைகள், ஏன் இதை விடக் குறைவான 9வது, 10வது ஐந்தாண்டு திட்ட கடமைகள் கூட நிறைவேற்றப்படவில்லை. இவையெல்லாம் உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்தும் கடமைகளின் நிறைவேற்றத்தைப் பாதித்தன. இக்காலகட்டத்தில் இக்குறியீடுகள் அட்டவணை1இல் தரப்பட்டுள்ளன.

செயல்வன்மையின் முக்கியக் குறியீடாகிய உழைப்பின் உற்பத்தித் திறன் இடையறாது அதிகரித்ததை அட்டவணையின் விவரங்கள் காட்டுகின்றன. மேலே பார்த்த காலகட்டத்தில் சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் 71% அதிகரித்தது, தொழிற்துறையில் இது 82%ஆக இருந்தது; தேசிய வருமானம், உற்பத்திப் பொருள் அதிகரிப்பில் இக்காரணியின் பங்கு கூடியது. 11வது ஐந்தாண்டில் தொழிற்துறையில் இதன் அதிகரிப்பால் உற்பத்தி அளவு 86% கூடியது (இது 8வது ஐந்தாண்டில் 73% மட்டுமே கூடியது). விவசாயத்துறையில் விளைபொருள் அதிகரிப்பு முழுவதற்கும் உற்பத்தித்திறன் கூடியது உதவியது. சமூக உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்யதேவைப்பட்ட பொருட்களின் அளவு குறைந்தது. சமூக உற்பத்திப் பொருளில் பாதிக்கும் மேல் பொருளாயத செலவுகளுக்குச் சென்றது. 1976—1985இல் ஒரு அலகு உற்பத்திப் பொருளுக்கு ஆகும் இச்செலவுகள் குறைந்ததானது தேசிய வருமான

அட்டவணை 1

## சமூக உற்பத்தியின் செயல்வன்மை
(1971—1985)

| | 1975 1970உடன் ஒப்பிடும் பொழுது %இல் | 1980 1975உடன் ஒப்பிடும் பொழுது %இல் | 1985 1980உடன் ஒப்பிடும் பொழுது %இல் |
|---|---|---|---|
| 1. சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் | 125.0 | 117.0 | 116.5 |
| இக்காரணியைக் கொண்டு அதிகரித்த தேசிய வருமானத்தின் பங்கு (%இல்) | 83.0 | 78.0 | 87.0 |
| தொழிற்துறையில் உழைப்பின் உற்பத்தித் திறன் | 134.0 | 117.0 | 117.0 |

| | | | |
|---|---|---|---|
| இக்காரணியைக் கொண்டு அதிகரித்த தொழிற்துறை உற்பத்திப் பொருட்களின் பங்கு (% இல்) | 84.0 | 75.0 | 86.0 |
| ஐந்தாண்டில் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்ததால் சிக்கனமான ஆள்பலம் (மில்லியன் நபர்கள்*) | | | |
| தேசிய பொருளாதாரத்தில் | 20.0 | 15.0 | 15.0 |
| தொழிற்துறையில் | 10.0 | 6.0 | 6.0 |
| 2. ஐந்தாண்டில் பொருளாயத செலவுகளின் சிக்கனம் (பில்லியன் ரூபிள்*) | | 11.4 | 12.4 |
| மொத்த சமூக உற்பத்திப் பொருள் | 136.0 | 123.0 | 119.0 |
| உற்பத்தி செய்யப்பட்ட தேசிய வருமானம் | 132.0 | 124.0 | 119.0 |

* அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது ஐந்தாண்டின் கடைசி ஆண்டில்.

| | 1975<br>1970 உடன் ஒப்பிடும் பொழுது %இல் | 1980<br>1975 உடன் ஒப்பிடும் பொழுநு %இல் | 1985<br>1980 உடன் ஒப்பிடும் பொழுது %இல் |
|---|---|---|---|
| மொத்த சமூக உற்பத்திப் பொருளுடன் ஒப்பிடும் பொழுது தேசிய வருமான வளர்ச்சி வேகங்கள் (%இல்) | 88.9 | 104.3 | 100.0 |
| 3. ஒரு ரூபிள் அடிப்படை உற்பத்தி சாதனங்களுக்கான உற்பத்தி | | | |
| தேசிய வருமானம் | 87.0 | 87.0 | 87.0 |
| தொழிற்துறை உற்பத்திப் பொருட்கள் | 95.0 | 86.0 | 87.0 |
| 4. 1 ரூபிள் தொழிற்துறை பண்ட உற்பத்திப் பொருட்களுக்கு ஆகும் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலவில் குறைப்பு (ஒப்பீட்டு விலைகளில்) | —3.1 | —0.4 | —1.4 |
| 5. | புழக்க சாதனங்கள்—மொத்தமாக | 148.0 | 138.0 | 144.0 |
| | நடப்பு விலைகளில் மொத்த சமூக உற்பத்திப் பொருள் | 134.0 | 125.0 | 128.0 |

உற்பத்தி வேகங்கள் அதிக விரைவாகக் கூட வழிகோலியது. மேற்கூறிய காலகட்டம் பூராவும் தொழிற்துறை உற்பத்திப் பொருட்களின் அடக்க விலை குறைந்தது.

அதே நேரத்தில், உற்பத்தியை தீவிரப் படுத்தும் கடமையின் நிறைவேற்றத்தில் உள்ள குறைகளும் அட்டவணையில் தெரிகின்றன. உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் வேகங்கள் குறைந்தன. தொழிற்துறையில் இவ்வேகங்கள் 9வது ஐந்தாண்டில் இருந்ததை விட 2 மடங்கு குறைவாக இருந்தன. உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு—ஒரு ரூபிள் அடிப்படை உற்பத்தி சாதனங்களுக்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்—குறைந்தது, இவ்வாறு இது குறைவதைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. எனவே உற்பத்தி அளவின் ஒவ்வொரு சதவிகித அதிகரிப்பிற்கும் மேன்மேலும் அதிக முதலீடுகள் தேவைப்பட்டன. நிதி அதிகரிப்பை விட முதலீடுகளின் தேவை விரைவாகக் கூடியது.

பொருளாயத மூலாதாரங்களின் புழக்க வேகம் குறைந்தது—தொழிற்துறையிலும் தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் உற்பத்தி அளவை விட உற்பத்தி சேம இருப்புகளும் தயாரான உற்பத்திப் பொருட்களின் மிச்சமும் விரைவாக அதிகரித்தன. புழக்க சாதனங்களின்—இவற்றில் பண்ட-பொருளாயத மதிப்புகளோடு கூட பணமும் அடங்கும்—ஒரு புழக்கத்தின் நேரம் கூடியது.

பொருட்களின் தரம் மேம்படுவதில் கணிசமான மாற்றங்கள் எதுவும் நடைபெற வில்லை. இத்தரம் பொருளாயத-தொழில் நுட்ப அடித்தளம் புதுபிக்கப்படுவதற்கும், தேசியப் பொருளாதாரம் மற்றும் மக்களின் அதிகரித்து வரும் தேவைகளுக்கும் ஏற்றதா யில்லை; உற்பத்தியின் அளவு கூட கூட இப்பொருத்தமின்மை மேன்மேலும் நன்கு தெரியலாயிற்று.

தீவிரப்படுத்தும் கடமைகளின் நிறை வேற்றத்திற்காக கடந்த 11வது ஐந்தாண் டில் குறிப்பிட்ட சில நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இக்காலகட்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் முந்தைய ஐந் தாண்டுகளில் உருவான போக்குகளைத் தவிர புதிதாக உருவான நல்ல, தீய போக்கு களும் அடங்கியிருந்தன.

26வது கட்சிக் காங்கிரஸ் முன்வைத்த கடமைகளின் நிறைவேற்றம் கடினமான, ஐந்தாண்டின் துவக்கத்தில் மிகச் சிக்கலான சூழ்நிலையில் நடந்தது. 70ஆம் ஆண்டு களில் பொருளாதாரத்தில் தோன்றிய தீய போக்குகள் வலுப்பட்டன—உற்பத்தி வளர்ச்சி வேகங்கள் தொடர்ந்து குறைந் தன, பொருளாதாரத்தில் தரக் குறியீடு கள் மோசமடைந்தன, 1982இல் மக்களின் உண்மை வருமான அதிகரிப்பு நின்று போயிற்று.

மொத்தத்தில் ஐந்தாண்டில் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு வேகங்கள்

கிட்டத்தட்ட முந்தைய காலகட்டத்தி லிருந்த மட்டத்திலேயே இருந்தன, ஆனால் இதில் முதலீடுகளின் அதிகரிப்பு கணிசமான அளவு குறைவாகவே இருந்தது. 9வது ஐந் தாண்டுடன் ஒப்பிடும் பொழுது 10வது ஐந்தாண்டில் உற்பத்தி அமைப்புகளில் முத லீடுகளின் அளவு 31% அதிகரித்ததெனில், 11வது ஐந்தாண்டில் இந்த அதிகரிப்பு சுமார் 18%ஆக இருந்தது. முந்தைய இரண்டு ஐந்தாண்டுகளுக்கு மாறாக, முதலீடு களுடன் ஒப்பிடுகையில் முடிவுபெறா கட்டு மானத்தின் அளவு குறைந்தது—1980இல் 87%ஆக இருந்த இது 1985இல் 78%ஆக குறைந்தது (1970இல் 73%ஆகவும் 1975இல் 75%ஆகவும் இருந்தது).

ஆள் பலத்தின் முழுமுதல் அதிகரிப்பு குறைவதும் அதன் வேகங்கள் தடைப்படு வதும் முந்தைய பத்தாண்டிலேயே வெளிப் பட்டன. 11வது ஐந்தாண்டிலும் இது தொடர்ந்தது. ஆனால் உழைப்பின் உற் பத்தித் திறன் அதிகரிக்கவில்லை, இக்குறியீட் டில் ஐந்தாண்டுக் கடமைகள் பெரும்பா லான துறைகளில் நிறைவேற்றப்படவில்லை. எனவே இவற்றிலிருந்து இருபொரு ளற்ற முடிவு பிறக்கிறது: உழைப்பின் உற் பத்தித் திறன் அதிகரிக்கும் வேகங்கள் முன் வைக்கப்பட்ட கடமைகளுக்கும், இவ்வேகங் களை அதிகரிக்கும் வாய்ப்புகளுக்கும், உற் பத்தியை தீவிரப்படுத்தலின் உள்ளாற்றலுக் கும்—உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டம்,

இதன் பொருளாயத வளங்கள், விஞ்ஞான ஊழியர்கள்—ஏற்றவையாயில்லை.

11வது ஐந்தாண்டின் இரண்டாவது பாதியில் சோஷலிச பொருளாதாரத்தின் செயல் வன்மையை உயர்த்துவதில் நல்ல போக்குகளின் பங்கை கோடிட்டுக் காட்டுவோம். இவை தீவிரப்படுத்துதலின் பெரும்பாலான திசைகளில் வெளிப்பட்டன. சமூக உற்பத்தியின் செயல்வன்மையைக் காட்டும் முக்கியக் குறியீடுகள் 11வது ஐந்தாண்டின் முதல் பாதியிலும் இரண்டாவது பாதியிலும் எப்படியிருந்தன என்று ஒப்பிட்டுப் பார்த்தால் நடைபெறும் மாற்றங்கள், அவற்றின் அளவுகளைப் பற்றிய ஒரு தெளிவான கருத்து கிடைக்கும் (சராசரி ஆண்டு அதிகரிப்பு வேகங்கள் %இல்):

| | 1981-1982 | 1983-1985 |
|---|---|---|
| சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் | 2.9 | 3.2 |
| உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்வால் கிடைத்த தேசிய வருமானத்தின் அதிகரிப்பு | 81.0 | 93.0 |
| ஒரு ரூபிள் அடிப்படை உற்பத்தி சாதனங்களுக்கு உற்பத்தி செய்யப்படும் தேசிய வருமானம் | —3.0 | —2.5 |

1983—1985இல் தேசியப் பொருளாதாரத்தில் உழைப்பின் உற்பத்தித் திறனின் அதிகரிப்பு வேகங்கள் கூடின, தேசிய வருமானத்தில் இக்காரணியின் பங்கு அதிகரித்தது, உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு குறைவது சற்று நின்றது. இருப்புப் பாதையில் போக்குவரத்து அளவு அதிகரிப்பு முழுவதும் உழைப்பின் உற்பத்தித் திறன் கூடியதால் கிட்டியது (முந்தைய இரண்டு ஆண்டுகளில் இது வேலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் அடையப்பட்டது). இந்த ஆண்டுகளில் கட்டுமானத் துறையில் கட்டுமான-இணைப்புப் பணிகளின் அளவு அதிகரிப்பில் 94% உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்ததால் அடையப்பட்டது; ஐந்தாண்டின் துவக்கத்தில் இக்குறியீடு 88%ஆக இருந்தது.

எல்லா துறைகளிலும் பொருளாயத மூலப் பொருட்களைச் சிக்கனப்படுத்துவதன் மீது அதிக கவனம் செலுத்தலாயினர். சராசரியாக, ஐந்தாண்டின் ஆரம்பத்தை விட 1983—1985இல் தேசியப் பொருளாதாரத்தில் கொதிகல-உலை எரிபொருள் 1.5 மடங்கும் மின்சக்தி கிட்டத்தட்ட 2.5 மடங்கும் இரும்பு கலந்த ரோலிங் உலோகங்கள் 1.7 மடங்கும் அதிகமாக சிக்கனப்படுத்தப்பட்டன. மொத்தத்தில் 1981—1985இல் எரிபொருள், எரிசக்தி, இரும்பு கலந்த ரோலிங் உலோகங்கள் ஆகியவற்றின் சிக்கனம் இவற்றின் நுகர்வு அதிகரிப்பில் பாதி

யாக இருந்தது. ஆனால் ஐந்தாண்டின் ஆரம்பத்தோடு ஒப்பிடுகையில் உற்பத்திப் பொருட்களுக்கான மூலப்பொருள் செலவழிவின் குறைவு அவ்வளவு அதிகமாக இல்லை.

தீவிரப்படுத்தலின் வேறு திசைகளில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொழிற்துறையின் உதாரணத்தில் பார்க்கலாம் (சராசரி ஆண்டு மாற்ற வேகங்கள் %இல்):

| | 1981-1982 | 1983-1985 |
|---|---|---|
| உழைப்பின் உற்பத்தித் திறன் | 2.4 | 3.6 |
| உழைப்பின் உற்பத்தித் திறன் கூடியதால் கிட்டிய உற்பத்திப் பொருளின் அதிகரிப்பு | 77.0 | 92.0 |
| உழைப்பின் உற்பத்தித் திறன் 1% கூடியதால் ஏற்பட்ட ஊதிய அதிகரிப்பு | 1.18 | 0.65 |
| ஒரு ரூபிள் அடிப்படை உற்பத்தி சாதனங்களுக்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | —3.4 | —2.3 |
| பொருட்களின் அடக்கவிலையில் ஏற்பட்ட குறைவு | —0.1 | —0.4 |

| | | |
|---|---|---|
| லாபத்தில் ஏற்பட்ட மாற்றம் | 0.2 | —0.2 |
| புழக்க சாதனங்களின் அதிகரிப்பிற்கும் உற்பத்திப் பொருளின் அதிகரிப்பிற்கும் உள்ள விகிதம் (ஒப்பு விலைகளில்). இது பண்ட-பொருளாயத மதிப்புகளின் இருப்பில் வெளியிடப்படுகிறது | 0.26 | 0.72 |

பொருளாதார செயல்வன்மையின் அதிகரிப்பில் ஏற்பட்ட நல்ல மாற்றங்கள் பொருளாதாரத்தின் முக்கியத் துறையாகிய தொழிற்துறையில் தெட்டத் தெளிவாகத் தென்படுகின்றன. உழைப்பின் உற்பத்தித் திறனின் அதிகரிப்பில் சராசரி ஆண்டு வேகங்கள் ஐந்தாண்டின் முதல் பாதியுடன் ஒப்பிடுகையில் 1983—1985இல் 1.5 மடங்கு கூடின. ஊதியத்துடன் ஒப்பிடுகையில் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாகக் கூடியது. உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்கு குறைந்தது, அடக்கவிலை குறைவது 4 மடங்கு துரிதப்படுத்தப்பட்டது.

ஆனால் நீண்ட காலமாக நிறைய குறைகள் சேர்ந்திருந்ததால் குறுகிய காலகட்டத்தில் இவற்றைக் களைய முடியவில்லை.

தனிப்பட்ட சில நடவடிக்கைகளால் தீய போக்குகளைக் களைந்து பொருளாதாரத்தை உறுதியான, சீரிசைவான வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல முடியவில்லை. அடிப்படை மாற்றங்கள், ஆழ்ந்த மறு சீரமைப்பு தேவைப்பட்டது; நாட்டின் முன் நிற்கும் கடமைகளைத் தீர்க்கும் அடிப்படை வழிகளை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி அயரா முயற்சியுடன் தேடியது.

பொருளாதாரத்திலும் சமூக நலத் துறையிலும் தோன்றிய தீய போக்குகள், அரசியல் கொள்கையிலும் நடைமுறை நடவடிக்கையிலும் விடப்பட்ட குறைகள் ஆகியவற்றின் தன்மை, காரணங்கள் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரசிற்கு கட்சியின் மத்திய கமிட்டி சமர்ப்பித்த அரசியல் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டன. பின்தங்கலுக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்த பொழுது, ஆள்பலத்தை அணி திரட்டுவது, நிர்வாகத்தின் செயல்வன்மை, உழைப்புக் கட்டுப்பாடு, உழைப்பின் பாலான அணுகுமுறை ஆகியவற்றுடன் தொடர்புடைய அகவயக் காரணிகளின் மீது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

பல ஆண்டுகளாக புறவயக் காரணங்களாலும், குறிப்பாக அகவயக் காரணங்களாலும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதை விட அதிகமான வேகத்தில் முளைத்துக் கொண்டிருந்தன, சமுதாயத்தில் தேக்கப் போக்கு

கள் தோன்றலாயின. பொருளாதார நிலவரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் உரிய நேரத்தில், உரிய விதத்தில் மதிப்பிடப்படாததும் வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் ஆழ்ந்த மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் கவனத்தில் கொள்ளப் படாததும், முடிவுகளை செயல்படுத்துவதில் உரிய உறுதி வெளிப்படுத்தப்படாததும் இவற்றிற்குக் காரணங்களாகும். இது சோஷலிச அமைப்பின் வாய்ப்புகளையும் மேம்பாடுகளையும் முழுமையாகப் பயன் படுத்தத் தடையாக இருந்தது, முன்னோக்கிய இயக்கத்தைத் தடுத்தது.

இது தவிர மையத்திலும் உள்ளூர்களிலும் பல தலைவர்கள் காலங்கடந்த முறைகளைப் பின்பற்றினர், புதிய சூழ்நிலையில் இயங்கத் தயாரற்றவர்களாயிருந்தனர். அனுமதிக்க இயலாதபடி கட்டுப்பாடு தளர்ந்தது, பொறுப்புணர்வும் கண்டிப்பும் குறைந்தன. திட்டங்களில் மாற்றங்களைச் செய்யும் பழக்கம் எங்கும் பரவிய ஒரு குறையாகியது. இந்த ஆண்டுகளில் அடிக்கடி கணிசமான அளவு துறைகளும் தொழில் நிறுவனங்களும் திட்டங்களை நிறைவேற்றவில்லை. இப்புலப்பாடுகள் உரிய வகையில் மதிப்பிடப்படவில்லை, உரிய நடைமுறை முடிவுகள் எடுக்கப்படவில்லை.

சமீபகாலம் வரை நிர்வாக முறையை மேம்படுத்தும் உடனடி அவசியம் பெரும்பாலும் போதிய அளவு உணரப்படவில்லை.

இப்பணி மெதுவாகவும் அரை குறையாகவும் நடந்தது, பழைய, பெரும்பாலும் நிர்வாக முறைகளையே அடிக்கடி நாடினார்கள். ஸ்தாபன கட்டமைப்புகள் மெதுவாக மேம்படுத்தப்பட்டன. பழைய முறைகள், ஸ்தாபன வடிவங்களின் உதவியால் உற்பத்தியை சர்வாம்ச ரீதியாக தீவிரப் படுத்தும் பாதைக்குத் திருப்புவது இயலாது என்பதை ஐந்தாண்டின் முடிவுகள் இன்னுமொரு முறை ஊர்ஜிதப்படுத்தின.

பொருளாதாரம் சடத்துவத்தால் கணிசமான அளவு இடப்பரப்பு அடிப்படையில் தொடர்ந்து வளர்ந்தது, கூடுதல் ஆள்பலத்தையும் மூலப்பொருட்களையும் உற்பத்தியில் ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. தேசியப் பொருளாதாரத்தை தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்ற வேண்டும், விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்ற சாதனைகளை தீவிரமாகப் பயன் படுத்த வேண்டும் என்ற அறைகூவல்களும் பேச்சுகளும் ஒலித்த போதிலும் நிலவரம் மெதுவாகத்தான் மேம்பட்டது. புதிய தொழில் நிறுவனங்களைக் கட்டுவதால் இதைத் திருத்தும் முயற்சிகள் சமன்பாட்டுப் பிரச்சினையை கடுமையாக்கின. பிரம்மாண்டமான மூல ஊற்றுகளைக் கொண்ட தேசியப் பொருளாதாரத்திற்கு இவற்றின் பற்றாக்குறை ஏற்பட்டது. சமூகத் தேவைகளுக்கும் உற்பத்தி மட்டத்திற்கும் மக்களிடம் புழக்கத்தில் உள்ள பணத்

திற்கும் விற்பனையில் உள்ள பண்டங்களுக் கும் இடையில் பிளவு தோன்றியது.

தேசியப் பொருளாதாரத்தில் சாராம்சத் தில் ஒரு திருப்புமுனை நிலவரம் ஏற்பட் டது. சமூக-பொருளாதார வளர்ச்சியில் தோன்றிய தீயப் போக்குகளை கூடிய விரைவாக அகற்றுவது, இதற்கு அவசிய மான சீரிசைவையும் வேகத்தையும் அளிப் பது, எதிர்காலத்தில் முடிவுகள் மிகவும் துல்லியமானவையாகவும், திட்டவட்ட மான நடவடிக்கைகள் செயல்முனைப்பான வையாகவும் பயனுள்ளவையாகவும் இருக்க கடந்த காலத்திலிருந்து படிப்பினைகளைப் பெறுவது ஆகிய கடமைகள் நாட்டின் முன் நின்றன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் ஏப்ரல் (1985) மாத முழுப் பேரவை கூட்டம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பாதையை சுட்டிக்காட் டியது. சோஷலிச நிர்வாகப் பாணியை எல்லா இடங்களிலும் நிலைநாட்ட வேண்டு மென இதில் கூறப்பட்டிருந்தது. இது அர சியல் மற்றும் நிர்வாகத் தலைமையின் ஒற் றுமை, உயர்வான ஸ்தாபன அமைப்பு, கட்டுப்பாடு, அளிக்கப்பட்ட கடமைக்குத் தனிப்பட்ட பொறுப்பு, மக்கள் திரளினரின் ஆக்கபூர்வமான முன்மொழிவை வளர்த்தல் ஆகிய லெனினியக் கோட்பாடுகளின் அடிப் படையிலானது.

கடந்த ஐந்தாண்டின் இறுதி ஆண்டில்

கம்யூனிஸ்டுக் கட்சியின் தத்துவார்த்த, நடைமுறை நடவடிக்கை முழுவதும் சோவியத் பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சியின் அடிப்படை அம்சங்களை வகுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டத்தின் புதிய பதிப்பு, ''1968—1990ஆம் ஆண்டுகள் மற்றும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சோவியத் யூனியனின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசைகள்'' ஆகியவற்றின் தயாரிப்பு மேற்கூறிய நடவடிக்கையின் மையமாக விளங்கியது. இந்த ஆவணங்களின் நகல்கள் 1985 அக்டோபரில் பொது மக்களின் விவாதத்திற்காக வைக்கப்பட்டன. கட்சியின் மத்திய கமிட்டி தீட்டிய புதிய கருத்துநிலைகளும் அணுகுமுறைகளும் மேற்கூறிய ஆவணங்களில் சேர்க்கப்பட்டன; அவை சோவியத் யூனியனின் சமூக-பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்தல் என்னும் கருத்தமைப்பில் மிகப் பொதுவான வடிவத்தில் இடம் பெற்றுள்ளன.

கட்சியின் 11வது காங்கிரசை துவக்கும் பொழுது—இதுதான் வி.இ. லெனின் கலந்து கொண்ட கடைசி காங்கிரசாகும்—வி.இ. லெனின் பரிபூரணமாகப் பகுப்பாய்வு செய்யுமாறும் யதார்த்தமான முடிவுகளுக்கு வருமாறும் அறைகூவல் விடுத்தார்: ''நாம் செய்ததை உரிய நிதானத்துடன் மதிப்

பிட்டு, யதார்த்தத்தை—இது எப்போதும் இனியதாக இருக்குமென்று கூற முடியாது, ஏன் சில சமயங்களில் இது முற்றிலும் கசப்பானதாகவும் இருக்கும்—நேருக்கு நேர் பார்க்க அஞ்சாமலிருந்தால், இன்று நம் முன் தம் முழு வடிவில் தோன்றும் எல்லா இடர்ப்பாடுகளையும் அகற்றி வெற்றி அடைவோம் என்பதில் சந்தேகமேயில்லை''*. இத்தகைய விமர்சன ரீதியான, ஆக்கபூர்வமான மனநிலையில்தான் 27வது கட்சி காங்கிரசில் பொருளாதாரக் கொள்கையின் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன.

சமீப ஐந்தாண்டு திட்ட காலங்களில் சோவியத் யூனியனின் வளர்ச்சி, இதிலிருந்து தீவிர படிப்பினைகளைப் பெற வேண்டிய தன் அவசியத்தைக் காட்டியது. இவற்றில் முதல் படிப்பினையை கட்சி மத்திய கமிட்டியின் அரசியல் அறிக்கை உண்மையைப் பற்றிய படிப்பினை என்று சுட்டிக்காட்டியது; தேசியப் பொருளாதாரத்தில் தோன்றிய தீய போக்குகளைக் குறித்த ஒளிவுமறைவற்ற, கோட்பாட்டு வழிப்பட்ட பேச்சு தான் அது. கடந்து வந்த பாதையைப் பற்றிய பொறுப்புணர்வு மிக்க பகுப்பாய்வு எதிர்காலத்திற்கான பாதையை சுட்டிக் காட்டுகிறது, கடினமான அம்சங்களை வெட்கங்கெட்ட வகையில் தவிர்க்கும் அரைகுறை

---

* V. I. Lenin, "Eleventh Congress of the R.C.P. (B.)", *Collected Works*, vol. 33, 1976, p. 261.

உண்மையோ யதார்த்த கொள்கையை உருவாக்குவதைத் தாமதப்படுத்துகிறது, முன்னோக்கிய இயக்கத்திற்குத் தடையாக நிற்கிறது.

இன்னொரு படிப்பினை நடைமுறை நடவடிக்கைகளில் செயல்முனைப்பும் உறுதியும் வேண்டும் என்கிறது. சோவியத் பொருளாதாரத்தைப் போன்ற ஒரு பெரும் பொருளாதாரத்தை தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவது என்பது கடினமான காரியம், இதற்கு பெரும் முயற்சியும், நேரமும், மிகப்பெரும் பொறுப்பும் தேவை. மாற்றங்களைத் துவக்கியதும், அரைகுறை நடவடிக்கைகளுடன் நின்று விடக் கூடாது, தொடர்ச்சியாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்க வேண்டும், மிகத் துணிவான நடவடிக்கைகளை மேற்கொள்ள அஞ்சக் கூடாது என்று கட்சியின் 27வது காங்கிரசில் கோடிட்டுக் காட்டப்பட்டது.

மி. செ. கர்பச்சோவ் குறிப்பிட்டபடி, கட்சி உருவாக்கிய கொள்கையை நிறைவேற்றுவதில் மக்கள் திரளினரின் தீவிரமான, உணர்வு பூர்வமான பங்கேற்பின் தீர்மானகரமான பங்கை எல்லோரும் உணருவதுதான் முக்கியப் படிப்பினையாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட பாதை சரியானது என்று பரவலான மக்கள் திரளினரை நம்ப வைப்பது, இதில் இவர்கள் பொருளாயத ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் அக்கறை கொள்ளச் செய்தல், ஊழியர்களின் மன

நிலையை மாற்றியமைத்தல்—இதுதான் வளர்ச்சியைத் துரிதப்படுத்த அவசியமான முக்கிய நிபந்தனையாகும்.

பொருளாதார வளர்ச்சியில் தோன்றிய தீய போக்குகளை உறுதியோடு களைந்தெறிதல், இதற்கு உரிய சீரிசைவை வழங்குதல், மக்கள் திரளினரின் முன்முயற்சிக்கும் படைப்பாற்றலுக்கும் வாய்ப்பேற்படுத்துதல், உண்மையான புரட்சிகர மாற்றங்களுக்கு பாதையமைத்தல்—இவைதான் உடனடிக் கடமைகளாகும்.

## 2. உற்பத்தியை தீவிரப்படுத்துவதை நோக்கிய திருப்புமுனை

சோவியத் சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் குணாம்ச ரீதியாக மாற்றியமைப்பதுதான் சோவியத் யூனியனின் சமூக-பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் நீண்ட கால கொள்கையின் நோக்கமாகும்.

கம்யூனிஸ்டுக் கட்சி தனது பொருளாதார, சமூகக் கொள்கையையும், ஸ்தாபன அமைப்பு மற்றும் சித்தாந்தப் பணியின் கடமைகளையும் எப்போதும் எதிர்காலக் குறிக்கோள்களுடன் இணைக்கிறது.சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பு முழு கம்யூனிசத்தின் அம்சங்களை விரிவாக முன்னறிவிக்கவில்லை. இதைப் பற்றிய விஞ்ஞான கருத்துகள் கம்யூனிசத்தின் உயர் கட்டத்தை நோக்கி முன்னேறும் பொழுது, கம்யூனிசக் கட்டுமான அனுபவம் சேரும் பொழுது செழுமையடையும், திட்டவட்டமாகும். அதே நேரத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் கூடாது, புதிய கடமைகளை நிறைவேற்றத் தயங்கக் கூடாது என்று சுட்டிக்காட்டுகிறது.

பொருளாதாரக் கொள்கை சம்பந்தமாக

ஏற்கெனவே உருவாக்கப்பட்ட கருத்து நிலைகளை வளர்த்து செழுமைப்படுத்திய சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி, தேசியப் பொருளாதாரம் பொருளாதார வளர்ச் சியின் குணாம்ச காரணிகளைப் பயன்படுத்து மாறு மாற்றியமைக்கும் கடமையை பொரு ளாதாரக் கட்டுமானத் தலைமையில் தன் மையக் கடமையாக முன்வைத்தது. உற் பத்தியை தீவிரப்படுத்துவதை நோக்கிய திருப்புமுனை பொருளாதாரக் கொள்கை யின் மற்ற நீண்ட கால லட்சியங்களை அடைய பிரதான, தீர்மானகரமான மூல ஊற்றாகும். இந்த லட்சியங்களிலேயே உயரிய லட்சியம் சோவியத் மக்களின் பொருளாயத, கலாசார வாழ்க்கைத் தரத்தை இடையறாது உயர்த்துவதாகும்.

துரிதப்படுத்தலின் நீண்ட கால நோக்கம் தேசியப் பொருளாதார வளர்ச்சி வேகங் களை அதிகப்படுத்துவதில்—இது முக்கிய மானது என்றாலும்—மட்டும் அடங்கியிருக் கவில்லை. இந்த வேகங்களை குணாம்ச ரீதியாகப் புதிய அடிப்படையில் அதிகரிக்க வேண்டும். துரிதப்படுத்தலின் சாரம் புதிய பண்பு ரீதியான வளர்ச்சியில் அடங்கியுள் ளது. இதை விரிவாக எடுத்துரைத்த மி.செ. கர்பச்சோவ் பின்வரும் இதன் தன்மைகளை சுட்டிக்காட்டினார்: விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் உற் பத்தியை சகல விதங்களிலும் தீவிரப்படுத் துதல், விஞ்ஞான-தொழில்நுட்ப வளர்ச்சி

யின் முன்னணி எல்லைகளை அடைதல், பொருளாதாரத்தின் கட்டமைப்பை மாற்றியமைத்தல், நிர்வாகம், உழைப்பு ஒழுங்கமைப்பு, உழைப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றின் பயன்மிகு வடிவங்களைப் பயன்படுத்துதல் முதலியவை இத்தன்மைகளாகும்.

இக்காரணியின் செயற்பாடு அதிகரிக்கும். தேசிய வருமானத்தின் ஆண்டு சராசரி அதிகரிப்பு வேகங்கள் 11வது ஐந்தாண்டில் 3.1% இருந்தது, 14வது ஐந்தாண்டில் 5% வரை, அதாவது 1.6 மடங்கு கூடும். இது பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் மக்களின் தேவைகளை மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கும் சோவியத் யூனியனின் பாதுகாப்புத் திறனை வலிமைபடுத்துவதற்கும் தேவையான மூலாதாரங்களின் முழுமுதல் அதிகரிப்பைக் கூட்ட உதவும்.

வளர்ந்து, மாறி வரும் சமுதாயத் தேவைகளுக்கு முழுமையாக ஏற்ற, அதிக சீரிசைவான உற்பத்திக் கட்டமைவை உருவாக்க வேண்டும்; இதைப் பொருளாதாரத்தை துரிதப்படுத்தும் போக்கில் செய்ய வேண்டும். அதாவது, ஒவ்வொரு அளவுக் குறியீட்டிற்குப் பின்னும் உயர்வான நுகர்வுத் தன்மைகளை உடைய, தேசியப் பொருளாதாரத்திற்கும் மக்களுக்கும் ஏற்ற புதிய, அதிக பயன்தன்மையுள்ள பொருள் இருக்க வேண்டுமென்று இதற்குப் பொருள்.

அதே நேரத்தில் திட்டமிடல், நிர்வாகப் பாணி ஆகியவை மேம்படுத்தப்படுவதுடனும், உற்பத்தி வளர்ச்சியின் புதிய பாதைகள், முறைகளின் தேட்டத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு பொருளாதார உள்ளாற்றல் வளர வேண்டும்.

துரிதப்படுத்தும் கொள்கையானது பொருளாதாரத் துறையில் மாற்றங்களைச் செய்வதுடன் நின்றுவிடவில்லை. இது தீவிர சமூகக் கொள்கையை கடைபிடிப்பதையும், சோஷலிச நீதிக் கோட்பாட்டை தொடர்ச்சியாக ஊர்ஜிதப்படுத்துவதையும் முன்னனுமானிக்கிறது. சமூக உறவுகளின் வளர்ச்சி, அரசியல், சித்தாந்த நிறுவனங்கள் இயங்கும் முறைகளையும் வடிவங்களையும் புதுப்பித்தல், சோஷலிச ஜனநாயகத்தை ஆழப்படுத்துதல், சடத்துவம், தேக்கம், பழமை ஆகியவற்றை, சமூக முன்னேற்றத்தை தடுக்கும் எல்லாவற்றையும் உறுதியோடு அகற்றுதல்—இவையெல்லாம் துரிதப்படுத்தும் கொள்கையில் அடங்கும்.

## எதிர்காலத் திட்டங்கள்

சோவியத் பொருளாதாரத்தின் செயல் வன்மையை உயர்த்துவதில் வேலைத்திட்ட லட்சியங்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது முதலில் இவற்றின் சிறப்பியல்புகளையும், இவற்றின் சாரத்தில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது

காங்கிரஸ் ஆவணங்கள் புதிதாக சேர்த்துள்ளவற்றையும் கூறுவோம். முதலில் இது இவற்றின் அளவும் விஞ்ஞானத் தன்மையுமாகும். உற்பத்தியை தீவிரப்படுத்தலின் நீண்ட காலக் கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன, 2000ஆம் ஆண்டு வரையில் வரும் ஆண்டுகளில் இவை திட்டவட்டமாக்கப்பட்டுள்ளன.

15 ஆண்டு கால எதிர்காலத் திட்டம் உறுதியான அடிப்படையைக் கொண்டது, பெரும் பிரச்சினைகளுக்கான விஞ்ஞான-தொழில்நுட்ப தீர்வுகள், கூட்டுச் செயல் திட்டங்கள் (உணவுப் பொருள் உற்பத்திச் செயல்திட்டம் மற்றும் எரிபொருள் உற்பத்திச் செயல்திட்டம், தேசியப் பொருளாதாரத்தை இரசாயனமயப்படுத்தல், இயந்திரக் கட்டுமானத்தை மேம்படுத்தல், மக்கள் பயன்படுத்தும் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியையும் சேவை வசதிகளையும் வளர்த்தல்) ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டது.

நீண்ட கால திட்டத்தின் முக்கிய அம்சம் உழைப்பின் உற்பத்தித் திறனில் உயர்வான உலக மட்டத்தை அடைவதாகும். அடுத்த மூன்று ஐந்தாண்டுகளில் இதை 2.3—2.5 மடங்கு உயர்த்தியாக வேண்டும். 90ஆம் ஆண்டுகளில் முதன் முதலாக உற்பத்தியின் வளர்ச்சி ஆள்பலக் குறைப்போடு நடைபெறும்.

இக்கட்டத்தில் இயற்கை வளங்கள்,

மூலப்பொருட்கள், எரிபொருள், சக்தி ஆகிய வற்றைப் பயன்படுத்துவது அடிப்படை ரீதியில் மேம்படுத்தப்பட வேண்டும். தேவைகளின் அதிகரிப்பில் 75—80% மூலா தாரங்களை சிக்கனப்படுத்துவதால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

தொழில்நுட்ப மட்டத்தையும் பொருட் களின் தரத்தையும் சகல விதங்களிலும் உயர்த்துவதன் மீது முக்கிய கவனம் செலுத் தப்படுகிறது. செலவுகளோடு ஒப்பிடுகை யில் பொருட்களின் உற்பத்தி அளவைப் பெருக்கும் அதே நேரத்தில் அவற்றின் தர உயர்விற்கு முக்கியத்துவம் தரப்படும். சோவியத் உற்பத்திப் பொருட்கள் நவீன விஞ்ஞான சாதனைகளை உள்ளடக்கியி ருக்க வேண்டும், உயர்வான தொழில்நுட்ப-பொருளாதார, மற்ற நுகர்வுத் தேவை களுக்கு ஏற்றவையாக இருக்க வேண்டும், உலகச் சந்தையில் போட்டியிடத் தக்கவையா யிருக்க வேண்டும்.

உற்பத்தியை தீவிரப்படுத்தலின் உயர் வான கடமைகள் புதிய இயந்திரங்களின் உற்பத்தியை அதிகரிப்பதுடன் மட்டும் தொடர்புடையவையல்ல; இவை ஏற்கெனவே உள்ள அடிப்படை உற்பத்தி சாதனங் களைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவது டனும், ஒவ்வொரு உபகரணம், ஒவ்வொரு மீட்டர் உற்பத்திப் பரப்பிலிருந்தும் பொரு ளுற்பத்தியைப் பெருக்குவதுடனும் தொடர் புடையவை. உற்பத்தி அளவு அதிகரிப்பில்

பெரும் பகுதியை இப்போதுள்ள தொழில் நிறுவனங்களிலேயே பெற வேண்டும். இதற்கு இவற்றை தொழில்நுட்ப ரீதியில் மாற்றியமைக்கும் பணி விரிவுபடுத்தப்பட்டு, துரிதப்படுத்தப்படுகிறது. உற்பத்தியை தீவிரமாகப் பெருக்கி, தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தும் பொழுது அது அடிப்படை உற்பத்தி சாதனங்களின் செயல்வன்மையை உயர்த்த பெரிதும் கோருகிறது.

உற்பத்தியை தீவிரப்படுத்தலின் இன்னொரு சிறப்பு அம்சம், இதில் இப்போது முன்னை விட அதிகமாக பொருளாதாரக் கொள்கை பெரும் பங்காற்றுகிறது என்பதாகும். செயல்வன்மையை அதிகரிக்கும் முக்கிய உந்துகோல் என்ற வகையில் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தல், சமூக உற்பத்தியின் கட்டமைப்பை மாற்றியமைத்தல், சோஷலிச உற்பத்தி உறவுகளையும், நிர்வாக முறைகளையும், பொருளாதார முறைகளையும் மேம்படுத்தல் ஆகியவை இதிலடங்கும்.

ஒரே விஞ்ஞான-தொழில்நுட்பக் கொள்கையைப் பின்பற்றுவது பற்றிய பிரச்சினைகள் எப்போதுமே பொருளாதார, சமூக வளர்ச்சித் திட்டங்களில் முக்கிய இடத்தை வகித்து வந்துள்ளன. முதலாவது ஐந்தாண்டிலிருந்தே இவற்றில் புதிய இயந்திரங்களை உற்பத்தி செய்யத் துவங்கவும், புதிதாகக் கட்டப்படும் மற்றும் பழைய தொழில் நிறுவனங்களில் இவற்றை நிறுவவும், உற்பத்தி

யின் துறை ரீதியான கட்டமைப்பையும் உற்பத்தி சக்திகளை பகிர்ந்தளிப்பதையும் மேம்படுத்தவும், உதாரணமாக, சோவியத் யூனியனின் கிழக்குப் பிரதேசங்களின் இயற்கை வள மீட்பை துரிதப்படுத்தவும், விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் ஊழியர் பயிற்சியையும் வளர்க்கவும் திட்டமிடப்பட்டது. பிந்தைய ஐந்தாண்டுகளில் இப்பணி தொடர்ந்தது. ஆனால் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டபடி இதில் பெரும் குறைகளும் தவறுகளும் விடப்பட்டு உள்ளன.

விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் வேகங்கள் போதுமான அளவு அதிகமானவையாக இல்லாததற்கு முக்கியக் காரணம் திட்டமிடுதலிலும், துறைகளின் வளர்ச்சி வாய்ப்புகளை நிர்ணயிப்பதிலும் விடப்பட்ட தவறுகளாகும். உதாரணமாக, இது பின்வருபவற்றில் வெளிப்பட்டது: நவீன தொழில்நுட்ப சாதனைகளின் அடிப்படையில் இரும்பு உலோகத் தொழிற்துறை மற்றும் கட்டுமானத்தில் புதிய இயந்திரங்களை மாற்றியமைப்பது தாமதப்பட்டது, விவசாய இயந்திரக் கட்டுமானம் பின்தங்கியது.

பல துறைகளில் விஞ்ஞான-தொழில்நுட்பக் கொள்கை சராசரி தொழில்நுட்ப மட்டத்தை ஆதாரமாகக் கொண்டிருந்ததும், இருந்த முடிவுகளையே திரும்பவும் செயல்படுத்தியதும் தவறானவையாக இருந்தன. புதிய தொழில் நிறுவனங்களைக் கட்டத்

திட்டமிட்ட பொழுது, பல நேரங்களில் இங்கு பழைய இயந்திரங்கள் வைக்கப்பட்டன, இவை நீண்ட கட்டுமான காலகட்டத்தில் தொழில்நுட்ப ரீதியாகப் பழையவையாயின. நவீன உலக சாதனைகளைப் பற்றிய முறையியல் பகுப்பாய்வு இருக்கவில்லை. புதிய தொழில்நுட்பம் புகுத்தப்பட்ட பொழுது உயர்வான தர மட்டத்தையும், நம்பகரத் தன்மையையும் ஏற்படுத்த வேண்டுமென்பது கிட்டத்தட்ட கவனத்தில் கொள்ளப்படவில்லை. தொழில்நுட்பம் மதிப்பிடப்பட்ட பொழுது, பல சமயங்களில் மிக நவீன அயல்நாட்டுத் தொழில்நுட்பம் அடிப்படையாக கொள்ளப்படவில்லை. இவ்வாறாக தொழில்நுட்ப ரீதியில் பின்தங்கிய நிலை விரிவடைந்தது.

முதலாளித்துவ நாடுகளிடம் நவீன இயந்திரங்கள், தொழில்நுட்பத்தை வாங்கும் வாய்ப்புகளுக்கு அளவிற்கதிகமான முக்கியத்துவமளித்தது பெரும் தவறாக இருந்தது. 70ஆம் ஆண்டுகளில் பதற்றத் தணிவின் விளைவாய், இந்நாடுகளுடன் வர்த்தகம் கணிசமான அளவு விரிவடைந்தது, பல நீண்ட கால உடன்படிக்கைகள் இவற்றுடன் செய்து கொள்ளப்பட்டன.

சர்வதேச உழைப்புப் பிரிவினையின் மேம்பாடுகளைப் பயன்படுத்துவது உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்தும் முக்கிய சாதனமாக எப்போதும் இருந்தது, இப்போதும் இருந்து வருகிறது. சோவியத்

யூனியன் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த வெளிப் பொருளாதாரத் தொடர்புகளை தொடர்ந்து பயன்படுத்தும். எனவே உலகச் சந்தையில் புதிய இயந்திரங்களை வாங்குவதைக் கைவிடும் பேச்சிற்கே இடமில்லை. ஒரு சில அமைச்சகங்களும் இலாக்காக்களும் தேவையான இயந்திரங்களை உருவாக்கி, உற்பத்தி செய்வதை விட்டு விட்டு, இவற்றை முதலாளித்துவ நாடுகளிலிருந்து வாங்கி வந்த நடைமுறையை—இது நியாயப்படுத்தப்படவில்லை—கைவிடுவதைப் பற்றித்தான் இங்கு குறிப்பிடப்படுகிறது. நாமே உற்பத்தி செய்வதை விட முதலாளித்துவ சந்தையில் வாங்குவது எளிது என்ற கருத்து தீங்கை ஏற்படுத்தியது.

ஒரு சில பொருளாதாரத் துறை தலைவர்களின் இப்படிப்பட்ட கொள்கைப் போக்கால் தேசியப் பொருளாதாரத்திற்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. ஒரு சில துறைகளில் உயர் உற்பத்தித் திறனுள்ள நவீன இயந்திரங்கள், தொழில்நுட்பத்தை உருவாக்கி, இவற்றின் உற்பத்தியை ஒழுங்கமைப்பது சம்பந்தமாக இருந்த பாரம்பரியங்கள் மறைந்தன. பிறரைப் பார்த்து செய்வது, உள்ளவற்றை மேம்படுத்தாமல் அந்த அளவிலேயே நின்று விடுவது என்ற தீய போக்கு உருவாயிற்று. ஒரு சில விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் தொழிற்துறை தேவையற்று முதலாளித்துவ கம்பெனிகளைச்

சார்ந்திருந்தது; எனவே சொந்த இயந்திரங்கள், உபகரணங்களின் உற்பத்தியை ஒழுங்கமைக்க விசேஷ நடவடிக்கைகள் தேவைப்பட்டன.

முதலாளித்துவ நாடுகள் உண்மையிலேயே தலைசிறந்த இயந்திரங்களைத்தான் சோவியத் யூனியனுக்கு எப்போதுமே விற்கின்றன என்று கூற முடியாது என்பது தெரிந்ததே. ஏதோ இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் என்ற மாயையான காரணத்தைக் கூறி அமெரிக்க ஐக்கிய நாடும் மற்ற முதலாளித்துவ நாடுகளும் பொது தொழிற்துறைப் பொருட்கள் பலவற்றை சோவியத் யூனியனுக்கு அனுப்பக்கூடாதென தடை விதிக்கின்றன.

சோவியத் வெளிப் பொருளாதார ஸ்தாபனங்கள் போதுமான அளவு செயல்வன்மையற்ற இயந்திரங்களை முதலாளித்துவ கம்பெனிகளிடம் அடிக்கடி வாங்குகின்றன, இவற்றைப்போன்ற, ஏன் இவற்றைவிட சிறந்த இயந்திரங்கள், உபகரணங்களை சோவியத் நாட்டிலேயே தயாரிக்க முடியும் என்பதை ஏனோ இவை கவனத்தில் கொள்ளவில்லை. எல்லா சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு வாங்கும் இயந்திரங்களுக்குத் தேவையான எல்லாம் அளிக்கப்படவில்லை.

விஞ்ஞானத்திற்கும் உற்பத்திக்கும் இடையில் உருவாகிய ஸ்தாபன மற்றும் பொருளாதாரப் பிளவு ஒரே விஞ்ஞான-தொழில் நுட்பக் கொள்கையைப் பின்பற்றுவதன் மீது

தீய தாக்கம் செலுத்தியது. பல விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களும் திட்ட-வடிவமைப்பு ஸ்தாபனங்களும் — இக்காலகட்டத்தில் இவற்றின் எண்ணிக்கை விரிவடைந்தது— குறைவான பயனைத்தான் தந்தன. இவற்றின் ஆராய்ச்சி முடிவுகளும் கண்டுபிடிப்புகளும் பல நேரங்களில் உலக மட்டத்திற்கு ஏற்றவையாக இருக்கவில்லை, முடிவு செய்தவற்றை உற்பத்தித் துறைக்கு அனுப்பும் முறை சரிவர ஒழுங்கமைக்கப்படவில்லை. தொழில் நிறுவனங்களும் கூட்டமைப்புகளும் தம் பங்கிற்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மீது அக்கறை செலுத்தவில்லை, பழைய தொழில்நுட்ப அடிப்படையிலேயே தொடர்ந்து இயங்கவே விரும்பின. இதனால் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கி, புகுத்தும் காலகட்டம் அதிகரித்தது, அடிப்படை உற்பத்தி சாதனங்கள் பழையவையாகத் தொடங்கின, இவற்றின் செயல்வன்மை குறைந்தது.

எனவே நீண்ட கால நோக்கில் மிக முக்கியமான திசையில் முன்னேற விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடியோடு துரிதப்படுத்தும் கடமை முன்வைக்கப்பட்டது. இக்கருத்துநிலை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் கட்சியின் நீண்ட கால நவீன பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, இது உற்பத்தியை தீவிரப்படுத்தலின் முக்கியக் காரணி

யாக சுட்டிக்காட்டப்படுகிறது. முந்தைய பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளத்தில் அடிப்படை மாற்றங்களை நிறைவேற்றுவது இயலாதது. இத்தகைய மாற்றங்களின் நிறைவேற்றத்தை கட்சி நவீன விஞ்ஞான-தொழில்நுட்ப சாதனைகளின் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தை ஆழமாக மாற்றியமைப்பதுடன் தொடர்புபடுத்துகிறது. வேலைத்திட்டத்தின் தனி அத்தியாயத்தில் இந்தத் துரிதப்படுத்தலுக்கு ஏற்ற தொழில்நுட்பக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உற்பத்தி உள்ளாற்றலை விரைவாகப் புதுப்பிக்க, மிக நவீன தொழில்நுட்ப போக்குகளையும் நெளிவு சுழிவான உற்பத்தி முறையையும் புகுத்தத் திட்டமிடப்படுகிறது; இவை புதிய பொருட்களின் உற்பத்திக்கு உடனுக்குடன் மாற உதவும், அதிகபட்ச பொருளாதார, சமூகப் பயன்களைத் தரும். புதிய தொழில்நுட்பத்தின் பொருளாதார வாய்ப்புகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு: நெளிவு சுழிவான உற்பத்தி முறையில் ஒரு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்ய தனித்தனியாக இயங்கும் கடைசல் இயந்திரங்களை விட இரு மடங்கு குறைந்த அளவு இயந்திரங்களே போதும். இதனால் பொருட்களின் அடக்கவிலை 3—5 மடங்கு குறையும், உழைப்பின் உற்

பத்தித் திறனோ 2 மடங்கு அதிகரிக்கும். இத்தகைய முறைகளின் முக்கிய மேம்பாடு புதிய பொருட்களின் உற்பத்திக்கு விரைவாக மாற இவற்றிற்குள்ள திறமையாகும்.

உற்பத்தித் துறைகளிலும் உற்பத்தியோடு நேரடித் தொடர்பற்ற துறைகளிலும் கூட்டு இயந்திரமயப்படுத்தலை முடித்தாக வேண்டும், உடலுழைப்பைப் பயன்படுத்துவதைப் பெரிதும் குறைக்க வேண்டும். 2000 ஆண்டு வாக்கில் உற்பத்தித் துறையில் உடலுழைப்பு இரண்டு மடங்கிற்கும் மேலாகக் குறைக்கப்பட வேண்டும், 2 கோடிக்கும் மேற்பட்டோர் இத்தகைய உடலுழைப்பிலிருந்து விடுவிக்கப்படுவர். உற்பத்தியைத் தானியங்கிமயப்படுத்துவது வளர்ச்சியடையும், தானியங்கி பிரிவுகள், தொழில் நிறுவனங்கள், தானியங்கி நிர்வாக மற்றும் திட்டமிடல் அமைப்புகளை நோக்கிய மாற்றம் நடைபெறும். மின்சாரமயப்படுத்தல், இரசாயனமயப்படுத்தல், ராபட்டுகளை கொண்டு வருதல், உற்பத்தியை கம்ப்யூட்டர்மயப்படுத்தல் மேன்மேலும் பரவலாக நடைபெறும், உயிரியல் தொழில்நுட்பம் அதிகமாகப் பயன்படுத்தப்படும். விஞ்ஞானமானது தேசியப் பொருளாதாரத்தின் தேவைகளை நோக்கி தீவிரமாகத் திரும்பியதையடுத்து உற்பத்தியும் விஞ்ஞானத்தை நோக்கித் திரும்ப வேண்டும், இது விஞ்ஞான-தொழில்நுட்ப சாதனைகளை அதிகபட்சம் கிரகிக்கத் தக்கதாய்

இருக்க வேண்டும். இதன் பயனாய் விஞ்ஞானம் முழுமையாக நேரடியான உற்பத்தி சக்தியாக மாறும்.

கட்சியின் நீண்ட காலப் பொருளாதாரக் கொள்கையின் நிறைவேற்றத்தில் 12வது ஐந்தாண்டுத் திட்டம் ஒரு முக்கியமான கட்டமாகும். இது எல்லா அம்சங்களிலும் திருப்புமுனையாக அமைய வேண்டும். இதன் சிறப்பு அம்சம் என்னவெனில், புதிய விஞ்ஞான-தொழில் நுட்ப அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் அதே நேரத்தில் முன்னோக்கிய இயக்கத்தின் வேகங்களும் அதிகரிக்கப்படும் என்பதாகும். இத்துறையில் திட்டவட்டமான கடமைகள் 12வது ஐந்தாண்டு திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டம் மற்றும் ''1986—1990ஆம் ஆண்டுகள் மற்றும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சோவியத் யூனியனின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசைகள்'' ஆகியவற்றின் அடிப்படையில் தீட்டப்பட்டதாகும்.

சோவியத் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது, தேசியப் பொருளாதாரத்தின் எல்லா துறைகளின் சீரிசைவான வளர்ச்சியை அடைவது, நாட்டின் பாதுகாப்பு வல்லமையை உரிய மட்டத்தில் வைத்திருப்பது ஆகியவற்றுடன் தொடர்புடைய பரவலான கடமைகள் புதிய ஐந்தாண்டில் ஒரே

நேரத்தில் தீர்க்கப்படும். ''விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தை துரிதப்படுத்தல், உற்பத்தியில் தொழில்நுட்ப மாற்றங்களைச் செய்து, மறு சீரமைத்தல், ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்ட உற்பத்தி உள்ளாற்றலை தீவிரமாகப் பயன்படுத்தல், நிர்வாக முறையையும் அமைப்பையும் மேம்படுத்தல் ஆகியவற்றின் உதவியால் பொருளாதார வளர்ச்சி வேகங்களையும் செயல்வன்மையையும் உயர்த்துதல், இதன் அடிப்படையில் சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை இன்னமும் உயர்த்துதல் என்பதுதான் 12வது ஐந்தாண்டின் முக்கியக் கடமையாகும்.''*

புதிய ஐந்தாண்டு திட்டம் 1986 ஜூன் வாக்கில் தீட்டி முடிக்கப்பட்டது, இதன் நகல் சோவியத் நாடாளுமன்றத்தின் 11வது கூட்டத் தொடரின் ஐந்தாவது அமர்வால் ஆமோதிக்கப்பட்டது. முன்னரை விட குறுகிய காலத்தில் இத்திட்டம் தீட்டப்பட்டு அமைச்சகங்கள், இலாக்காக்கள், யூனியன் குடியரசுகளின் அமைச்சரவைகளுக்கு அனுப்பப்பட்டது. இதனால் பல்வேறு கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்கள், உழைப்புக் கூட்டுகள் ஆகியவை இத்திட்டத்தைப் பரிபூரணமாகப் பரிசீலித்து செயல்பட சிறப்பான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

கிட்டத்தட்ட எல்லா குறியீடுகளிலும்

---

* சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரசின் ஆவணங்கள், பக்கம் 277 (ருஷ்ய மொழியில்).

''முக்கியத் திசைகளின்'' கடமைகளில் அதிக பட்சத்தை அடையவும் தொழிற்துறையிலும் இன்னும் சில முக்கிய சமூகக் குறியீடுகளிலும் இதை விஞ்சவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நுகர்வு மற்றும் சேமிப்பிற்காகப் பயன் படுத்தப்படும் தேசிய வருமானத்தை 1990ஆம் ஆண்டு வாக்கில் 22.1% உயர்த்த (முந்தைய ஐந்தாண்டில் இது 16.5% தான் உயர்ந்தது) திட்டமிடப்பட்டுள்ளது. தொழிற்துறைப் பொருட்களின் உற்பத்தி 25% கூடும் (''முக்கியத் திசைகளின்'' படி இக்குறியீடு 21—24% ஆகும்); அதில் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி விஞ்சி வளரும். உற்பத்தி சாதனங்களின் உற்பத்தி 24%மும், நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 27% மும் கூடும் (''முக்கியத் திசைகளின்'' படி இந்த உயர் குறியீடுகள் முறையே 23%, 25% ஆகும்). தேசியப் பொருளாதாரத்தில் முதலீடுகளின் அளவும் கூடுதலாயிருக்கும்: 11வது ஐந்தாண்டுடன் ஒப்பிடுகையில் இவற்றின் அதிகரிப்பு 23.6% ஆக இருக்கும்; இது ''முக்கியத் திசைகளில்'' 18—22%ஆக இருந்தது.

விவசாயம், கட்டுமானம், போக்குவரத்து, வர்த்தகம் ஆகிய துறைகளிலும் மக்கள் நல்வாழ்வை நிர்ணயிக்கும் மற்ற குறியீடுகளிலும் வளர்ச்சி வேகங்களைத் துரிதப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. திட்டமிட்ட சமூக செயல்திட்டத்தை நிறைவேற்றினால்

அட்டவணை 2

## தேசியப் பொருளாதார வளர்ச்சியின் முக்கியக் குறியீடுகள் (அதிகரிப்பு % இல்)

| குறியீடுகள் | சராசரி | | | 1985ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் | |
|---|---|---|---|---|---|
| | 1981—1985 | 1986—1990 முக்கிய திசைகள் | 1986—1990 திட்டம் | 1986 திட்டம் | 1987 திட்டம் |
| நுகர்விற்கும் சேமிப்பிற்கும் பயன்படுத்தப்படும் தேசிய வருமானம் | 3.1 | 3.5—4.0 | 4.1 | 3.8 | 8.0 |
| தொழிற்துறை உற்பத்திப் பொருட்கள் | 3.7 | 3.9—4.4 | 4.6 | 4.3 | 8.9 |
| "A" பிரிவு | 3.7 | 3.7—4.2 | 4.5 | 4.3 | 8.8 |
| "B" பிரிவு | 3.8 | 4.1—4.6 | 4.9 | 4.4 | 9.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விவசாயத் துறையின் உற்பத்திப் பொருட்கள் (முந்தைய ஐந்தாண்டுடன் ஒப்பிடுகையில்) | 1.1 | 2.7—3.0 | 2.7 | 4.4 | 7.6 |
| முதலீடுகள் (முந்தைய ஐந்தாண்டுடன் ஒப்பிடுகையில்) | 3.7 | 3.4—4.1 | 4.9 | 7.6 | 4.6 |
| சில்லறை பண்டப் புழக்கம் | 4.0 | 3.4—5.8 | 5.9 | 5.9 | 12.2 |
| நபர் ஒருவருக்கான உண்மை வருமானங்கள் | 2.1 | 2.5—2.8 | 2.7 | 2.5 | 5.0 |

அதனால் ஐந்தாண்டில் நபர் ஒருவருக்கான உண்மை வருமானங்கள் 14% கூடும் (சென்ற ஐந்தாண்டில் இவை 11% தான் கூடின).

முக்கியப் பொருளாதாரக் குறியீடுகளின் முழுமுதல் அதிகரிப்புகளும் கூடும். உதாரணமாக 11வது ஐந்தாண்டில் 79 பில்லியன் ரூபிள்களாக இருந்த தேசிய வருமானம் 12வது ஐந்தாண்டில் 124 பில்லியன் ரூபிள்கள் வரை உயரும்; தொழிற்துறை உற்பத்திப் பொருட்கள் முறையே 133 பில்லியன் ரூபிள்களிலிருந்து 200 பில்லியன் ரூபிள்கள் வரையும், ஆண்டு சராசரி விவசாய உற்பத்திப் பொருட்கள் 10 பில்லியன் ரூபிள்களிலிருந்து 29 பில்லியன் ரூபிள்கள் வரையும் உயரும். நுகர்வுப் பொருட்கள் மற்றும் மக்கள் சேவை வசதிகளின் அதிகரிப்பும் பெரியவையாக இருக்கும்.

முந்தைய ஐந்தாண்டுகளின் பொழுது கடைசி ஆண்டுகளில் வளர்ச்சி வேகங்களைக் கூட்ட திட்டமிடப்பட்டது, இதனால் திட்ட நிறைவேற்றமே சந்தேகத்திற்குள்ளாக்கப் பட்டது. இந்தக் கடந்த கால அனுபவம் 12வது ஐந்தாண்டு திட்டத்தைத் தீட்டும் பொழுது கவனத்தில் கொள்ளப்பட்டது. புதிய ஐந்தாண்டு திட்டத்தில் இக்குறை அகற்றப்பட்டது. இதில் எல்லா முக்கியக் குறியீடுகளையும் ஒரே சீரான வேகத்தில் கூட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் முந்தைய ஐந்தாண்டில் தீட்டப்பட்டதை

விட 30 பில்லியன் ரூபிள்கள் கூடுதலாக தேசிய வருமானத்தை 12வது ஐந்தாண்டில் பெற முடியும்.

உற்பத்தி வளர்ச்சியின் வேகங்களையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் கணிசமாக உயர்த்த ஐந்தாண்டின் ஆரம்பத்திலிருந்தே திட்டமிடப்பட்டது. முக்கியக் குறியீடுகளைப் பொறுத்த மட்டில் 1986ஆம் ஆண்டின் வேகங்கள் 11வது ஐந்தாண்டின் சராசரி ஆண்டுக் குறியீடுகளை விஞ்சியுள்ளன, இது 1986—1990ஆம் ஆண்டுகளுக்குத் திட்டமிடப்பட்ட கடமைகளை நிறைவேற்ற உதவும், முதலாமாண்டு திட்டத்தின் முக்கிய கடமைகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டு விட்டன, இவற்றில் பல திட்டத்தை விட அதிகமாகவே நிறைவேற்றப்பட்டன.

1987ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி வேகங்கள் 1986ஆம் ஆண்டு திட்டத்திற்கேற்ப நிர்ணயிக்கப்பட்டுள்ளன; முன்னர் இவை இறுதியில் எவ்வளவு இருக்க வேண்டும் என்ற கணிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டன. இவ்வாறாக ஐந்தாண்டு திட்டம் என்பது உண்மையிலேயே திட்டமிடலின் முக்கிய வடிவமாகிறது, அடையப்பட்ட சாதனைகளின் அடிப்படையில் திட்டமிடுவதை கைவிடுவதை நோக்கி ஒரு முக்கிய அடி எடுத்து வைக்கப்படுகிறது.

தொழிற்துறைப் பொருட்களின் உற்பத்தியை 4.4% கூட்ட திட்டமிடப்பட்டுள்ளது;

நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 4.5% கூடும். தேசியப் பொருளாதாரத்தில் சகல வித முதலீடுகளும் 4.6% கூடும், சரக்குப் போக்குவரத்து 2.5% அதிகரிக்கும்.

உற்பத்தி வளர்ச்சியோடு சேர்ந்து ஐந்தாண்டின் சமூக செயல்திட்டத்தின் நிறைவேற்றமும் தொடரும். இரண்டாவது ஆண்டாக அரசு மற்றும் கூட்டுறவு வர்த்தகத்தின் சில்லறை விற்பனைக் கடப்பாடுகள் மதுபான விற்பனையைச் சேர்க்காமல் நிர்ணயிக்கப்படுகின்றன; குடிப்பழக்கத்திற்கு எதிரான போராட்டத்தின் பயனாய் மதுபான விற்பனை குறைந்து வருகிறது. இவற்றின் பின்னணியில் 1987இல் சரக்குப் புழக்கம் 5.9% அதிகரிக்கும், மக்களுக்கு அளிக்கப்படும் சேவை வசதிகள் 9.5% கூடும். மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் குறிக்கும் மற்ற குறியீடுகளும் உயரும். மொத்தமாகப் பார்த்தால், நபர் ஒருவருக்கான உண்மை வருமானங்கள் 2.6% உயரும் என்பதில் இவ் வளர்ச்சி வெளிப்படும்.

சமூக உற்பத்தியை தீவிரப்படுத்துவதில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த 12வது ஐந்தாண்டு திட்டம் முன்மொழிகிறது. சமூக உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்தும் கடப்பாடுகள் சாதாரணமாக ''முக்கியத் திசைகளின்'' உயர்மட்ட குறியீடுகளுக்கு நெருக்கமாயிருக்கும்படியும், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பைப் பொறுத்த மட்டில் அதே மட்டத்தில் இருக்கும்படியும்

நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பல ஐந்தாண்டு களில் முதன்முதலாக முதலீடுகளின் செயல் வன்மையை கணிசமாக உயர்த்த (16%) திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தி சாதனங் களின் மீள்வரவு குறையும் வேகம் இரு மடங்கிற்கும் மேலாக தடுத்து நிறுத்தப் படும்; இயந்திர கட்டுமானத்திலும் நுகர்வுப் பொருள் துறையிலும் இந்தப் பல் லாண்டு தீய போக்கு முழுமையாக அகற் றப்படும்.

வரவிருக்கும் ஆண்டுகளில் வேலையின் பயன்தன்மையை அதிகரிக்கும் பாதைகளும் முறைகளும் இவற்றின் எல்லா சிறப்பியல்பு களையும் கவனத்தில் கொண்டு, உதாரண மாக, இடப்பரப்பு காரணிகள் தீர்ந்து போனதை கவனத்தில் கொண்டு நிர்ணயிக் கப்பட்டுள்ளன. முக்கிய மூலாதாரங்களின் அதிகரிப்பைக் கணிசமாகக் குறைத்து இறுதிப் பயன்களைக் கூட்ட திட்டமிடப்பட் டுள்ளது.

முந்தைய ஐந்தாண்டுடன் ஒப்பிடும் பொழுது உற்பத்தித் துறையில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு வேகங்கள் புதிய ஐந்தாண்டில் 4.7% குறை யும், அடிப்படை உற்பத்தி நிதிகளின் அதி கரிப்பு வேகங்கள் கிட்டத்தட்ட 1.2 மடங்கு குறையும். உழைப்புப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பும் குறையும்.

வேலையின் தரக் குறியீடுகளை மேம் படுத்துவதன் மூலமும், விஞ்ஞான-தொழில்

நுட்ப, முதலீட்டு, கட்டமைப்புக் கொள்கையின் எல்லா அம்சங்களையும் தீவிரமாகப் பயன்படுத்துவதன் மூலமும் உற்பத்தியை தீவிரப்படுத்தல் துரிதப்படுத்தப்படுகிறது. இது முக்கியமாக, உற்பத்தியை விரைவாகப் புதுப்பிப்பதிலும் செயல்வன்மை குறைவான பழைய உபகரணங்களுக்குப் பதில் உயர் உற்பத்தித் திறனுள்ள நவீன உபகரணங்களை கொண்டு வருவதிலும் இது வெளிப்படும். நவீன தொழில்நுட்பம் மேன்மேலும் அதிகமாக வருவதானது தேசியப் பொருளாதாரத்தை தொழில்நுட்ப ரீதியில் விரைவாகப் புதுப்பிக்கத் தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்தும்.

உழைப்பின் உற்பத்தித் திறன் கூடுவது அதிகரிக்கும்; முதன்முதலாக இதனால் தேசிய வருமானத்தின் அதிகரிப்பு முழுவதும், தொழிற்துறை உற்பத்திப் பொருட்களில் திட்டமிடப்படும் அதிகரிப்பு முழுவதும், இருப்புப் பாதைப் போக்குவரத்தில் அதிகரிப்பு அளவு முழுவதும் கிட்டும். இத்தகைய அதிகரிப்பால் 1985ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1990இல் 22 மில்லியன் வேலை செய்பவர்களின் உழைப்பைச் சிக்கனப்படுத்த முடியும். ஐந்தாண்டில் ஆள் பல எண்ணிக்கையில் 3.2 மில்லியன் ஆட்கள் கூடுதலாவார்கள்; எனவே உழைப்பின் உற்பத்தித் திறன் 6.9 மடங்கு அதிகரித்ததால் உழைப்பு சிக்கனப்படுவதானது வேலை செய்பவர்களின் பொது எண்ணிக்கையில்

சாத்தியமான அதிகரிப்பை விஞ்சும். 12வது ஐந்தாண்டில் ஆள்பல அதிகரிப்பில் கிட்டத் தட்ட பெரும் பகுதியை கல்வி, மருத்து வம், மற்ற சமூக-கலாசாரத் துறைகளுக்கு அனுப்பும் வாய்ப்பு ஏற்படும். இது ஒரு பெரிய கட்டமைப்பு மாற்றமாகும். ஏனெ னில் முந்தைய ஐந்தாண்டில் ஆள்பல அதி கரிப்பு உற்பத்தித் துறைக்கும் உற்பத்தி யல்லா துறைக்கும் இடையில் கிட்டத்தட்ட சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

எல்லா துறைகளிலும் சிக்கனம் வலுப் படுத்தப்படுகிறது, உற்பத்திப் பொருட் களுக்கான மூலப்பொருள் செலவழிவு குறை வது துரிதப்படுத்தப்பட வேண்டும். 1986—1990இல் எரிபொருள், மூலப்பொருள், மற்ற பொருட்களின் மொத்த செலவை குறைப்பதன் மூலம் முக்கிய மூலாதாரங் களின் தேவைகள் அதிகரிப்பில் 65—70%க்கு வகை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தேசியப் பொருளாதார மூலாதாரங்களின் புழக்கத்தையும், புழக்க சாதனங்களின்சுழற் சித் தன்மையையும் துரிதப்படுத்துவது என் பது உற்பத்தியை தீவிரப்படுத்தலின் முக் கியக் கடமைகளில் ஒன்றாக முன்வைக்கப் படுகிறது. உயர் தரமுள்ள தொழிற்துறை உற்பத்திப் பொருட்களின் பங்கை புதிய ஐந்தாண்டில் சராசரியாக 2 மடங்கு உயர்த்த வேண்டும்.

**விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தை துரிதப்படுத்துவது** உற்பத்தியை தீவிரப்படுத்

தலின் முக்கிய அம்சமாகும். விஞ்ஞான-தொழில்நுட்ப சாதனைகளை உற்பத்தியில் பயன்படுத்துவதன் மூலம் சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பில் குறைந்த பட்சம் 2/3 பங்கை அடைய திட்டமிடப் பட்டுள்ளது. உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்தும் பணி, குறிப்பாக தொழிற்துறைக் கட்டுமானத்தின் சீரமைப்பு, விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் முக்கியத் திசைகளில் மூலாதாரங்களின் குவிப்பு (மின்னணுத் துறை, அணு எரிசக்தித் துறை, கூட்டுத் தானியங்கிமயமாக்கல், உற்பத்தி மற்றும் புதிய பொருட்களை பெறும் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றின் வளர்ச்சி) இவையெல்லாம் மேற்கூறியதை நோக்கமாகக் கொண்டவையாகும்.

இயந்திரக் கட்டுமானத்தை அடியோடு மாற்றியமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. ஐந்தாண்டில் இயந்திரக் கட்டுமானம், உலோகத் துறைப் பொருட்கள் 43% அதிகரிக்கும். புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கி புகுத்த ஆகும் காலம் 3—4 மடங்கு குறையும், இப்போது உற்பத்தி செய்யப்படும் இயந்திரங்களுடன் ஒப்பிடுகையில் புதிதாக உற்பத்தி செய்யப்படுபவற்றின் உற்பத்தித் திறனும் உறுதியும் குறைந்தபட்சம் 1.5—2 மடங்கு உயர்த்தப்படும், ஐந்தாண்டின் இறுதியில் முக்கிய புதிய உற்

பத்திப் பொருட்களில் 80—95% உலக தரத்திற்கு ஏற்றதாயிருக்க வேண்டும்.

உழைப்பின் உற்பத்தித் திறனை 10 மடங்கு வரை உயர்த்தக் கூடிய ரோட்டர், ரோட்டர்-கன்வேயர் முறைகள் பரவலாகப் பயன்படுத்தப்படும். ஐந்தாண்டில் சுமார் 2,000 ராபட் தொழில்நுட்ப இணையங்கள், அதே அளவு நெளிவு சுழிவான தானியங்கி முறைகள், பல்லாயிரம் நவீன கணிப்பொறி இயந்திரங்கள், மற்ற நவீன உபகரணங்கள் ஆகியவற்றைப் புகுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

''முக்கியத் திசைகளுக்கு'' ஏற்றபடி நடப்பு ஐந்தாண்டில் நவீன அடிப்படைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது 1.5—2 மடங்கு கூடும், உற்பத்தியைத் தானியங்கிமயப்படுத்துவது 2 மடங்கு அதிகரிக்கும். சுயமாகப் பரவும் உயர்வெப்ப கூட்டிணைப்பு முறையில் பொருட்களைப் பெறுதல், பவுடர் உலோகத்துறை, சவ்வு, லாசர் மற்றும் ஒளியியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் போன்ற புதிய முறைகள் பரவுவதானது பெரும் பொருளாதாரப் பயனை அளிக்கும். இவற்றின் வளர்ச்சிக்காக விஞ்ஞானம் மற்றும் உற்பத்தியின் இணைப்பில் முற்றிலும் புதிய ஒரு வடிவமாக பெரிய பல்துறை விஞ்ஞான-தொழில்நுட்ப இணையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இயந்திரக் கட்டுமானத் துறையின் விரை

வான வளர்ச்சி, செயல்வன்மை குறைவான பழைய இயந்திரங்களுக்குப் பதில் அதிக உற்பத்தித் திறனுள்ள, நவீன இயந்திரங்களை புகுத்துவதைத் துரிதப்படுத்த உதவும். ஐந்தாண்டில் உற்பத்தி இயந்திர வகையறாக்கள் மூன்றிலொரு பங்கு புதுப்பிக்கப்படும். உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டம் உயர்த்தப்படுவதால் 1985ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது ஐந்தாண்டின் இறுதியில் சுமார் 12 மில்லியன் நபர்களின் உழைப்பும் 100 மில்லியன் டன்னிற்கு மேற்பட்ட எரிபொருளும் சிக்கனப்படுத்தப்படும். இயந்திரக் கட்டுமானத் துறையின் இயந்திரங்களும் உபகரணங்களும் பன்மடங்கு விரைவாகப் புதுப்பிக்கப்படும்.

புதிய உற்பத்திக் கருவிகள், சாதனங்களைத் தோற்றுவிக்கும் முக்கியத் துறையில் நடைபெறும் தொழில்நுட்ப முன்னேற்றத்தோடு கூட தேசியப் பொருளாதாரத்தின் மற்ற துறைகளிலும் (கட்டமைப்புப் பொருட்கள், மூலப்பொருட்கள், எரிபொருள் உற்பத்தி, நுகர்வு பொருட்களின் உற்பத்தி, சேவை துறை) பெரும் குணாம்ச ரீதியான தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்படும்.

உற்பத்தியை தீவிரப்படுத்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் கட்டமைப்புக் கொள்கைக்கு முக்கிய இடம் ஒதுக்கப்படுகிறது. சோஷலிச சமுதாயத்தில் மொத்தமாகப் பொருளாதாரக் கொள்கையைப் போன்றே

இதுவும் பொருளாதார, சமூக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் அரசால் திட்டமிட்ட வகையில் நிறைவேற்றப்படுகிறது. உற்பத்திப் பொருட்களுக்கான மூலப்பொருள் செலவழிவு, எரிபொருள், எரிசக்தி, மூலப் பொருட்கள், மற்ற பொருட்களின் செலவு ஆகியவற்றை குறைப்பதுதான் இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும். இதனால் 1986—1990இல் பதப்படுத்தும் தொழிற்துறையின் பொருள் அதிகரிப்பு வேகங்கள் தொழிற்துறை உற்பத்தி அதிகரிப்பின் மொத்த வேகங்களை விட 1.2 மடங்கு அதிகமாகும்; 11வது ஐந்தாண்டில் இவை கிட்டத்தட்ட சமமானவையாக இருந்தன.

கணிப்பொறிகளின் உற்பத்தியும், உபகரணங்கள், மின்னணு தொழில்நுட்ப, மின்சார தொழில்நுட்பப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் விரைவாக அதிகரிப்பதையடுத்து இயந்திரக் கட்டுமான இணையத்தின் கட்டமைப்பு மேம்படும். இத்துறைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பு சராசரி இயந்திரக் கட்டுமானத் துறை பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பை விட 1.3—1.6 மடங்கு கூடுதலாக இருக்க வேண்டுமென திட்டமிடப்படுகிறது.

கட்டமைப்புப் பொருட்களின் உற்பத்தியில் இரசாயன, எண்ணெய்-இரசாயனத் துறைப் பொருட்களின் உற்பத்தி விரைவாகக் கூடும் (தொழிற்துறை முழுவதிலும் திட்டமிடப்படும் அதிகரிப்பு வேகங்களுடன்

ஒப்பிடுகையில் 1.4 மடங்கு கூடும்), இரும்பு உலோகத் துறை குணாம்ச ரீதியில் மேம்படும். வழக்கமான கட்டமைப்புப் பொருட்களின் உற்பத்தி 6% அதிகரிப்பதால், அதிகப் பயனுள்ள உலோகப் பொருட்கள், பிளாஸ்டிக், உயர்வான நுகர்வுத் தன்மைகளை உடைய மற்ற நவீன பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி 1/3 மடங்கிற்கும் மேல் கூடும். இதனால் இவற்றை உற்பத்தி செய்யும் துறைகளை விட தொழிற்துறையிலும் கட்டுமானத்திலும் (இவைதான் கட்டமைப்புப் பொருட்களை முக்கியமாகப் பயன்படுத்துகின்றன) உற்பத்தி அளவின் அதிகரிப்பு வேகங்களை 3—4 மடங்கு கூட்ட முடியும்.

1990ஆம் ஆண்டு வாக்கில் தயாரான இரும்பு கலந்த ரோலிங் உலோக உற்பத்தியை 119 மில்லியன் டன் வரை உயர்த்த வேண்டும்; அதே சமயத்தில் வார்ப்பிரும்பு உற்பத்தி ஸ்திரமடைய வேண்டும், நிலக்கரி செலவு குறைய வேண்டும், 500க்கும் குறையாத புதிய வகையான ரோலிங் உலோகங்கள் பயன்படுத்தப்படும். ஐந்தாண்டில் ஆக்ஸிஜன்-கன்வெர்ட்டர் எஃகு, மின்சார எஃகின் உற்பத்தி 1.3—1.4 மடங்கு கூடும், தொடர்ச்சியான முறையில் இவற்றின் உற்பத்தி குறைந்தபட்சம் 2 மடங்கு கூடும், உலோக பவுடர்களின் தயாரிப்பு மும்மடங்கிற்கு மேலாகக் கூடும்.

அணு எரிசக்தி, எரிவாயு தொழிற்துறை ஆகியவற்றின் துரித வளர்ச்சி, பூமியின்

மேற்பகுதிகளிலிருந்து நிலக்கரியை எடுப்பது, எண்ணெய், எரிவாயு, நிலக்கரி கிடைக்கும் இடங்களை அதிக முழுமையாகப் பயன் படுத்துவது, எரிபொருள் சிக்கனம்—இவையெல்லாம் எரிபொருள்-எரிசக்தித் தொழிற் துறையின் கட்டமைப்பை மேம்படுத்துவதில் முக்கியக் காரணிகளாகும். சென்ற ஐந்தாண்டை விட நடப்பு ஐந்தாண்டில் அணுமின்நிலையங்களின் உற்பத்தித் திறன் 2.5 மடங்கு அதிகரிக்கப்படும். அனல் மின்நிலையங்களில் பழையதாகிப் போன இயந்திரங்கள் பெருமளவில் மாற்றப்படும். எரிவாயு எடுப்பதை பெரிதும் கூட்ட திட்டமிடப்பட்டுள்ளது; இதில் பத்தில் ஒன்பது பகுதி மேற்கு சைபீரியாவில், குறிப்பாக இதன் வட பிரதேசங்களில் கிடைக்கும். 7 பலமான பிரதான எரிவாயுப் பாதைகள் போடப்படும். கடந்த ஐந்தாண்டுகளிலேயே முதன் முதலாக நிலக்கரி எடுப்பைக் கணிசமாகக் கூட்ட (69 மில்லியன் டன்) திட்டமிடப்படுகிறது. இதில் கிட்டத்தட்ட முழுப் பகுதியும் மிகவும் பயனுள்ள, பூமியின் மேற் பகுதிகளிலிருந்து நிலக்கரியை எடுக்கும் முறையால் கிடைக்கும்.

சமூக நலத் திட்டங்களின் நிறைவேற்றத்திலும் கட்டமைப்புக் கொள்கையின் பங்கு வலுப்படும். விவசாயத் துறையிலும் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்துறைகளிலும் தர உயர்வின் மீதும், எந்தப் பொருட்களின் தேவை தொடர்ந்து

அதிகரிக்கிறதோ, இவற்றின் தேவைகள் இன்னமும் முழுமையாகப் பூர்த்தி செய்யப் படவில்லையோ அப்பொருட்களின் உற்பத் தியைக் கூட்டுவதன் மீதும் முக்கியக் கவனம் செலுத்தப்படும். தொழிற்துறை பண்டங் களின் உற்பத்தி அதிகரிப்பு வேகங்களை, மொத்தமாகத் தொழிற்துறையுடன் ஒப்பிடு கையில் 1.4 மடங்கு கூட்ட திட்டமிடப்பட் டுள்ளது; அன்றாடப் பொருட்களின் உற் பத்தியில் இவை கிட்டத்தட்ட இருமடங்கு கூடுதலாயிருக்கும்.

கட்சிக் காங்கிரசின் ஆவணங்களில் பொரு ளாதாரக் கொள்கையுடனான நெருங்கிய தொடர்பில் சமூகக் கொள்கையின் அம்சங் களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. வாழ்க் கையும், கடந்த காலத்தின் படிப்பினைகளும் சமூகத் துறையின் வளர்ச்சியை புதிய விதத் தில் அணுகுமாறும், சமூக பிரச்சினைகளின் பாலான கவனத்தை அதிகரிக்குமாறும் கோருகின்றன. சமூக-கலாசாரத் துறையில் பொருளாயத அடித்தளத்தை வலுப்படுத்து வது தொடர்பாக முன்நின்ற பிரச்சினை களை மைய மற்றும் ஸ்தல உறுப்புகள் உரிய விதத்தில் மதிப்பிடவில்லை என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரசில் சுட்டிக்காட்டப்பட் டது. உதாரணமாக இது, இத்துறையின் வளர்ச்சிக்காக நிதி ஒதுக்குவதில் காட்டப் பட்ட போதிய கவனமின்மையால் வெளிப் பட்டது. அலுவலக சடங்கு மனப்பாங்கான

அணுகுமுறை மீது அதிக கவனம் செலுத்தப்பட்டதால், உற்பத்தியின் சமூக அம்சம், மக்களின் ஓய்வு, வாழ்க்கை வசதிகள் மீதான கவனம் குறைந்தது. இதனால் உழைப்பின் விளை பயன்கள் மீதான உழைப்பாளிகளின் அக்கறை குறைந்தது, இது கட்டுப்பாடு குறையவும் மற்ற தீய விளைவுகளுக்கும்—இவையெல்லாம் உற்பத்தியை தீவிரப்படுத்தலை பாதித்தன—இட்டுச் சென்றது. உற்பத்தியைத் தொழில்நுட்ப ரீதியில் புதுப்பிப்பதற்காக செயல்முனைப்பான நடவடிக்கையை மேற்கொள்ளும் அதே சமயம் தீவிரமான சமூகக் கொள்கையைப் பின்பற்றி, தொழில் நிறுவனங்களில் சோஷலிச சுய நிர்வாகத்தைப் பலப்படுத்தினால்தான் உற்பத்திக் கடமைகளின் நிறைவேற்றத்தில் வெற்றியை அடைய முடியுமென்று காங்கிரசின் தீர்மானங்கள் நினைவுபடுத்தின.

புதிய ஐந்தாண்டு நல்ல முறையில் ஆரம்பமாகியது. 1986இல் தொழிற்துறை உற்பத்தியை 4.3% கூட்ட திட்டமிடப்பட்டிருந்த பொழுதிலும் நடைமுறையில் இது 5% கூடியது. எல்லா யூனியன் குடியரசுகளும் கிட்டத்தட்ட எல்லா தொழிற்துறை அமைச்சகங்களும் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றின. ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றுவதும் (கிட்டத்தட்ட 99%) பொருளுற்பத்தியின் அளவுத் திட்ட நிறைவேற்றமும் மேம்பட்டன. விவசாயத் துறை, இருப்புப் பாதை, இன்னும் சில துறைகளி

லும் வேகங்கள் துரிதப்படுத்தப்பட்டன, பண்புக் குறியீடுகள் மேம்படுத்தப்பட்டன.

தீவிரக் காரணிகளைப் பயன்படுத்தும் நிகழ்ச்சிப் போக்கு அதிகரித்து வருகிறது. உழைப்பின் உற்பத்தித் திறன், லாபம் ஆகியவற்றை அதிகரிப்பது, அடக்க விலையைக் குறைப்பது சம்பந்தமான கடமைகள் திட்டத்தை விட அதிகமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. தேசியப் பொருளாதார வளர்ச்சியில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சமூக-பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது தொடர்பாக கட்சி முன்வைத்த கடமைகளின் யதார்த்தத்தை 1986ஆம் ஆண்டு மெய்ப்பித்துள்ளது. என்றாலும் பல அமைச்சகங்கள், இலாக்காக்கள், கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்களில் சீரமைப்பு மெதுவாக நடைபெறுகிறது. துரிதமான வளர்ச்சிப் போக்கை வலுப்படுத்தக் கூடிய ஆழ்ந்த பண்பு ரீதியான மாற்றங்கள் இதுவரை நடைபெறவில்லை.

உற்பத்தியின் முழுச் சீரிசைவிற்கு இன்னமும் வகை செய்யப்படவில்லை; பொருட்களின் தர உயர்வில் கணிசமான மேம்பாடு எதுவுமில்லை; ஒரு சில துறைகளில் புதிய இயந்திரங்களை உருவாக்கி, பயன்படுத்துவது, தொழிற்துறைக் கட்டுமானம், உற்பத்தியைத் தொழில்நுட்ப ரீதியில் புதுப்பிப்பது பற்றிய திட்டங்கள் முன்போன்றே நிறைவேற்றப்படவில்லை. எனவே நல்ல போக்குகளைப் பற்றிய நல்ல மதிப்பீடு எந்த

ஒரு சுய திருப்திக்கும், அமைதிக்கும் இடம் தரவில்லை. பெரும் பணி முன்நிற்கிறது.

இச்சிறு நூலில் பொருளாதாரத்தை தீவிரப்படுத்துவது குறித்த ஒரு சில முக்கிய அம்சங்களை மட்டுமே சுட்டிக்காட்ட முடியும். நுகர்வு நிதிக்கும் சேமிப்பு நிதிக்கும் இடையிலான விகிதம் ஒரு முக்கிய பிரச்சினையாகும். இதைப் பற்றிய அணுகுமுறையில் ஏற்படும் மாற்றத்திலிருந்து நம் விளக்கத்தை துவக்குவோம்.

### உற்பத்தியை துரிதப்படுத்தலின் முக்கிய உந்து சக்தி

சேமிப்பு பற்றிய பிரச்சினை—உற்பத்தி உள்ளாற்றலை விரிவுபடுத்தி மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்படும் மூலாதாரங்களின் அளவு, கட்டமைவு, பங்கு புனருற்பத்தியிலும், விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்திலும் மையப் பிரச்சினையாகும். சேமிப்பு நிதியிலிருந்து பாதிக்கும் மேற்பட்ட பகுதி அடிப்படை உற்பத்தி சாதனங்களின் அதிகரிப்பிற்குச் செல்கிறது; பழையதாகிப் போன இயந்திர சாதனங்களை மாற்றும் வேகங்களுடன் சேர்ந்து இவற்றின் தொழில் நுட்ப மட்டமும் செயல்வன்மையும் உற்பத்தியை தீவிரப்படுத்தலின் எல்லா நிகழ்ச்சிப் போக்குகளின் வளர்ச்சியையும் தீர்மானகரமாக முன் நிர்ணயிக்கின்றன. எனவே உற்பத்தியை தீவிரப்படுத்தலின் முக்கிய உந்து

கோல் என்ற வகையில் உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்த, தேசிய வருமானத்தை சேமிப்பிற்கும் நுகர்விற்கும் எப்படிப் பயன்படுத்துவது என்பது சம்பந்தமாக ஏற்கெனவே உருவாகியிருந்த விகிதாச்சாரத்தை மாற்ற வேண்டியிருந்தது.

கடந்த மூன்று ஐந்தாண்டுகளாக தேசிய வருமானத்தில் சேமிப்பு நிதியின் பங்கு குறைந்து வந்தது. இதன் பங்கு 8வது ஐந்தாண்டில் 27.9% ஆகவும், 9வது ஐந்தாண்டில் 27.7%ஆகவும், 10வது ஐந்தாண்டில் 26.1%ஆகவும், 1981—1985இல் 25.1%ஆகவும் (1973ஆம் ஆண்டின் ஒப்பீட்டு விலைகளில்) இருந்தது. ஒன்பதாவது ஐந்தாண்டிலிருந்து நுகர்வு நிதி, சேமிப்பு நிதியை விட விரைவாகக் கூடியது (அட்டவணை 3).

12வது ஐந்தாண்டில் நுகர்வு நிதியை விட சேமிப்பு நிதி அதிகமாக வளருமென்று திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய வருமானத்தில் சேமிப்பு நிதியின் பங்கு 1985இல் 25.9%ஆக இருந்தது 1990இல் 27.6%ஆக உயரும்.

9வது ஐந்தாண்டிலிருந்து துவங்கி, ஐந்தாண்டு திட்டங்களின் முக்கியக் கடமையை நிர்ணயிக்கும் பொழுது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது முதலிடத்தில் வைக்கப்பட்டது; தொழில்நுட்ப முன்னேற்றம், உற்பத்தியை தீவிரப்படுத்தல், செயல் வன்மை ஆகியவை இதை அடையும் வழிகளாகக் கருதப்பட்டன. பொது அரசியல்-பொருளாதார நோக்கில் கூடிய விரைவில்

அட்டவணை 3

## தேசிய வருமானம், நுகர்வு மற்றும் சேமிப்பு நிதிகளின் வளர்ச்சி வேகங்கள்

| | 1966—1970 1961—1965 உடன் ஒப்பிடுகையில் % இல் | 1971—1975 1966—1970 உடன் ஒப்பிடுகையில் % இல் | 1976—1980 1971—1975 உடன் ஒப்பிடுகையில் % இல் | 1981—1985 1976—1980 உடன் ஒப்பிடுகையில் % இல் |
|---|---|---|---|---|
| பயன்படுத்தப்படும் தேசிய வருமானம் | 139 | 134 | 124 | 117 |
| நுகர்வு | 131 | 134 | 127 | 119 |
| சேமிப்பும் இதர செலவுகளும் | 142 | 133 | 117 | 113 |

வரும் எதிர்காலம் பூராவும் இந்தப் பரஸ் பரத் தொடர்பு கண்டிப்பாக அப்படியே இருக்கும். ஆனால் எவை உயர் லட்சி யத்தை அடைவதற்கான சாதனங்களாக இது வரை கருதப்பட்டனவோ அந்தப் பிரச் சினைகள் நடப்பு ஐந்தாண்டில் மீண்டும் பிர தான கடமையில் முதலிடத்தில் வைக்கப் பட்டுள்ளன.

சமூக-பொருளாதார வளர்ச்சியை துரிதப் படுத்தும் கடமையின் அடிப்படையில் பார்க்கும் பொழுது உற்பத்தி முதலீடுகள் அதிகரிக்கும் வேகங்களைக் கூட்டுவது நல் லது என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. 11வது ஐந்தாண்டில் இவற்றின் அளவு 16%ஆக இருந்ததெனில், இவை 12வது ஐந் தாண்டில் 25%ஆக உயரும். தேசிய வருமானத் தில் சேமிப்பு நிதியின் பங்கை உயர்த்து வதுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் உடனடி லட்சியங்களை நிறைவேற்றவும் நீண்ட கால கடமைகளின் நிறைவேற்றத் திற்கும் அவசியமானவை. பின்னால் சேமிப்பு பங்கை ஸ்திரப்படுத்தி, ஓரளவு குறைக்க வும் திட்டமிடப்பட்டுள்ளது.

சமூக உற்பத்தியின் செயல்வன்மையை யும் வளர்ச்சி வேகங்களையும் அதிகப்படுத்தி, சேமிப்பு நிதியின் பங்கை அதிகப்படுத்தும் பொழுது அது அதே நேரத்தில் நுகர்வு நிதி யின் வளர்ச்சியை துரிதப்படுத்தவும் உதவும். முந்தைய காலகட்டத்தில் நுகர்வு நிதி 55 பில்லியன் ரூபிள் கூடியதெனில், நடப்பு ஐந்

தாண்டில் இது 74 பில்லியன் ரூபிள் கூடும். இப்படிப்பட்ட வளர்ச்சி, திட்டங்களின் சமூகத் தன்மையை வலுப்படுத்தும் நீண்ட காலக் கொள்கைக்கு முற்றிலும் ஏற்றதாய் உள்ளது. 1971—1985இல் நுகர்வு நிதி அதிகரிப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட போதிலும் மொத்தத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவது மெதுவாகவே நடைபெற்றது.

சேமிப்பிற்கும் நுகர்விற்கும் இடையிலான விகிதம் நுகர்விற்கு ஆதாயமாக மாறியதானது உண்மையிலேயே 70ஆம் ஆண்டுகளில் உள்ள விகிதாச்சாரத்தின் புதிய அம்சமாகும். இதற்கு முன்—தொழிற்துறைமயப் படுத்தப்பட்ட காலகட்டத்திலும், மொத்தமாக இரண்டாவது உலக யுத்தத்திற்கு முந்தைய ஐந்தாண்டுகளிலும் யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்திலும்—தேசிய வருமானத்தில் சேமிப்பின் பங்கு உயர்ந்து வந்தது. தேசிய வருமானத்தில் சேமிப்பின் பங்கு குறையக் காரணம் என்ன, உற்பத்தியை தீவிரப்படுத்தலின் நியதிகள் இதற்கு எப்படி வழியமைத்தன என்று பார்ப்போம். இந்த நிகழ்ச்சிப் போக்கு நவீன கட்டத்தில் புனருற்பத்தியின் விகிதாச்சாரங்கள் மாறுவதில் முக்கிய நியதிகளின் ஒன்று என்று கருதுவதும் ஒரு சிலர் கூறும்படி இது இக்கட்டத்தில் சோஷலிச சேமிப்பு விதி செயல்படுவதன் தீர்மானகரமான சிறப்பியல்புகளில்

ஒன்று என்பதும் எவ்வளவு சரியானவை என்று நிர்ணயிப்பது முக்கியமாகும்.

இப்படிப்பட்ட கருத்து 70ஆம் ஆண்டுகளிலும் 80ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் சோவியத் பொருளாதார இலக்கியத்தில் ஓரளவு பரவியிருந்தது. இதை ஆதாரப்படுத்த பின்வரும் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன: குறைந்த அளவு முதலீட்டு அதிகரிப்பில் உற்பத்தியைப் பெருக்கி, புதுப்பிக்க உதவும் பலம் மிகு உற்பத்தி உள்ளாற்றலைத் தோற்றுவிப்பது; உற்பத்தி வளர்ச்சியில் இடப்பரப்பு காரணிகளின் பங்கை சுருக்கி, தீவிரப்படுத்தல் காரணிகளின் பங்கை மேன்மேலும் அதிகப்படுத்தல்; எட்டாவது ஐந்தாண்டிலிருந்து ஆரம்பித்து ஐந்தாண்டு திட்டங்களில் நுகர்வின் பங்கை கூட்டுதல்; மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் என்பதை வலுப்படுத்தல், மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுடன் தொடர்புடைய கடமைகளை கட்சிப் பொருளாதாரக் கொள்கையின் மையத்தில் வைத்தல். இந்த வாதங்களில் ஒவ்வொன்றும் கவனிக்கத் தக்கது. ஆனால் சற்று கவனமாக ஆராயும் பொழுது மேற்கூறிய நிகழ்ச்சிப் போக்குகள் பொருளாதார வளர்ச்சியின் பல நவீன சூழ்நிலைகளை, உதாரணமாக உற்பத்தியைத் தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்துவதன் நியதிகளை பிரதிபலிக்கவில்லை என்பது தெரிய வரும்.

கடந்த ஐந்தாண்டுகளின் பொழுது கட்டுமானத்தில் வெளிப்பட்ட குறைகள், தேசிய வருமானத்தில் சேமிப்பு நிதியின் பங்கை குறைப்பது விவேகமானது என்ற கருத்து உருவாவதன் மீது தாக்கம் செலுத்தின. அளவிற்கதிகமாக முதலீடுகளை செய்ததாலும், அமைச்சகங்கள் கட்டுமானங்களை பெரிதும் விரிவுபடுத்தியதாலும், ஏராளமான கட்டுமானங்களில் மூலாதாரங்களைச் சிதறடித்ததாலும் குறிப்பிட்ட காலகட்டத்தில் இவற்றைக் கட்டி முடிக்க முடியாமல் போயிற்று; இதனால் பெருமளவு நிதிகள் தேங்கிப் போயின, முதலீடுகள் திட்டமிட்ட பலனைத் தரவில்லை.

புதிய தொழில் நிறுவனக் கட்டுமானத்தை விரிவுபடுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் முயற்சிகள் சீரிசைவுப் பிரச்சினையைச் சிக்கலாக்கின, தேசியப் பொருளாதாரம் மூலாதாரங்களின் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டது. உற்பத்தியின் விகிதாச்சாரத்தைப் புனர் நாட்ட, முதலீடுகளின் செயல்வன்மையை உயர்த்த, இவற்றின் வளர்ச்சியை சிறிது கட்டுப்படுத்துவதும் இவற்றை தேசிய வருமானத்தின் வளர்ச்சிக்கு ஏற்றதாக மாற்றுவதும் விவேகமானது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. 9வது ஐந்தாண்டிலேயே முதலீடுகளின் அதிகரிப்பு குறைந்தது, 10வது ஐந்தாண்டில் முதலீடுகள் மற்றும் தேசிய வருமானத்திற்கு ஒரே வளர்ச்சி வேகங்கள்

நிர்ணயிக்கப்பட்டன, 11வது ஐந்தாண்டில் தேசிய வருமானத்தை அதிக விரைவாக வளர்க்கத் திட்டமிடப்பட்டது. தொழிற் துறைக் கட்டுமானம் மட்டுப்படுத்தப்பட்ட தன் விளைவாக புதிய தொழில் நிறுவனங் களைக் கட்டுவதை குறைத்ததை ஈடு கட்ட, ஏற்கெனவே இயங்கும் தொழில் நிறுவனங்களைப் பயன்படுத்துவது மேம் படுத்தப்படும், உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு அதிகரிக்கும் என்று முன்னனுமா னிக்கப்பட்டது.

திட்டமிட்ட விகிதங்களைப் பின்பற்ற முடியாமல் போனது. திட்டமிட்டதை விட குறைவாகவே தேசிய வருமானம் அதிகரித் தது. அதே நேரத்தில் முதலீடுகளின் வளர்ச்சி (எதிர்காலத் திட்டங்களில் இவற் றின் அளவு ஐந்தாண்டிற்கு மொத்தமாக நிர்ணயிக்கப்பட்டது) சாதாரணமாக ஆரம்ப குறியீட்டை விஞ்சியிருந்தது: 1971—1975 இல் 41.7%மும், 1976—1980இல் 28.7%மும் (26%க்குப் பதில்), 1981—1985இல் 17.9%மும் (10—12%க்குப் பதில்) இவ் வாறு விஞ்சியிருந்தது. ஐந்தாண்டு திட்டங் களால் நிர்ணயிக்கப்பட்ட முதலீடுகளின் அளவு அதிகரிக்க பல காரணங்கள் இருந் தன: இதனால் உழைப்பின் உற்பத்தித் திற னையும் சேமிப்பின் செயல்வன்மையையும் அதிகரிப்பதில் இருந்த பின்தங்கல் சரிசெய் யப்பட்டது; அதே நேரத்தில் இது உற்பத்தி யின் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்த

வும் இதை தீவிரப்படுத்தவும் முதலீடுகள் எப்படி புறவய ரீதியில் தேவைப்படுகின்றன என்பதையும் பிரதிபலிக்கிறது.

70ஆம் ஆண்டுகளில் முதலீடுகளின் அதிகரிப்பு தேசிய வருமானத்தின் அதிகரிப்பை சிறிது விஞ்சியது என்றாலும் மொத்தத்தில் இக்காலகட்டத்தில் முதலீடுகளின் அதிகரிப்பு தேசிய வருமான அதிகரிப்போடு ஒத்துப் போயிற்று. அப்பொழுது முதலீடுகளின் அதிகரிப்பு குறைந்த நேரத்தில் தேசிய வருமானத்தின் வளர்ச்சி வேகங்களும் குறைந்தன.

அட்டவணை 4

முந்தைய காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் ஏற்பட்ட வளர்ச்சி (% இல்)

| | 9வது ஐந்தாண்டு | 10வது ஐந்தாண்டு | 11வது ஐந்தாண்டு |
|---|---|---|---|
| தேசிய வருமானம் | 134 | 124 | 117 |
| முதலீடுகள் | 141 | 128 | 117 |

வலிமை மிக்க உற்பத்தி உள்ளாற்றல் இருக்கும் போது அது புதிய தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்கான முதலீடுகளின் தேவையைக் குறைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் புதிய கட்டுமானத்

திற்கான அவசியம் முழுமையாக மறைய வில்லை, ஏனெனில் புதிய துறைகள், உற் பத்தியைத் தோற்றுவிக்கவும், விஞ்ஞான, தொழில்நுட்ப சாதனைகளை உற்பத்தியில் புகுத்தவும் பெரும் செலவுகள் தேவைப்படு கின்றன. நடப்பு ஐந்தாண்டிலும் சில பெரும் அமைப்புகள் கட்டப்படுகின்றன. இவற்றின் முக்கியப் பயன் 90ஆம் ஆண்டுகளில் வெளிப் படும்.

உற்பத்தியின் பெரிய அளவும், உயர்வான தொழில்நட்ப மட்டமும் மூன்று வழிகளில் அடிப்படை உற்பத்தி சாதனங்களின் சேமிப் பில் தேசியப் பொருளாதாரத்திற்குள்ள தேவைகளைக் குறைக்கின்றன. அவ்வழிகளா வன: உற்பத்தியிலும் தொழிற்துறைக் கட்டு மானத்திலும் அதிக செயல்வன்மையுள்ள விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளைப் பயன்படுத்துவதன் மூலம் முதலீடுகளின் பங்கை குறைப்பது (இது தொழிற்துறை வளர்ச்சியின் முந்தைய கட்டங்களில் இய லாததாயிருந்தது); தேய்வடையும் அடிப் படை உற்பத்தி சாதனங்களை ஈடுகட்ட தேவையான செலவின் பங்கை முதலீடுகளில் அதிகப்படுத்தல், இம்மாற்றத்தை புதிய கட்டுமானத்திற்கு ஆவதை விட குறைவான செலவில் செய்தல்; உற்பத்தி உள்ளாற் றலை சிறப்பாகப் பயன்படுத்தியும், நவீன உற்பத்தி ஒழுங்கமைப்பு முறைகளைப் பயன் படுத்தியும் உற்பத்தி உள்ளாற்றலின் பயன் களை உயர்த்தல்.

இக்காலகட்டத்தில் மேற்கூறியவற்றோடு கூட உற்பத்தி சேமிப்பின் பங்கைக் கூட்டும் காரணிகளும் செயல்பட்டன. இவற்றில் மிக முக்கியமானவற்றைப் பார்ப்போம்.

இன்று இயற்கை வள இருப்பு குறைவான இடங்களை பயன்படுத்தத் துவங்குவது, சுரங்கங்களை ஆழப்படுத்துவது, தொலை தூரத்தில் உள்ள படிவுகளை மீட்கத் துவங்குவது ஆகியவை தோண்டியெடுக்கும் துறையிலும் மூலப்பொருள் துறைகளிலும் முதலீடுகளின் வளர்ச்சி மீது தாக்கம் செலுத்துகின்றன. தோண்டியெடுக்கப்படும் தாதுப்படிவுகளில் இரும்பின் சராசரி உள்ளடக்கம் 1955இல் 48.7% இருந்தது, 1965 இல் 40.6% ஆகவும் 1975இல் 36.5% ஆகவும் குறைந்தது. ஒரு டன் பண்ட தாதுப்பொருளை உற்பத்தி செய்ய 1955இல் 1.2 டன் கச்சா தாது போதுமாயிருந்தது, 1975இல் 1.94 டன் கச்சா தாதுவும், 1980இல் 2 டன் கச்சா தாதுவும் தேவைப்பட்டன.

பல இடங்களில் சுரங்கங்களின் ஆழம் அதிகரித்து வருகிறது. சென்ற ஐந்தாண்டில் நூறுக்கும் மேற்பட்ட நிலக்கரி சுரங்கங்களும் அதே அளவு தாதுச் சுரங்கங்களும் 600 மீட்டர், அதற்கும் மேற்பட்ட ஆழத்திற்குச் சென்றன, இவற்றில் சிலவற்றின் ஆழம் 1,000 மீட்டரை விஞ்சியது. எண்ணெய், எரிவாயுக் கிணறுகளின் சராசரி ஆழம் 1950இல் 1,350 மீட்டராயிருந்தது, 1970இல் 2,500 மீட்டராகி, 1980ஆம்

ஆண்டுகளின் துவக்கத்தில் 3,000 மீட்டரை எட்டியது. சோவியத் யூனியனின் ஒரு சில பிரதேசங்களில் 4—5 கி.மீ., அதற்கும் மேற்பட்ட ஆழத்தில் எண்ணெய், எரிவாயுவைத் தேடி, எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டின் ஐரோப்பியப் பகுதியிலும் யூராலிலும் ஏற்கெனவே பயன்படுத்தப்படும் இயற்கை வளங்கள் தீர்ந்து வருவதால் பல விதமான எரிபொருள், மூலப்பொருட்களை முன்போன்ற அளவில் தொடர்ந்து எடுக்க ஆகும் செலவுகள் கூடியுள்ளன.

மூலதனம் அதிகம் தேவைப்படும் துறைகளில் செலவுகள் கூடியதால் ஏற்பட்ட கட்டமைப்பு மாற்றங்களினாலும் தேசியப் பொருளாதாரத்திற்கு உற்பத்தி முதலீடுகளின் தேவைகள் அதிகமாயின. விவசாயத் துறையின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் முதலீடுகளின் பங்கு 7வது ஐந்தாண்டில் 20%ஆக இருந்தது, 10வது, 11வது ஐந்தாண்டுகளில் 27% வரை உயர்ந்தது. தொழிற்துறையில் முதலீட்டில் மூன்றிலொரு பங்கிற்கு மேல் எரிபொருள்-எரிசக்தி துறைகளுக்குச் செல்கிறது.

தொழிற்துறை வளர்ச்சிப் போக்கில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்கும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் ஆகும் செலவுகளும் கண்டிப்பாகக் கூடும்.

சேமிப்பைப் பற்றிய திட்டவட்டமான பகுப்பாய்வின் பொழுது முதலீட்டுத் துறை

யில் விகிதாச்சாரத்தில் ஏற்படும் சீர்குலைவு களை—முதலீடுகளுக்கு பொருளாயத ரீதியாக வகை செய்வதில் ஏற்படும் இடர்ப் பாடுகளை—கவனத்தில் கொள்ளாமலிருக்க முடியாது. கட்டுமானத்திற்குத் தேவையான இரும்பு கலந்த ரோலிங் உலோகங்கள், மற்ற கட்டமைப்பு பொருட்களின் சப்ளை வேகம் குறைந்தது. இது தவிர முதலீடுகளின் அள விற்கும் கட்டுமான ஸ்தாபனங்களின் திற னுக்கும் இடையிலான பொருத்தமின்மை —குறிப்பாக புதிய கட்டுமானம் குவிந் துள்ள இடங்களில்—வலுப்பட்டது.

கட்டுமானக் கடமைகளின் நிறைவேற்றத் தில் ஏற்பட்ட பின்தங்கிய நிலையும், கட்டு மானப் பணியின் வளர்ச்சி தடைப்பட்டதும் மற்ற மட்டுப்படுத்தும் காரணிகளாயின. 9வது ஐந்தாண்டில் மொத்த கட்டுமான அளவு 1/3 பங்கு அதிகரித்ததெனில் 10வது ஐந்தாண்டில் 5%மும், 1981 — 1985இல் 10%மும் மட்டுமே அதிகரித்தன.

விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத் தை துரிதப்படுத்தும் பிரச்சினைகள் தொடர் பாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியில் நடைபெற்ற ஜூன் மாத (1985) கூட்டத்தில், தேசியப் பொருளாதாரத்தின் தொழில்நுட்ப மட்டத் தை உயர்த்தும் பணியில் நேரிட்ட பெரும் குறைகளினால் புனருற்பத்தியில் தோன்றிய முரண்பாடுகளைப் பற்றிய ஆழமான பகுப் பாய்வு தரப்பட்டது. அடிப்படை உற்பத்தி

சாதனங்களைப் புதுப்பிப்பதும் மாற்றுவதும் மெதுவாக நடைபெற்றன. 9வது, 10வது ஐந்தாண்டுகளில் இயக்குவிக்கப்பட்ட புதிய அடிப்படை உற்பத்தி சாதனங்களின் பங்கு, தேசியப் பொருளாதாரத்தில் இவற்றின் பொது அளவுடன் ஒப்பிடுகையில் 1975இல் 37%ஆக இருந்தது, 1980இல் 34%ஆக குறைந்து 1985இல் 35% அடைந்தது.

பெரும்பாலான துறைகளில் அடிப்படை உற்பத்தி சாதனங்களை மாற்றுவதும், பழையதாகிப் போன இயந்திரங்கள், உபகரணங்கள், கட்டிடங்கள், மற்ற அமைப்புகளைக் கழித்துக் கட்டுவதும் மெதுவாக நடக்கலாயின. இதனால் பழுது பார்க்கும் துறையின் வேலைப் பளு பெரிதும் அதிகமாகியது. ஆண்டு தோறும் பழுது பார்ப்பதற்காக 35 பில்லியன் ரூபிள் செலவிடப்படுகிறது, இரும்பு கலந்த உலோகங்களில் கிட்டத்தட்ட 1/5 பங்கு இதற்குச் செல்கிறது, நாட்டிலுள்ள மொத்த கடைசல் இயந்திரங்களில் கால் பகுதி பழுது பார்க்கும் பட்டறைகளில் இருக்கிறது, இவற்றில் 60 லட்சம் நபர்கள் வேலை செய்தார்கள். ஒரு சில துறைகளில் (உதாரணமாக இரும்பு உலோகத் துறை) அடிப்படை உற்பத்தி சாதனங்களைப் பழுது பார்க்க ஆகும் செலவுகள் புதிய தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிக்க ஆகும் முதலீடுகளுக்குச் சமமானவை.

ஒரு குறிப்பிட்ட கடைசல் இயந்திரம் இயங்கும் காலம் பூராவும் இதை அடியோடு பழுது பார்க்க ஆகும் செலவுகள் புதிய கடைசல் இயந்திரத்திற்காகும் விலையை விடப் பல மடங்கு அதிகம். பழுது பார்க்க அதிகச் செலவாகக் காரணம் இது கைத் தொழிலை யொத்த சூழ்நிலையில் எளிய உபகரணங்களால் நடத்தப்படுகிறது என்பதும், இங்கு குறைந்த உற்பத்தித் திறனை உடைய உடலுழைப்பு மேலோங்கியுள்ளது என்பதுமாகும். புதிய இயந்திரங்கள் 5 ஆண்டுகள் இயங்குகின்றன என்றால் பழுது பார்க்கப்பட்ட இயந்திரங்கள் குறைவான காலம் தான் (1.5—2 ஆண்டுகள்) இயங்குகின்றன; இதனால் பழுது பார்த்ததன் செயல்வன்மை குறைகிறது. செயல்வன்மை குறைந்த பழுது பார்த்தலை இரண்டு வழிகளில் குறைக்கலாமென்று உலக அனுபவம் காட்டுகிறது. அதாவது ஒன்று பழைய இயந்திரங்களை விரைவாக மாற்றலாம், அல்லது இயந்திரங்களையும் உபகரணங்களையும் உற்பத்தி செய்த தொழிற்சாலைகளே அவற்றைப் பழுது பார்க்குமாறு ஏற்பாடுகளைச் செய்யலாம். இந்த விஷயத்தில் மேற்கூறிய இரண்டு திசைகளிலும் பணி நடைபெறும். தொழிற்துறையின் உற்பத்தி உள்ளாற்றலை இடையறாது புதுப்பிக்கும் கொள்கை பின்பற்றப்படும்.

இவ்வாறாக முதலீடுகளின் அளவு குறைந்ததானது முதலீட்டுத் துறையில் விகிதாச்

சாரத்தைப் பலப்படுத்தும் அளவை என்ற வகையில் குறுகியகாலத் தன்மையை உடையதாயிருந்தது, இது மூலாதாரங்களின் பற்றாக்குறையை அகற்றவில்லை. சேமிப்பின் பங்கு குறைந்ததானது இறுதியில் முதலீடு செய்யும் துறைகளின் வளர்ச்சியைச் சிக்கலாக்கியது, ஏனெனில் இது இவற்றை தொழில்நுட்ப ரீதியாகப் புதுப்பிப்பதைத் தாமதப்படுத்தியது. சேமிப்பு விகிதம் குறையும் நிகழ்ச்சிப் போக்கிற்கும் அடிப்படை உற்பத்தி சாதனங்களைப் புதுப்பிப்பதில் ஏற்படும் காலதாமதத்திற்கும், உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு குறைவதற்கும் இடையிலான தொடர்பு எளிதானதல்ல, இங்கு கூடுதல் பகுப்பாய்வு தேவை. என்றாலும் பின்வரும் முடிவு கிட்டுகிறது: ஏற்கெனவேயுள்ள உற்பத்தி உள்ளாற்றலைப் பயன்படுத்துவதை மேம்படுத்தும் பணி தேசிய வருமானத்தில் உற்பத்திச் சேமிப்பின் பங்கு குறைவதை ஈடு கட்டவில்லை. அது மட்டுமல்ல, ஒரு ரூபிள் அடிப்படை உற்பத்தி சாதனங்களுக்கு உற்பத்தி செய்யப்படும் பொருளின் அளவு குறைவது துரிதமடைந்ததானது கணிசமான அளவு சேமிப்பின் பங்கு குறைவதன் விளைவாகும்.

இயங்கும் அடிப்படை உற்பத்தி சாதனங்களின் பயன்தன்மையை உயர்த்தவும், பழைய இயந்திரங்களை மாற்றுவதைத் துரிதப்படுத்தவும் இவற்றின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான முதலீடுகளை அதிகரிக்க

வேண்டுமே தவிர இவற்றை மட்டுப்படுத்தக் கூடாது.

முதலீட்டுக் கொள்கையானது விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தை துரிதப் படுத்துவது, உற்பத்தியின் பொருளாயத அடித்தளத்தையும் கட்டமைப்பையும் குணாம்ச ரீதியாக மாற்றியமைப்பது ஆகிய வற்றை நோக்கமாகக் கொண்டது. இது முக்கியமான பொது அரசு செயல்திட்டங் களின் நிறைவேற்றத்திற்காகச் செல்லும் நிதிகளின் பங்கு அதிகரிப்பதில் வெளிப்படு கிறது: இவற்றின் நிறைவேற்றத்திற்கு சென்ற ஐந்தாண்டில் முதலீடுகளின் அதி கரிப்பில் பாதி சென்றது என்றால் இப்போது 80%க்கும் மேலாகச் செல்கிறது. வீடு கட்டு மானத்திற்கும், சமூக-கலாசாரத் துறை யின் பொருளாயத அடித்தளத்தை வலுப் படுத்தவும் ஆகும் செலவுகளும் கணிசமாக கூட்டப்பட்டன. இயங்கும் தொழில் நிறு வனங்களை தொழில்நுட்ப ரீதியாகப் புதுப் பிக்கவும் சீரமைக்கவும் முன்னுரிமை வழங் கப்படும்; இதற்கான முதலீடுகள் 11வது ஐந்தாண்டுடன் ஒப்பிடுகையில் 70% கூடும்.

உற்பத்திக் கட்டமைப்பின் சீரமைப்பு, முதலீடுகளின் துறை ரீதியான விகிதாச்சா ரங்களின் மாற்றத்திலும் நன்கு வெளிப்படு கிறது. இயந்திரக் கட்டுமானத் துறையில் முதலீடுகளின் அளவு ஐந்தாண்டில் 1.8 மடங்கு அதிகரிக்கும். பழையதாகிப் போன அடிப்படை உற்பத்தி சாதனங்களின் கழிவு

கடந்த ஐந்தாண்டின் சராசரி ஆண்டு மட்டத்துடன் ஒப்பிடுகையில் 1.7 மடங்கு அதிகரிக்கும்.

கனரகத் தொழிற்துறையின் அடிப்படைத் துறைகளை எடுத்துக் கொண்டால் எரிபொருள்-எரிசக்தி துறைகளில் முதலீடுகள் விரைவான வேகங்களில் வளருகின்றன. ஐந்தாண்டில் இவற்றின் அளவு 47% கூடும்; எரிபொருளைப் பயன்மிகு வகையில் எடுத்து பதப்படுத்த வழியமைக்கும் உற்பத்தி வளர்ச்சிக்கான செலவுகள் கிட்டத்தட்ட இரு மடங்கு கூடுதலாக அதிகரிக்கும்.

முதலீடுகளின் மொத்த அளவில் விவசாயத்-தொழிற்துறை இணையத்தின் பங்கு முன்னிருந்த மட்டத்திலேயே நிற்கிறது. இதில் விவசாய மூலப்பொருளைப் பதப்படுத்தும் துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது: மொத்தமாக விவசாயத்-தொழிற்துறை இணையத்துடன் ஒப்பிடுகையில் இவற்றில் முதலீடுகள் 51% அல்லது 2.3 மடங்கு அதிகமாக உயரும். இது இறுதி விளைபொருளின் வளர்ச்சிக்குத் தடையேற்படுத்தும் பெரும் பொருத்தமின்மையை அகற்ற உதவும்.

12வது ஐந்தாண்டில் உற்பத்தி சேமிப்பின் அளவைக் கூட்டத் திட்டமிடப்படுகிறது. இது உற்பத்தியை தீவிரப்படுத்தும் நிகழ்ச்சிப் போக்குகள் மீது முதலீட்டு மற்றும் கட்டமைப்புக் கொள்கையின் தாக்கத்தை வலுப்படுத்தும்,

சேமிப்பிற்கும் உற்பத்தியை தீவிரப்படுத்துவதற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பை பகுப்பாய்வு செய்யும் பொழுதும் இதே போன்ற முடிவுகளுக்கு வரலாம். இடப் பரப்பு வளர்ச்சிக் காரணிகளை குறுக்குவதானது கூடுதல் முதலீடுகளின் தேவையைக் குறைக்கிறது. புதிய வேலையிடங்களைத் தோற்றுவிக்க ஆகும் செலவுகளை விட உடலுழைப்பை இயந்திரமயப்படுத்தவும், இதன் மூலம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களை விடுவிக்கவும் குறைவான செலவேயாகும். உற்பத்திப் பொருட்களுக்கான மூலப் பொருள் செலவழிவு குறைவதாலும், மூலப் பொருட்கள், மற்ற பொருட்களின் இழப்பும் கழிவும் குறைவதாலும், மொத்தத்தில் மூலப்பொருள் துறைகளுக்கும் பதப்படுத்தும் துறைகளுக்கும் இடையில் சாலச்சிறந்த விகிதாச்சாரங்களை ஏற்படுத்துவதாலும் தேசியப் பொருளாதாரத்திற்கு தேவையான முதலீடுகளின் அளவு குறைகிறது. மேன்மேலும் அதிகமான எண்ணிக்கையில் தோண்டியெடுக்கும் துறைகளின் (சுரங்கத் துறை, எண்ணெய் எடுத்தல், மரமறுக்கும் துறை போன்றவை) உற்பத்தி அளவுகள் ஸ்திரமாக இருக்க, பதப்படுத்தும் தொழிற்துறை வளர்ச்சியடைவது இன்றைய கட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆள்பல அதிகரிப்பு குறைந்ததை சரிகட்ட உற்பத்தியை மேலும் அதிகமாக

இயந்திரமயப்படுத்த வேண்டும், உழைப்பின் உயர்வான உற்பத்தித் திறனை அடைவதுதான் இதன் நோக்கமாகும். மூலப்பொருள் வளங்களுக்கான தேவைகளுக்கும் மேற்கூறிய அம்சம் ஓரளவு பொருந்தி வரும்; ஏனெனில் பல தோண்டியெடுக்கும் துறைகளின் வளர்ச்சி சூழல் மோசமடைந்து வரும் பின்னணியில்தான் உற்பத்தியை தீவிரப்படுத்தல் நடைபெறுகிறது.

அதே நேரத்தில் கட்டுமானம், தொழிற்துறை மற்ற துறைகளில் ஒரு சில இடப்பரப்பு வளர்ச்சிக் காரணிகள் அப்படியே இருந்ததால் முதலீடுகளை சிக்கனப்படுத்தும் வாய்ப்புகள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. பல தொழில் நிறுவனங்கள், அமைப்புகளைக் கட்டிய பொழுது போதுமான அளவு சிக்கனமான தொழில்நுட்பத் தீர்வுகள் பின்பற்றப்படவில்லை, கட்டுமானத்திற்கான காலகட்டமும் குறையவில்லை. புதிய தொழில் நிறுவனங்களைக் கட்டாமல், இயங்கும் தொழில் நிறுவனங்களைத் தொழில்நுட்ப ரீதியாகப் புதுப்பித்தும், இவற்றை சீரமைத்தும் உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்புகளும் பயன்படுத்தப்படவில்லை. வேலையிடங்களின் எண்ணிக்கைக்கும் ஆள்பலத்திற்கும் இடையில் பொருத்தமின்மை தோன்றியது; இதனால் புதிய தொழில் நிறுவனங்களுக்கான பணியாளர்களை வேலையிலமர்த்தவும் ஏற்கெனவேயுள்ள தொழில் நிறுவனங்களின்

இயக்கத்திற்கு வகைசெய்யவும் ஆள்பலம் போதாமல் போனது.

எனவே உற்பத்தியை தீவிரப்படுத்தும் நிகழ்ச்சிப் போக்கில் சேமிப்பின் பங்கைப் பற்றிய பிரச்சினை சிக்கலானதாகும். சேமிப்பு விகிதம் குறைவது உற்பத்தியை தீவிரப்படுத்தும் காரணி, இதன் அதிகரிப்பு இடப்பரப்பு வளர்ச்சியைக் குறிக்கிறது என்னும் கருத்து மிகவும் எளிமையானதாகும். உற்பத்தி சாதனங்களின் இடப்பரப்பு ரீதியான சேமிப்பு புதிய உற்பத்தி சாதனங்களின் அதே தொழில்நுட்ப மட்டத்தில் அல்லது அதை விடக் குறைவான மட்டத்தில் நடைபெறுகிறது. இந்த மட்டம் சந்தேகத்திற்கிடமின்றி உயர்ந்தது என்றாலும், நாம் பார்க்கும் இக்காலகட்டத்தில் இந்த உயர்வு பெரும்பாலும், போதுமான அளவு உற்பத்தித் திறனற்ற தொழில்நுட்பத்தை தொழில் நிறுவனங்களுக்கு வழங்கியதால் அடையப்பட்டது. உற்பத்தி சாதனங்களின் புழக்க வேகம் குறைந்ததும், பழையதாகிப் போன உற்பத்தி சாதனங்கள் குவிந்ததும், இவற்றின் சேவைக் காலம் கூடியதும் சேமிப்பில் இப்பரப்பு வளர்ச்சிப் போக்குகள் தோன்றக் காரணமாய் இருந்தன. எனவே உற்பத்தி சேமிப்பின் விகிதம் குறைந்த போதிலும் இடப்பரப்பு வளர்ச்சியின் அறிகுறிகளில் பல கடந்த ஐந்தாண்டுகளில் காணப்பட்டன. சேமிப்பு விகித மாற்றத்தை புனருற்பத்தி வகையுடன் இணைப்பது

ஆதாரமற்றது என்பதை இதுவே கூறுகிறது.

தத்துவார்த்த ரீதியாகப் பார்த்தால், தீவிர அல்லது இடப்பரப்பு வளர்ச்சி வெவ்வேறு சேமிப்புப் பங்கில் நடைபெறலாம். ஆனால் சோவியத் பொருளாதார வளர்ச்சியின் இன்றைய மட்டத்தில் இது தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாறுவதானது தேசிய வருமானத்தில் சேமிப்பு நிதியின் பங்கு கூடுவதுடன் தொடர்புடையது.

விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதன் மீதும், முதலீட்டுத் துறையின் விகிதாச்சாரங்கள் மீதும் சேமிப்பு விகித அதிகரிப்புக் காரணிகள் செலுத்தும் தாக்கம் சமீப ஆண்டுகளில் அனேகமாக அதிகரிக்கும். முதலீடுகளின் செயல்வன்மை வளர்ச்சியடையவும், தோற்றுவிக்கப்பட்ட உற்பத்தி உள்ளாற்றலின் பயனை உயர்த்தவும் இப்போதுள்ள மட்டுப்பாடுகளை அகற்றும் வாய்ப்பு தோன்றும் வரை மேற்கூறியது நடக்கும்.

## 3. உற்பத்தியை தீவிரப்படுத்தலை துரிதப்படுத்தும் வழிகள்

### மனித வளத்தைப் பயன்படுத்துவதை மேம்படுத்தல்

சோவியத் யூனியனில் உழைக்கும் நிலையிலுள்ள அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது, 30ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் தொழிற்துறைமயப்படுத்தலின் பொழுதே வேலையில்லாத் திண்டாட்டம் ஒழித்துக் கட்டப்பட்டது. இன்று தேசியப் பொருளாதாரத்தில் 130.5 மில்லியன் நபர்கள் வேலை செய்கின்றனர், இவர்களில் 117.7 மில்லியன் நபர்கள் தொழிலாளர்களும் அலுவலக ஊழியர்களுமாவர், 19.8 மில்லியன் நபர்கள் கூட்டுப் பண்ணை விவசாயிகளாவர். தேசியப் பொருளாதாரத்தில் வேலை செய்யும் மக்களின் பங்கு மற்ற நாடுகளில் உள்ளதை விட அதிகம்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் பொதுக் கல்வி மட்டமும், தொழிற் கல்வியின் மட்டமும் உயர்ந்துள்ளன. உயர் மற்றும் செகன்டரித் தொழில் கல்வி கற்ற நிபுணர்களின் எண்ணிக்கை 1985இல் 33.9 மில்லியனாக இருந்தது; இது 1941 உடன் ஒப்பிடுகையில் 14 மடங்கு அதிகமாகும். இக்காலகட்டத்தில் நிபுணர்களின் எண்ணிக்கை தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்களின் மொத்த எண்

ணிக்கையை விட 4 மடங்கு அதிகரித்தது. இன்று தேசியப் பொருளாதாரத்தில் உள்ள வேலை செய்பவர்களில் நான்கில் ஒரு பங்கினர் உயர் அல்லது செகன்டரித் தொழில் கல்வி கற்றவர்கள். நவீன தொழில்நுட்பம், இயந்திரங்களை வெற்றிகரமாக உருவாக்கி, பயன்படுத்த வல்ல தேர்ச்சி மிகு ஊழியர்களும் முற்போக்கான நிர்வாக மற்றும் உழைப்பு ஒழுங்கமைப்பு முறைகளும் உற்பத்தியை தீவிரப்படுத்துவதற்கான முக்கிய நிபந்தனைகளாகும்.

ஆனால் 70ஆம் ஆண்டுகளில் மனித வளங்கள் மற்றும் மக்களின் வேலை வாய்ப்பின் கட்டமைப்பில் ஏற்பட்ட நல்ல மாற்றங்களோடு கூட, தேசியப் பொருளாதாரத்திற்குத் தேவையான ஆள் பலத்தை வழங்குவதில் சில இடர்ப்பாடுகளும் தோன்றின. ஆள்பலம் போதாத நிலை ஏற்பட்டது—வேலை செய்பவர்களின் எண்ணிக்கையை விட வேலையிடங்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்தது. அதுவும் ஆள்பல பற்றாக்குறை உழைப்பு வளங்களின் அதிகரிப்பு குறைந்ததுடன் ஓரளவுதான் தொடர்புடையது. இது முக்கியமாக புதிய தொழில் நிறுவனங்களின் கட்டுமானம் விரிவடைந்ததுடனும் பழைய அடிப்படை உற்பத்தி சாதனங்களைப் புதுப்பித்து, மாற்றுவது மெதுவாக நடந்ததுடனும் அதிகமாகத் தொடர்புடையதாயிருந்தது.

மனித வளங்களை பயன்படுத்துவதை

மேம்படுத்துவதானது உற்பத்தியை தீவிரப் படுத்தும் நிகழ்ச்சிப் போக்கின் மீது பல விதங்களில் தாக்கம் செலுத்துகிறது—தேசியப் பொருளாதாரத்திற்கான ஆள் தேவைகள் அதிக முழுமையாக பூர்த்தி செய்யப்படுகின்றன, ஏற்கெனவே தோற்று விக்கப்பட்ட உற்பத்தி உள்ளாற்றலின் பயன் தன்மை அதிகரிக்கப்படுகிறது, தொழிற் துறைக் கட்டுமானத்தின் செயல்வன்மை உயர்த்தப்படுகிறது. இந்தத் தாக்கம் குறிப் பாக இன்று மிகவும் பெரியது, ஏனெனில் உழைப்பு மற்றும் அடிப்படை உற்பத்தி சாதனங்களின் சமன்பாடுகளில் குறிப்பிட்ட பொறுத்தமின்மைகள் உருவாகின, விஞ் ஞான-தொழில்நுட்ப முன்னேற்றமோ இவற் றைப் பயன்படுத்துவதன் செயல்வன்மையை உயர்த்த புதிய வாய்ப்புகளைத் தோற்று விக்கிறது.

12வது ஐந்தாண்டில் தேசியப் பொருளா தாரத்திற்குத் தேவையான ஆள்பலத்தை வழங்குவதன் சிறப்பியல்புகள் முந்தைய காலகட்டத்தில் இருந்தவற்றைப் போன்ற வையே. இதில், 70ஆம் ஆண்டுகளிலிருந்து தோன்றிய போக்குகளில் பல நடப்பு பத் தாண்டின் இரண்டாவது பாதியில் வலுப் படும். மனித வளத்தின் முழுமுதல் அதி கரிப்பு தொடர்ந்து குறைந்து வருகிறது. ருஷ்ய சமஷ்டிக் குடியரசு, உக்ரேன், பைலோ ருஷ்யா, பால்டிக் குடியரசுகள் ஆகிய வற்றில் உழைக்கும் வயது வந்த மக்களின்

எண்ணிக்கை குறையுமென எதிர்பார்க்கப் படுகிறது. இதன் மொத்த அதிகரிப்பில் மத்திய ஆசிய, டிரான்ஸ் காக்கசஸ் குடியரசு கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

மொத்தத்தில் ஆள் பலத்தின் பிரதேசக் கட்டமைவு சோவியத் யூனியனின் ஐரோப் பியப் பகுதியில், குறிப்பாக இதன் கிழக்கே உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, இடப் பங்கீடு பற்றி தீட்டப்படும் விகிதாச்சாரங் களிலிருந்து அடுத்த சில காலத்திற்கு இன் னமும் அதிகமாக மாறுபடும். விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றம் உழைப்பைச் சிக்கனப்படுத்துவதை நோக்கமாகக் கொண் டிருக்கும்படி செய்தும், ஆள்பலத்தைச் செயல்வன்மையோடு பயன்படுத்துவதில் தொழில் நிறுவனங்களின் அக்கறையை அதிகப்படுத்தியும், உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்வில் உழைப்பாளிகளின் அக் கறையை அதிகப்படுத்தியும் மேற்கூறிய மாறு பாட்டை அகற்றத் திட்டமிடப்படுகிறது.

கடந்த 11வது ஐந்தாண்டில் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு தேசிய வரு மானம் மற்றும் தொழிற்துறை உற்பத்திப் பொருட்களின் அதிகரிப்பில் 86—87% தந்தது. 1986இல் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பால் தேசிய வருமான அதிக ரிப்பில் 97%மும், தொழிற்துறை உற்பத்தி அதிகரிப்பில் 95%மும் பெறப்பட்டன. 1987இல் தேசிய வருமான அதிகரிப்பில் கிட்டத்தட்ட முழுப் பகுதியும், பொருளா

## உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பை துரிதப்படுத்தல்

| | அதிகரிப்பு (சராசரியாக ஆண்டிற்கு % இல்) | | | |
|---|---|---|---|---|
| | 1981—1985 | 1986—1990 | | 1987 ஆம் ஆண்டுத் திட்டம் |
| | | "முக்கியத் திசைகள்" | ஐந்தாண்டு திட்டம் | |
| சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் | 3.1 | 3.7-4.2 | 4.2 | 4.0 |
| உழைப்பின் உற்பத்தித் திறன்: | | | | |
| தொழிற்துறையில் | 3.2 | 4.3-4.6 | 4.6 | 4.4 |
| கட்டுமானத்தில் | 2.7 | 2.8-3.0 | 3.9 | 3.8 |
| இருப்புப் பாதைத் துறையில் | 1.2 | 2.0-2.3 | 2.3 | 4.6 |

யத உற்பத்தித் துறைகளில் பொருளுற்பத்தி, வேலை அதிகரிப்பில் முழுப்பகுதியும் இக்காரணியைக் கொண்டு பெறப்படும்.

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த முக்கிய வழி எல்லா துறைகளும் புதிய இயந்திரங்களுக்கும் தொழில்நுட்பத்திற்கும் மாறுவதாகும். உதாரணமாக மின்

னணு வசதிகளுடன் கூடிய கடைசல் இயந்திரம் 3—4 தொழிலாளர்களையும், கூட்டு தானியங்கி அமைப்பு 30 தொழிலாளர் வரையும், தானியங்கிப் பிரிவு 60 நபர்களையும் விடுவிக்கும். ஆனால் ஒரே நேரத்தில் எல்லா தொழில் நிறுவனங்களையும் தொழில்நுட்ப ரீதியாகப் புதுப்பிப்பது இயலாதது. இதற்கு கணிசமான நேரம் தேவைப்படும், இது படிப்படியாக ஒவ்வொரு பிரதேசத்திலும், துறையிலும் நடத்தப்படும். ஆனால் இத்தொழில்நுட்பம் முழுவதையும் செயல்வன்மையோடு பயன்படுத்தினால்தான் உரிய பயன் கிட்டும். இதில் பொருளாதாரப் பிரச்சினைகளின் தீர்விற்கு, பொறியியல் தொழில்நுட்ப அம்சத்திற்குச் சற்றும் குறையா முக்கியத்துவம் உண்டு.

இன்று எல்லா தொழில் நிறுவனங்களிலும் திட்டமிடலையும், உழைப்பு ஒழுங்கமைப்பையும் மேம்படுத்துவதன் மீது மிக முக்கியக் கவனம் செலுத்தப்படுகிறது. வேலை நேர இழப்பைக் குறைப்பது, ஊழியர்கள் அடிக்கடி இடம் மாறுவதை குறைப்பது, உள்ள வளங்களை அதிகபட்சம் பயன்படுத்தும் நோக்கத்தோடு உழைப்பின் வரையளவுகளையும் ஒழுங்கமைப்பையும் மேம்படுத்துவது ஆகிய கடமைகள் முன்னெப்போதையும் விட இப்போது முக்கியமானவையாகின்றன. இன்று இயங்கும் தொழில் நிறுவனங்களில் பெரும்பாலானவற்றில்

இவற்றை தொழில் நுட்ப ரீதியாகப் புதுப்பிக்கும் பணிகளை விரிவுபடுத்தி, அவற்றின் அடிப்படையில் வேலை செய்பவர்களை நடைமுறையில் விடுவிக்க வேண்டும். அவர்கள் புதிய தொழில் நிறுவனங்கள், சேவைத் துறை ஆகியவற்றிற்கும், தொழிற்துறை, கட்டுமானம், மற்ற உற்பத்தித் துறைகளின் காலியிடங்களுக்கும் அனுப்பப்படுவர்.

தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஆள்பலத்தை அளிக்கும் முக்கிய வழிகளில் ஒன்று இயந்திரமயப்படுத்தி உடலுழைப்பின் பங்கை குறைப்பதாகும். கடந்த ஐந்தாண்டில் முதன்முதலாக தொழிற்துறைத் தொழிலாளர்களின் பொது எண்ணிக்கை குறைந்தது. என்றாலும் இன்றுவரை சுமார் 50 மில்லியன் நபர்கள் (தொழிற்துறையில் 1/3 பங்கினர், கட்டுமானத்தில் 1/2 பங்கினர், விவசாயத் துறையில் 3/4 பங்கினர்) உடலுழைப்பில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக சரக்குகளை ஏற்றியிறக்கும் வேலைகள், வாகனங்களில் இவற்றை ஏற்றியிறக்கும் வேலைகள், கிடங்குப் பணிகள் ஆகியவை அதிகம் இயந்திரமயப்படுத்தப்படவில்லை, தேசியப் பொருளாதாரத்தில் 7.6 மில்லியனுக்கும் கூடுதலானோர் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

12வது ஐந்தாண்டில் உற்பத்தித் துறையை சீரமைப்பதன் பயனாய் உடலுழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 5—6 மில்லியன் குறையும். உடலுழைப்பைப்

பயன்படுத்துவதை குறைத்தல், இதில் ஈடுபட்டுள்ளவர்களைத் திட்டமிட்ட வகையில் பிற உற்பத்தித் துறைகளுக்கு மாற்றுதல், இதற்குரிய மறுபயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்—இவைதான் இன்று மிகப் பெரும்பாலான தொழில் நிறுவனங்களுக்கு ஊழியர் பற்றாக்குறையை அகற்றும் யதார்த்தமான வழியாகும்.

உடல் நலத்திற்கு கேடு ஏற்படுத்தக் கூடிய சூழலை உடைய உற்பத்தித் துறைகளிலிருந்து வேலை செய்பவர்களை விடுவிப்பதற்கு பெரும் சமூக முக்கியத்துவம் உண்டு. இப்பிரச்சினையில் அணுகுமுறையே மாறி வருகிறது. சமீப காலம் வரை இதற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளில் 4/5 பங்கு, இப்படிப்பட்ட சூழ்நிலையின் தீய விளைவுகளை குறைக்க அல்லது அகற்றவும், கேடு விளைவிக்கும் சூழலில் வேலை செய்பவர்களுக்கு கூடுதல் ஊதியங்கள், சலுகைகளைத் தரவும் மட்டுமே சென்றது; 1/5 பகுதிதான் உற்பத்தியைத் தொழில்நுட்ப ரீதியாகப் புதுப்பித்து உழைப்புச் சூழலை மேம்படுத்த பயன்பட்டது. நடப்பு ஐந்தாண்டில் பின்னால் கூறிய போக்கு மேன்மேலும் ஆதிக்கம் செலுத்தும். எந்தத் தொழில் நிறுவனங்களில் உழைப்புச் சூழலை மேம்படுத்த கவனம் செலுத்தப்படவில்லையோ அங்கு தான் ஊழியர் பற்றாக்குறை பெரிதும் உணரப்படுகிறது என்று அனுபவம் காட்டு

கிறது. எங்கெல்லாம் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் சாதாரணமாக உழைப்பாளர் கூட்டுகள் ஸ்திரமானவை.

இவ்வாறு ஆழ்ந்து பரிசீலித்தால் பல துறைகளில் உண்மையான ஆள் பலப் பற்றாக்குறை இல்லையென்பதைக் காணலாம். தொழில் நிறுவனங்களில் உழைப்பாளிகளின் பற்றாக்குறைக்கு முக்கியக் காரணம் உழைப்பின் உற்பத்தித் திறன் குறைவாயிருப்பதும், இது நன்கு ஒழுங்கமைக்கப்படாமலிருப்பதும், போதுமான அளவு இதற்கு ஊக்கமளிக்கப்படாமலிருப்பதுமாகும். இது தவிர, திட்ட மற்றும் நிர்வாக உறுப்புகள் ஆதாரமற்று எடுக்கும் முடிவுகளும்—இவற்றால் மிகையான வேலையிடங்கள் தோன்றுகின்றன—இதற்குக் காரணமாகும்.

தொழில் நிறுவனங்களில் ஏற்கெனவே உள்ள ஆள் பலத்தைப் பயன்படுத்துவதை மேம்படுத்த பிரிகேடு முறை (கூட்டு வேலைக் குழு) மேன்மேலும் கொண்டுவரப்படுகிறது. கடந்த ஐந்தாண்டில் புதிய வகையான பிரிகேடுகள் பரவின; இவை தம் வேலையின் இறுதி விளைவுகளுக்கேற்ற ஊதியத்தைப் பெறுகின்றன. 1981 முதல் சொந்தக் கணக்கீட்டு பிரிகேடுகள் தோற்றுவிக்கப்படலாயின. இவை உழைப்பின் உற்பத்தித் திறனில் உயர்வான மட்டத்தை அடைந்தன, இவற்றின் உற்பத்தி செயல் வன்மை அதிகரித்தது, உற்பத்திப் பொருட்

கள், வேலையின் தரம் மேம்பட்டது. தனிப் பட்டவர்களின் உழைப்புடன் ஒப்பிடுகை யில் இப்படிப்பட்ட பிரிகேடுகளில் உழைப் பின் உற்பத்தித் திறன் சராசரியாக 10—15% உயருகிறது.

என்றாலும் இன்னமும் பல நேரங்களில் பிரிகேடுகளைத் தோற்றுவிப்பது சம்பிர தாயமாக உள்ளது, இங்கு தர அம்சத் திற்குப் பங்கமேற்படும் வகையில் அளவு நிலைக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தொழிற்சாலையின் உள் திட்டமிடல், தொழில்நுட்பம், உழைப்பு ஒழுங்கமைப்பு, இதன் ஊதிய முறை ஆகியவற்றை மேம் படுத்த முன்பணி மேற்கொள்ளப்படுவ தில்லை. பல தொழில் நிறுவனங்களில் பிரி கேடுகளின் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த பல பிரிவுகளின் தலைவர்கள், பொறியியலாளர்களுக்கு உள்ள பொறுப்பு நிர்ணயிக்கப்படவில்லை. தொழில்துறையில் உள்ள தொழிலாளர்களில் கணிசமான பகுதியினர் இன்னமும் பிரிகேடுகளில் இடம் பெறவில்லை.

லெனின்கிராட் ஒளியியல் இயந்திர கூட் டமைப்புத் தொழிற்சாலையில் மில்லிங் மெஷின் ஆப்பரேட்டர்களின் பிரிகேடு தலைவர் யூ. மித்தேல்கின், ‘‘உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நிர்வாகிகளி டமிருந்து என்ன எதிர்பார்க்கின்றீர்கள்’’ என்ற கேள்விக்குப் பின்வருமாறு பதிலளித் தார்: முக்கியமானது என்னெவெனில்

வேலை முழுவதையும் திட்டவட்டமாக ஆலோசித்து, விஞ்ஞான ரீதியில், பொருளாதார ரீதியில் ஒழுங்கமைக்க வேண்டும். இதில் இன்று பல குறைபாடுகள் உள்ளன. எல்லாவற்றையும் ஒரே தட்டில் வைக்கும் அம்சங்கள் உள்ளன. தேவையற்ற வரையளவுகளும் திறமையற்ற திட்டமிடலும் உழைப்பின் உற்பத்தித் திறன் உயர தடையாக உள்ளன. ஒரு தொழிலாளி அதிகமாக உழைத்து தேவையானதை விட கூடுதலாக உற்பத்தி செய்தாலும் இந்த கூடுதல் அளவை அடுத்த மாதக் கணக்கில் சேர்த்து, அவனுக்கு வழக்கமான சராசரி ஊதியத்தைதான் வழங்குவார்கள், அப்போதுதான் வேலைப் பிரிவின் ஊதிய நிதிக்குள் எல்லாம் அடங்கும் என்று ஒவ்வொரு தொழிலாளிக்கும் தெரியும். இத்தகைய முறை வடிவத்தில் மட்டுமே அரசு ஒழுங்கமைப்பின் அம்சமாகும். சாராம்சத்திலோ இது முன்முயற்சியுள்ளவர்களை, திறமையுள்ளவர்களை அலட்சியப்படுத்துகிறது.

உற்பத்தியை தீவிரப்படுத்தலின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்று, ஊதியத்தோடு ஒப்பிடுகையில் உழைப்பின் உற்பத்தித் திறன் விரைவாக வளர வகை செய்வதாகும். பின்வரும் அட்டவணை காட்டியபடி இத்தகைய வேகம் கடந்த 3 ஐந்தாண்டுகளில் மொத்தமாகத் தொழிற்துறையில் மட்டுமே பின்பற்றப்பட்டது. தேசியப் பொருளாதாரத்தின் மற்ற துறைகளில் ஊதி

யம் விரைவாக வளர்ந்தது. தொழிற்துறையிலும் கூட இந்த விகிதம் குறிப்பிட்ட வகையில் ஸ்திரமடைந்ததும், 11வது ஐந்தாண்டின் இரண்டாவது பாதியில் பல துறைகளிலும், கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்களிலும் உழைப்பின் உற்பத்தித் திறனை விட ஊதியம் விரைவாக அதிகரித்து வந்தது (அட்டவணை 6).

அட்டவணை 6

**உழைப்பின் உற்பத்தித் திறன்**
**1% அதிகரிக்கும் பொழுது**
**சராசரி ஊதிய அதிகரிப்பு (%இல்)**

| | 1971—1975 | 1976—1980 | 1981—1985 | 1971—1985 |
|---|---|---|---|---|
| தொழிற்துறை | 0.64 | 0.84 | 0.80 | 0.70 |
| விவசாயத் துறை (கூட்டுப் பண்ணைகள்) | 3.63 | 1.71 | 1.83 | 2.48 |
| கட்டுமானம் | 0.62 | 1.31 | 1.21 | 0.93 |
| இருப்புப் பாதை | 1.17 | | 1.62 | 2.05 |
| வர்த்தகம் | 0.91 | 2.04 | 0.65 | 1.20 |

ஊதிய அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி இந்த விகிதத்தை மாற்ற கடந்த காலத்தில் பன்முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் இவை உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் உழைப்பாளிகளின் அக்கறையைப் பாதித்தன, ஏனெனில் உழைப்பின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ற ஊதியத்தை வழங்கும் சோஷலிசக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த இவை இடையூறாய் இருந்தன. ஒவ்வொரு கட்டத்திலும் குறிப்பிட்ட ஊதிய உயர்வு வேகம் உருவாகிறது; குறிப்பிட்ட அளவை விட அதிகமாக வேலை செய்ததற்காக தொழிலாளர்களுக்கு ஊதியம் தரவும், நல்ல உயர்வான குறியீடுகளை அடைந்ததற்காக மற்ற வகையான உழைப்பாளிகளுக்கு ஊதியத்தை உயர்த்தவும் இது பயன்படும். ஊதியம் உயராவிடில் அது உழைப்பிற்கான ஊதிய முறையில் தேவையற்ற சமன்பாட்டிற்குத் தவிர்க்க இயலாதவாறு இட்டுச் செல்லும்.

விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தை துரிதப்படுத்தி, உழைப்பு ஒழுங்கமைப்பை மேம்படுத்தி அவற்றின் அடிப்படையில் உழைப்பின் உற்பத்தித் திறன் உயரும் வேகங்களை அதிகப்படுத்துவதுதான் மேற்கூறிய விகிதத்தை மேம்படுத்தும் உண்மையான வழியென்று முன்னணி உழைப்புக் கூட்டுகளின் அனுபவம் காட்டுகிறது. அப்போதுதான் திட்டவட்டமான உழைப்பிற்கேற்ப உழைப்பாளிகளின் ஊதியத்தை உயர்த்த தொழில் நிறுவனத்தால் உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்த முடியும்.

ஊதியத்தையும் பொருளாதார ஊக்கு

விப்பு நிதிகளையும் திட்டமிடும் பொழுது இலக்களவு முறைகளுக்கு மாறுவதானது தொழில் நிறுவனங்கள் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த ஸ்தாபன மற்றும் பொருளாதார ஊக்குவிப்புகளைப் பயன்படுத்த உதவுகிறது. அதாவது, ஐந்தாண்டுத் திட்டக் கடமைகளின் அடிப்படையில், உற்பத்தி அளவும், உழைப்பின் உற்பத்தித் திறனும் அல்லது மற்ற முக்கியக் குறியீடுகளும் ஒவ்வொரு சதவிகிதம் உயருவதற்கேற்ப ஊதிய, போனஸ் நிதிகளுக்கும் வீட்டு மற்றும் சமூக-கலாசார கட்டுமான நிதிக்கும் ஏற்ற நிதி ஒதுக்கீட்டு விகிதங்கள் முடிவு செய்யப்படுகின்றன. இதில் தொழில் நிறுவனங்களின் ஊதிய நிதி, மற்ற நிதிகளின் அளவுகள் குறைவதில்லை. இலக்களவை முடிவு செய்யும் பிரச்சினையைத் தொழிற்சாலையின் நிர்வாகம் தொழிற்சங்க ஸ்தாபனங்களுடன் சேர்ந்து தீர்க்கிறது, இங்கே உற்பத்தியின் சிறப்பியல்புகளும் ஒவ்வொரு உழைப்புக் கூட்டின் வேலைச் சூழலும் கவனத்தில் கொள்ளப்படும்.

இம்முறையில் பல ஊக்குவிப்பு அம்சங்கள் அடங்கியுள்ளன என்று சென்ற ஐந்தாண்டில் நடத்தப்பட்ட பரிசோதனைகள் மெய்ப்பித்தன. இந்த ஐந்தாண்டில் தொழிற்துறையும் மற்ற துறைகளும் புதிய நிர்வாக முறைகளுக்கு மாற்றப்படுவதையடுத்து இம்முறை பரவி வருகிறது.

புதிய நிர்வாக முறைகளுக்கு மாறியதும்,

ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளை செய்வதற்காக தொழிலாளர்கள், ஃபோர்மன்கள், பொறியியல்-தொழில்நுட்ப பணியாளர்களுக்கு கூடுதல் ஊதியம் தரும் உரிமை தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். இதனால் எங்கே ஊதியம் குறைந்து விடுமோ என்ற தயக்கமின்றி சேம இருப்புகளை அணி திரட்டுவதில் உழைப்பாளிகளுக்கு உள்ள அக்கறை அதிகரிக்கும் வாய்ப்பேற்படுகிறது, நிர்வாகிகள் ஊதியத்தை உழைப்பின் இறுதிப் பயனுடன் இணைக்க வழிகோலுகிறது. ஊதிய முறை அதிகம் நெளிவு சுழிவானதாக மாறுகிறது, இதனால் உயர் உற்பத்தித் திறனை உடைய உழைப்பிற்குப் பெரும் ஊதியத்தை வழங்கும் வாய்ப்பு கிட்டுகிறது.

## மூலாதாரங்களின் சிக்கனம்

எரிபொருள், எரிசக்தி, மூலப்பொருட்கள், மற்ற பொருட்களை விவேகமாகச் செலவிடுவது என்பது உற்பத்தியை தீவிரப்படுத்தலின் ஒரு முக்கிய அம்சமாகும். இன்றுள்ள உற்பத்தி மட்டத்தில் சமூக உற்பத்திப் பொருளுக்கான மூலப்பொருள் செலவினை 1% குறைத்தால் அதனால் தேசிய வருமானம் 8 பில்லியன் ரூபிள் கூடும். உழைப்பின் உற்பத்தித் திறன் 1% கூடினாலோ தேசிய வருமானம் 5 பில்லியன் ரூபிள் மட்டுமே அதிகரிக்கும். எனவே தொழிற்

அட்டவணை 7

## கனரகத் தொழிற்துறையில் முக்கியப் பொருட்களின் உற்பத்தி (1985)*

| | சோவியத் யூனியன் | சோவியத் யூனியன் % இல் | |
|---|---|---|---|
| | | அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் ஒப்பிடுகையில் | கிரேட் பிரிட்டன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்ஸ், இத்தாலி நாடுகளுடன் ஒப்பிடுகையில் |
| மின்சாரம், பில்லியன் கிலோவாட் மணி | 1,544.0 | 58.0 | 127.0 |
| தொழிற்துறையில் பயன்படுத்தப்படும் மின்சாரம், பில்லியன் கிலோவாட் மணி | 894.0 | 103.0 | 1.5 மடங்கு அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| எண்ணெய் (எரிவாயுத் திரட்டையும் சேர்த்து), மில்லியன் டன் | 595.0 | 136.0 | 4.5 மடங்கு அதிகம் |
| இயற்கை எரிவாயு, பில்லியன் கனமீட்டர் | 599.0 | 124.0 | 7.2 மடங்கு அதிகம் |
| நிலக்கரி (பண்ட), மில்லியன் டன் | 648.0 | 64.0 | 10.0 |
| வார்ப்பிரும்பு, மில்லியன் டன் | 110.0 | 248.0 | 156.0 |
| எஃகு, மில்லியன் டன் | 155.0 | 191.0 | 144.0 |
| இரும்புத் தாது, மில்லியன் டன் | 248.0 | 474.0 | 15.1 மடங்கு அதிகம் |
| இரசாயன உரம், மில்லியன் டன் | 33.2 | 158.0 | 259.0 |

* 1985இல் சோவியத் யூனியனின் தேசியப் பொருளாதாரம், மாஸ்கோ, பக்கங்கள் 588—590, 596 (ருஷ்ய மொழியில்).

| | சோவியத் யூனியன் | சோவியத் யூனியன் %இல் | |
|---|---|---|---|
| | | அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் ஒப்பிடுகையில் | கிரேட் பிரிட்டன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்ஸ், இத்தாலி நாடுகளுடன் ஒப்பிடுகையில் |
| மோனோஹைட்ரேட் சல்ஃபூயிரிக் அமிலம், மில்லியன் டன் | 26.0 | 72.0 | 287.0 |
| காஸ்டிக் சோடா, மில்லியன் டன் | 3.1 | 31.0 | 42.0 |
| இரசாயன இழைகள், ஆயிரம் டன் | 1,394.0 | 38.0 | 62.0 |
| செயற்கை கலவைகள், பிளாஸ்டிக், மில்லியன் டன் | 4.1 | 19.0 | 25.0 |

8*

| | | | |
|---|---|---|---|
| மரம், மில்லியன் கனமீட்டர் | 368.0 | 93.0 | 4.4 மடங்கு அதிகம் |
| மரத்துண்டுகள், மில்லியன் கனமீட்டர் | 102.0 | 131.0 | 4.4 மடங்கு அதிகம் |
| காகிதம், மில்லியன் டன் | 6.0 | 18.0 | 30.0 |
| சிமெண்ட், மில்லியன் டன் | 131.0 | 170.0 | 135.0 |

துறை வளர்ச்சி மட்டம் அதிகரிக்க அதிகரிக்க, மூலப்பொருள் செலவழிவின் சிக்கனம் உற்பத்தியை தீவிரப்படுத்தலின் முக்கியக் காரணியாகிறது.

எரிபொருள், இரும்புத் தாது எடுப்பு, இரும்பு கலந்த உலோகங்கள், இரசாயன உரம், சிமெண்ட் உற்பத்தி ஆகியவற்றில் சோவியத் யூனியன் நீண்ட காலமாகவே அமெரிக்க ஐக்கிய நாட்டையும், பிரான்ஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இத்தாலி ஆகிய நாடுகளின் கூட்டு உற்பத்தியையும் விஞ்சி முதலிடத்தை வகித்து வருகிறது (அட்டவணை 7). சோவியத் யூனியனில் தோண்டியெடுக்கும் தொழிற்துறை நன்கு வளர்ச்சியடைந்துள்ளது; இது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு கூட எரிபொருள் வளங்கள், இன்னும் சில மூலப் பொருட்களை சோஷலிச நாடுகளுக்கும் உலகச் சந்தைக்கும் கணிசமான அளவில் அனுப்புகிறது.

பதப்படுத்தும் தொழிற்துறையில் நிலைமை சோவியத் யூனியனுக்கு அவ்வளவு அனுகூலமானதாக இல்லை; இத்துறையில் சோவியத் யூனியன் தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலிருந்து கணிசமாகப் பின்தங்கியுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடு, மற்ற ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளுக்கு வரும் பெரும் எரிபொருள், மூலப்பொருட்களின் இறக்குமதியைக் கணக்கில் கொண்டால் சோவியத்

யூனியன் இவற்றை அவ்வளவு அதிகமாகப் பயன்படுத்தவில்லை என்பது தெரிய வரும். ஆனால் இந்த அம்சத்தை கணக்கில் கொண்டாலும் சோவியத் யூனியனில் ஒரு அலகு இறுதி உற்பத்திப் பொருள் மற்றும் தேசிய வருமானத்திற்கு, நவீன தொழில்நுட்பத்தை யுடைய முதலாளித்துவ நாடுகளை விட அதிகமான அளவு எரிபொருள், மூலப் பொருட்கள், மற்ற பொருட்கள் செலவிடப் படுகின்றன.

வரலாற்று ரீதியாக உருவாகியுள்ள சோவியத் பொருளாதாரத்தின் இந்நிலை இன்று இதன் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்த இதற்குள்ள வாய்ப்புகளுக்கு ஏற்ற தாக இல்லை. இன்று உற்பத்திப் பொருட் களுக்கான மூலப்பொருள் செலவழிவைக் குறைப்பது உற்பத்தியை தீவிரப்படுத்து வதன் முக்கிய அம்சமாகும்.

11வது ஐந்தாண்டின் ஆரம்பத்திலேயே சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டியும் சோவியத் அமைச்சரவை யும் ''மூலப்பொருள், எரிபொருள், எரிசக்தி, மற்ற மூலாதாரங்களை சிக்கனப்படுத்தி, விவேகமாகப் பயன்படுத்தும் பணியை வலுப்படுத்துவது'' (1981 ஜூன்) சம் பந்தமான தீர்மானத்தை நிறைவேற்றின. தேசியப் பொருளாதாரத்தின் வசமுள்ள மூலாதாரங்களைக் கொண்டே இறுதிப் பொருளின் உற்பத்தியைப் பெருக்க எவ் வளவு பெரும் வாய்ப்புகள் உள்ளன என்

பதன் மீது இதில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த மூலாதாரங்கள் சமுதாயத்திற்குப் பயன்படுமாறு செய்யும் கடமையும் இவற்றைப் பயன்படுத்துவதில் உள்ள குறைகளை அகற்றும் கடமையும் முன்வைக்கப்பட்டன. திட்டமிடுதல், பொருளாதார நடவடிக்கை, விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் பொருளாயத மூலாதாரங்களைச் சிக்கனப்படுத்தி, செயல்வன்மையோடு பயன்படுத்தத் துவங்குமாறு நிர்வாக உறுப்புகள், உற்பத்தியாளர் கூட்டுகளுக்கு கட்டளையிடப்பட்டது.

பொருளாயதச் செலவுகளைக் குறைப்பது தொடர்பாக முந்தைய காலகட்டத்தைவிட 11வது ஐந்தாண்டில் அதிக உயர்வான, சிக்கலான கடமைகள் முன்வைக்கப்பட்டன, சிக்கன நடவடிக்கைகள் அரசுத் திட்டங்கள், பல்வேறு துறைகள், தொழில் நிறுவனங்களின் திட்டங்களில் மேன்மேலும் பரவலாயும் முழுமையாகவும் பிரதிபலிக்கலாயின. எந்தெந்த உற்பத்திப் பொருட்களின் விஷயத்தில் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது குறித்த பட்டியல் நீண்டது; 1985இல் சோவியத் அரசு திட்டகமிஷன் வினியோகித்த பொருளாயத மூலாதாரங்களில் கிட்டத்தட்ட பாதிப் பகுதி சிக்கனப் பட்டியலில் வந்தது.

சிக்கனப்படுத்தலுக்கு அளிக்கப்படும் பொருளாதார ஊக்குவிப்பு அதிகப்படுத்தப்பட்டது—பொருளாயத மூலாதாரங்களின்

தன்மை, மதிப்பு, பற்றாக்குறை ஆகியவற்றைப் பொறுத்து சிக்கனப்படுத்தியதில் 25% முதல் 75% வரையிலான தொகையை போனஸ் அளிக்கப் பயன்படுத்தும் உரிமை தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. எந்தப் பொருட்களின் சிக்கனத்திற்காக போனஸ் வழங்கப்படுகிறதோ அவற்றின் பட்டியல் நீட்டிக்கப்பட்டது, போனஸ் வழங்கப்படும் உழைப்பாளிகளின் வட்டம் பரந்தது.

உற்பத்தியிலும், மக்களின் அன்றாட வீட்டு, வாழ்க்கையிலும் வரும் கழிவுப் பொருட்களைப் பொருளாதாரப் புழக்கத்தில் ஈடுபடுத்துவதன் மீது விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. இதற்கேற்ற கடமைகள் இன்று அமைச்சகங்கள், தொழில் நிறுவனங்களின் திட்டங்களில் நேரடியாக சேர்க்கப்படுகின்றன. கழிவுப் பொருட்கள், இரண்டாம்பட்ச மூலப்பொருட்கள், ஸ்தல மூலப்பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் உற்பத்தியாளர் கூட்டுகளுக்கு உள்ள அக்கறை உயர்த்தப்பட்டது.

11வது ஐந்தாண்டில் மூலப்பொருள் செலவழிவு சிறிது விரைவாகக் குறைந்தாலும் இப்பாதையில் முதலடிகள் மட்டுமே எடுத்து வைக்கப்பட்டுள்ளன. நவீன தொழில்நுட்பம், இயந்திரங்களைப் பயன்படுத்தியும், ஒரு சில தொழில் நிறுவனங்களில் காணப்படும் நிர்வாகக் குறைகளை

அகற்றியும் பெரும்பாலான துறைகளில் சிக்கனத்தை அடையலாம்.

உற்பத்தியில் கட்டமைப்புப் பொருட்கள், எரிபொருளின் செலவு மிகவும் அதிகம். உதாரணமாக, இயந்திரக் கட்டுமானத்தில் பயன்படும் உலோகத்தில் கால் பங்கு கழிவுப் பொருளாகிறது; ஒரு சில ஐந்தாண்டுகளாக இது கிட்டத்தட்ட குறையவேயில்லை.

12வது ஐந்தாண்டு திட்டத்தில் பின்வரும் கடமைகள் முன்வைக்கப்பட்டுள்ளன: ''பொருளாதாரத்தின் சிக்கனத்தை வலுப்படுத்தல், சகலவித மூலாதாரங்களையும் விவேகமாக, சிக்கனமாகப் பயன்படுத்தவும் இவற்றின் இழப்பைக் குறைக்கவும் உறுதியோடு பாடுபடுதல், மூலப்பொருட்களைச் சிக்கனப்படுத்தும் தொழில்நுட்பத்திற்கு, கழிவுப் பொருளற்ற தொழில்நுட்பத்திற்கு மாறுவதைத் துரிதப்படுத்தல், இரண்டாம் பட்ச மூலப்பொருட்களையும் உற்பத்தியில் கிடைக்கும் கழிவுப் பொருட்களையும் பயன்படுத்துவதை கணிசமாக மேம்படுத்தல், இவற்றைப் பதப்படுத்தும் தொழில்நுட்ப முறையை வளர்த்தல், இரண்டாம் பட்ச மூலப்பொருட்களை (மக்களிடமிருந்து வாங்குபவை உட்பட) பயன்படுத்துவதை மேம்படுத்தல், கொள்முதல் சேமிப்பு ஸ்தாபனங்களின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தை வலுப்படுத்தல், எரிபொருளையும் மற்ற மூலாதாரங்களையும் அன்

றாட வாழ்வில் சிக்கனமாகப் பயன்படுத்தல்''*.

1985ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990இல் தேசியப் பொருளாதாரத்தில், 200—230 மில்லியன் டன் ஒப்பு நிலை அலகுகளில் அங்கக இரசாயன எரிபொருளை சிக்கனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 75—90 மில்லியன் டன் அல்லது 37.5—39% அணுசக்தித் துறையை வளர்ப்பதால் சிக்கனப்படுத்தப்படும். 1985ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1990இல் 12—14 மில்லியன் டன் இரும்பு கலந்த ரோலிங் உலோகங்கள் சிக்கனப்படுத்தப்படும்; இது உற்பத்தி அதிகரிப்பை விடக் கூடுதலானது. கட்டுமானத் துறையில் இரும்பு கலந்த ரோலிங் உலோகம் செலவாவதை 13—15%மும், சிமெண்டை 8—10%மும், மரப்பொருட்களை 12%மும் குறைக்கத் திட்டமிடப்படுகிறது.

இக்கடமைகள் பெரிதும் கடினமானவை. இவற்றின் நிறைவேற்றத்திற்கு அந்தந்த துறைகள், தொழில் நிறுவனங்களில் உரிய ஸ்தாபன அமைப்பு மற்றும் பொருளாதாரப் பணி நடைபெறுகிறது. முந்தைய ஆண்டு

---

* ''1986—1990ஆம் ஆண்டுகள் மற்றும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சோவியத் யூனியனின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசைகள்'', **சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரசின் ஆவணங்கள்,** பக்கம் 279 (ருஷ்ய மொழியில்).

களில் சிக்கனப்படுத்துவது சம்பந்தமான திட்டக் கடமைகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. மூலாதாரங்களை சிக்கனப்படுத்துவது பற்றிய மையத் திட்டமிடல் 80ஆம் ஆண்டுகளில் கணிசமாக விரிவடைந்த போதிலும் இன்றும் இவ்வாறு மைய அளவில் சிக்கனப்படுத்துவது செலவுகளின் மொத்த மதிப்பில் பத்திலொரு பகுதியாக மட்டுமே இருக்கிறது. எனவே முன் போன்றே இன்றும் சிக்கனத் திட்டங்களின் நிறைவேற்றம், இப்பணி அந்தந்த துறைகள், தொழில் நிறுவனங்களில் எப்படி ஒழுங்கமைக்கப்படுகிறது என்பதால்தான் பெரும்பாலும் நிர்ணயிக்கப்படுகிறது.

எவ்வளவு மூலப்பொருட்களைச் செலவிட வேண்டும் என்பது பற்றிய திட்ட வரையளவுகள் ஆண்டுகள் செல்லச் செல்ல மேன் மேலும் கறாரானவைகளாகி வருகின்றன, இவை எல்லா இடங்களிலும் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன, தொழில்நுட்ப-பொருளாதார ரீதியில் மேலும் சிறப்பாக ஆதாரப் படுத்தப்படுகின்றன. எனவே இந்த வரையளவுகளின் நிறைவேற்றம் தொடர்பான ஸ்தாபன அமைப்புப் பணியும், இதில் உற்பத்தியாளர் கூட்டு முழுவதன் பங்கேற்பும் உற்பத்தியைத் தொழில்நுட்ப ரீதியில் நவீனமயப்படுத்துவதன் அங்கங்களாகும். இதில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது, தொழில்நுட்ப ரீதியிலும் மற்ற வகையிலும் பழுதாகிப் போன

இயந்திரங்களை மாற்றுவது, குறைபாடுகளையும் நேரடியான உற்பத்தியோடு தொடர்பற்ற செலவுகளையும் குறைத்தல் ஆகியவற்றின் மீது முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

மூலப்பொருட்களைச் சிக்கனப்படுத்தும் வழிகள் எல்லா மட்டங்களிலும்—இவற்றை எடுப்பதிலிருந்து, உற்பத்தியில் பயன்படுத்துவது மற்றும் வீடுகளில் அன்றாட வாழ்வில் மக்கள் பயன்படுத்துவது வரை—உள்ளன.

நிபுணர்களின் மதிப்பீட்டின்படி, சுரங்கத் தொழிற்துறையில் மூலப்பொருளைக் கூட்டாக பதப்படுத்தும் முறையைப் பயன்படுத்தினால், குறைந்தபட்ச கூடுதல் செலவில் உற்பத்தியை 25—30% கூட்டும் வாய்ப்புள்ளது. இது பதப்படுத்தும் தொழிற்துறை மற்றும் கட்டுமானத் துறையின் மூலப்பொருள் சப்ளையை மேம்படுத்த பெரிதும் உதவும்.

இரண்டாம்பட்ச மூலப்பொருட்களைப் பொருளாதார புழக்கத்தில் ஈடுப்படுத்துவது சம்பந்தமாக முந்தைய காலகட்டத்தில் துவக்கப்பட்ட பணியைத் தொடர வேண்டும். மூலப்பொருள் சமன்பாட்டில் இவற்றின் பங்கை ஒரு சில மடங்கு கூட்டலாம்.

உக்ரேனியக் குடியரசில் கடந்த ஐந்தாண்டில் இரண்டாம்பட்ச மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதில் நல்லனுபவம் கிட்டியுள்ளது. சோவியத் யூனியன் பூராவையும் எடுத்

துக் கொண்டால் 40 விதமான இரண்டாம் பட்ச மூலப்பொருட்களும் கழிவுப் பொருட் களும்தான் உற்பத்தியில் பயன்படுத்தப்படு கின்றன என்றால் உக்ரேனில் 85 விதமான பொருட்கள் இவ்வாறு பயன்படுத்தப்படு கின்றன. இக்குடியரசின் தொழிற்துறை ஐந் தாண்டில் 5,50,000 டன் இரண்டாம்பட்ச மூலப்பொருட்களையும் தொழிற்துறை கழிவுப் பொருட்களையும் பயன்படுத்தியது; இது முந்தைய காலகட்டத்தை விட 1.3 மடங்கு அதிகம். மொத்த நுகர்வில் இவற் றின் பங்கு 12.2% வரை (முக்கிய மூலப் பொருட்களுக்குச் சமமான விலையில்) உயர்த்தப்பட்டுள்ளது. 11வது ஐந்தாண் டில் உற்பத்திப் பொருட்களுக்கான மூலப் பொருள் செலவழிவின் குறைப்புக் கடமை கள் கிட்டத்தட்ட இரு மடங்கு கூடுதலா யிருந்தன. 12வது ஐந்தாண்டில் மூலப் பொருட்கள், எரிபொருள், எரிசக்தியைச் சிக்கனப்படுத்தியும், உற்பத்திக் கழிவுப் பொருட்கள் மற்றும் இரண்டாம்பட்ச மூலப் பொருட்களைப் பயன்படுத்தியும் 9—10 பில்லியன் ரூபிள் மதிப்புள்ள அடிப்படை மூலப்பொருட்களை சிக்கனப்படுத்த திட்ட மிடப்பட்டுள்ளது.

பல கழிவுப் பொருட்கள் மற்றும் தேவை யற்ற பொருட்களைப் பயன்படுத்துவதை அதிகரிக்க உதவும் உற்பத்தி சோவியத் நாட் டின் மற்ற யூனியன் குடியரசுகளிலும் பொரு ளாதார பிரதேசங்களிலும் வளர்ச்சியடை

யும். சராசரியாக இரண்டாம்பட்ச மூலப் பொருட்களின் பங்கை 10—12% வரை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

பொருளாயத-தொழில்நுட்ப சப்ளையை மாற்றியமைப்பதன் மூலம் மூலப்பொருள் செலவழிவைக் குறைக்கும் பொருளாதார முறைகள் அதிகமாகப் பயன்படுத்தப்படும். 1930ஆம் ஆண்டுகளின் துவக்கத்திலிருந்து மூலாதாரங்கள் வரையிலக்குகளின்படி வழங்கப்பட்டன; இந்த இலக்களவுகளை சப்ளை உறுப்புகள், அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தி திட்டங்களின் அடிப்படையில் தொழில் நிறுவனங்களுக்கு அளித்தன. இதன்படி தொழில் நிறுவனங்கள் நுகர்வாளர்களுக்குத் தேவையான உற்பத்திப் பொருட்களை அனுப்புகின்றன. இன்று சோவியத் அரசு சப்ளை ஸ்தாபனத்தின் மூலம் சப்ளை செய்யப்படும் பொருட்களின் கால் பங்கு, தொழில் நிறுவனங்களுக்கு இடையில் ஐந்தாண்டு காலத்திற்கு ஏற்படும் நேரடியான நீண்ட தொடர்புகளின் மூலம் செல்கிறது. கணிசமான அளவு மரப்பொருட்கள், சிமெண்ட், இரும்பு கலந்த ரோலிங் உலோகங்கள், இன்னும் சில பொருட்கள் ஆகியவை இப்படித்தான் சப்ளையாகின்றன. 1987ஆம் ஆண்டு முதல் சப்ளை ஸ்தாபனங்கள் மொத்த வியாபார அடிப்படையில் இயங்கும். பல்லாயிரக் கணக்கான தொழில் நிறுவனங்களும் ஸ்தாபனங்களும் இவ்வழியில்தான் மூலாதாரங்களைப் பெறும். இது

இன்றுள்ள பெரும் சுமையான, பல்கட்ட வினியோக முறையை மாற்றும்.

புதிய முறையின் சாரம் என்னவெனில், சப்ளை சம்பந்தமான எல்லா பிரச்சினை களிலும் (பெரும் சிக்கலான உபகரணங் களைத் தவிர) தொழில் நிறுவனம் ஒரு குறிப்பிட்ட பிரதேச சப்ளை உறுப்புடன் மட்டுமே தொடர்பு கொள்ளும் என்பதா கும். இன்று தொழில் நிறுவனம் திட்ட ஆண்டிற்கு 6—8 மாதங்கள் முன் சப்ளை உறுப்புகளுக்குத் தன் கோரிக்கையை வைக்க வேண்டும். புதிய முறையில் தொழில் நிறு வனம் தனக்கு வசதியான நேரத்தில் ஆர் டரைத் தந்தாலே போதும். இது உடனுக் குடன் சப்ளை செய்யும் வாய்ப்பை அதிகப் படுத்தும், மூலப்பொருட்களின் சப்ளையில் உள்ள இலாக்கா தடைகளை அகற்றும். அவசியமான பொருட்களை விரைவாகப் பெறும் வாய்ப்பு தொழில் நிறுவனங்களுக்கு கிட்டும்; இவற்றால் நல்ல கையிருப்புகளை ஏற்படுத்த முடியும், முக்கியமானது என்ன வெனில் தங்கள் தேவைகளை முழுமை யாகப் பூர்த்தி செய்ய முடியும், அக்கறையை அதிகப்படுத்தி, அதே நேரத்தில் உற்பத்தி சாதனங்களைப் பயன்மிகு வகையில் செல வழிப்பதில் உள்ள பொருளாதாரப் பொறுப்பை உயர்த்த முடியும்.

## ஏற்கெனவேயுள்ள உற்பத்தியின் பயனைக் கூட்டுதல்

உற்பத்தியை தீவிரப்படுத்தல் என்பது மூலாதாரங்களையும் உழைப்பையும் பயன் படுத்துவதை மேம்படுத்தும் கடமை யோடு கூட ஏற்கெனவே தோற்றுவிக்கப் பட்டுள்ள உற்பத்தி உள்ளாற்றல் மற்றும் அதை மேம்படுத்துவதற்கான முதலீடுகளின் செயல்வன்மையை உயர்த்தும் கடமையை யும் முன்வைக்கிறது.

இந்த உள்ளாற்றல் மிகப்பெரும் அளவு களை அடைந்தது. 1986 ஆரம்பத்தில் தேசியப் பொருளாதாரத்தில் அடிப்படை உற்பத்தி சாதனங்களின் அளவு 1,570 பில் லியன் ரூபிளாக இருந்தது. 1970ஆம் ஆண் டுடன் ஒப்பிடுகையில் இது மும்மடங்கு அதி கரித்திருந்தது. இதன் துறை ரீதியான, பிர தேச ரீதியான கட்டமைப்பில் பெரும் மாற் றங்கள் ஏற்பட்டு வருகின்றன. விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் தாக்கம், இயந்திரக் கட்டுமானத்தின், குறிப்பாக இதன் நவீனத் துறைகளின், இது தவிர இரசாயன, இரசாயன-எண்ணெய் தொழிற் துறை மற்றும் அணு எரிசக்தித் துறையின் அடிப்படை உற்பத்தி சாதனங்களின் துரித மான வளர்ச்சியில் வெளிப்படுகிறது. சோவியத் பொருளாதார வளர்ச்சியின் சமூகத் திசையமைவு வலுப்பட்டதானது விவசாயத் துறை மற்றும் விவசாயத்-

தொழிற்துறை இணையத் துறைகளின் பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளம் உறுதியடைவதில் தென்படுகிறது.

உற்பத்தி சக்திகளின் இட அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் சோவியத் நாட்டின் கிழக்குப் பகுதிகளில் உற்பத்தி உள்ளாற்றல்கள் துரிதமாக வளர்ச்சியடைந்ததில் நன்கு தெரிகின்றன. 70ஆம் ஆண்டுகளில் மேற்கு சைபீரியா நாட்டின் முக்கிய எரிபொருள்-எரிசக்தி மையமாகியது. தோண்டியெடுக்கும் தொழிற்துறையின் கிட்டத்தட்ட எல்லா துறைகளும் கிழக்குப் பகுதியில் வளர்ச்சியடைந்தன. நடப்பு ஐந்தாண்டில் அங்கே பதப்படுத்தும் துறைகளும் வேகமாக வளர்ந்து வருகின்றன. சென்ற ஐந்தாண்டில் பைக்கால்-அமூர் இருப்புப் பாதையின் முக்கியப் பகுதி கட்டி முடிக்கப்பட்டது; இருப்புப் பாதை பூராவும் இயங்கத் துவங்கி விட்டது, இப்பாதையின் பாதிப்பகுதி ஏற்கெனவே நிரந்தரமாக இயங்குகிறது.

முதலீட்டுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் மொத்தத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. 12வது ஐந்தாண்டில் முதலீடுகள் பிரம்மாண்டமான செயல்திட்டங்களின் நிறைவேற்றத்திலும், நடைமுறையில் சோதிக்கப்பட்ட விஞ்ஞான, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை விரைவாக கிரகிப்பதிலும், விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் துரிதப்படுத்தலை நிர்ணயிக்கும் துறைகளில் அடிப்படை உற்பத்தி சாதனங்

களைப் பெருக்குவதிலும், ஏற்கெனவே இயங்கும் தொழில் நிறுவனங்களை சீரமைப்பதற்கு நிதிகளை முக்கியமாகப் பயன்படுத்துவதிலும் குவிக்கப்படுகின்றன.

**எல்லா துறைகளும் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாறுவதானது, உற்பத்தி உள்ளாற்றலை விரிவுபடுத்தி, பயன்படுத்தும் பிரச்சினைகளின் விஷயத்திலான புதிய அணுகுமுறையின் அடிப்படையிலானது.** முன்னர் பல துறைகளில் அளவுப் பெருக்கத்தின் மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டதெனில் இப்போது தர மேம்பாட்டின் மீது எல்லா முயற்சிகளும் திசை திருப்பப்படுகின்றன.

கடந்த சில ஐந்தாண்டுகளில் அடிப்படை உற்பத்தி சாதனங்களை வளர்ப்பதானது, இவற்றைச் செயல்வன்மையோடு பயன்படுத்தும் பணியை கணிசமாக விஞ்சியிருந்தது. கடந்த 15 ஆண்டுகளில் உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு தேசியப் பொருளாதாரத்தில் மூன்றிலொரு மடங்கும் தொழிற்துறையில் கிட்டத்தட்ட 30%மும் குறைந்துள்ளதில் இது வெளிப்படுகிறது (அட்டவணை 8).

70ஆம் ஆண்டுகளில் உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு குறைவது துரிதமடைந்து கிட்டத்தட்ட தேசியப் பொருளாதாரத்தின் எல்லா துறைகளுக்கும் பரவியது. அடிப்படை உற்பத்தி சாதனங்களைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவது தொடர்பாக 10, 11வது ஐந்தாண்டுகளில் முன்வைக்கப்பட்ட

அட்டவணை 8

### தேசியப் பொருளாதாரத்தில் உற்பத்தி சாதனங்களின் மீள்வரவின் மாற்றம்*

| குறியீடுகள் | 1975 1970ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் %இல் | 1980 1975ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் %இல் | 1985 1980ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் %இல் | 1985 1970ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் %இல் |
|---|---|---|---|---|
| ஒரு ரூபிள் அடிப்படை உற்பத்தி சாதனங்களுக்கான தேசிய வருமானம் | 87 | 87 | 87 | 67 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு ரூபிள் அடிப்படை உற்பத்தி சாதனங்களுக்கான உற்பத்தி: | | | | |
| தொழிற்துறை உற்பத்திப் பொருட்கள் | 95 | 86 | 87 | 69 |
| விவசாயத்துறை உற்பத்திப் பொருட்கள் | 66 | 75 | 83 | 41 |
| கட்டுமானப் பணி | 80 | 67 | 78 | 42 |
| சரக்குப்போக்குவரத்து | 94 | 89 | 84 | 70 |

* 1985இல் சோவியத் யூனியனின் தேசியப் பொருளாதாரம், பக்கங்கள் 36, 48(ருஷ்ய மொழியில்).

கடமைகள் நிறைவேற்றப்படவில்லை— நடைமுறையில் உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டதை விட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு வேக மாகக் குறைந்தது.

கடந்த பத்தாண்டுகளாக எல்லா துறை களிலும் உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு குறைந்துள்ளது (9வது ஐந்தாண்டில் இது இயந்திரக் கட்டுமானத் துறையிலும், இர சாயன, எண்ணெய்-இரசாயனத் துறைகளி லும் அதிகரித்தது). இது குறிப்பாகப் பெரி தும் (கடந்த 15 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 2.5 மடங்கு) விவசாயத் துறையிலும் கட்டு மானத்திலும் குறைந்துள்ளது. இவை தொழிற்துறைக்குப் பின்னர்தான் துரித வளர்ச்சிப் பாதைக்கு வந்தன; இவற்றில் பல உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளை இயந் திரமயப்படுத்தும் ஆரம்பப் பணி தொடர்ந் தது. இது தவிர, 1978ஆம் ஆண்டிற்குப் பிந்தைய காலகட்டத்தில் சாகுபடி குறைந்த தால், உற்பத்தி சாதனங்களின் மீள்வரவு குறைவது இன்னமும் வேகமாக நடந்தது. சோவியத் நாட்டில் ஸ்திரமான விவசாய உற்பத்திக்கு வகை செய்ய அதிகம் செல வாகும் என்பதை மறக்கக் கூடாது. ஏனெ னில் சோவியத் நாட்டில் உள்ள விவசாயத் திற்கேற்ற நிலப்பரப்பின் உயிரியல் வளம் (ஆண்டு மொத்த வெப்பநிலை, மழையளவு, கோடைக் காலம், மற்ற இயற்கை தட்ப வெப்பக் காரணிகளால் இது நிர்ணயிக்கப்

படுகிறது) அமெரிக்க ஐக்கிய நாட்டின் உயிரியல் வளத்தை விட 2.4 மடங்கு குறைவானது.

உற்பத்தி சாதனங்களின் மீள்வரவின் மாற்றம் பல காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது; இவற்றின் தாக்கம் ஒரே மாதிரியானதல்ல. இது குறைவதற்கான புறவயக் காரணிகளாவன: உற்பத்தியை இயந்திரமயப்படுத்தும் செலவுகளின் அதிகரிப்பு, பொருளுற்பத்தி அதிகரிப்பிற்கு வழிகோலாத உடலுழைப்பைக் குறைத்தல், அடிப்படை உற்பத்தி சாதனங்களில் அதிக முதலீடு தேவைப்படும் எரிபொருள்-எரிசக்தி மற்றும் மூலப்பொருள் துறைகளின் பங்கையும் விவசாயத் துறையின் பங்கையும் உயர்த்தல். உதாரணமாக, தொழிற்துறை பூராவும் உள்ள சராசரி உற்பத்தி சாதனங்களின் மீள்வரவை விட சுரங்கத் துறையில் இது 3.5 மடங்கு குறைவு; இக்குறைவும் வேகமாக நடந்தது. விவசாயத் துறையிலோ இக்குறியீடு தொழிற்துறையில் உள்ளதை விட 2.5 மடங்கு குறைவு.

அதே நேரத்தில் ஒரு ரூபிள் அடிப்படை உற்பத்தி சாதனங்களுக்கான பொருளுற்பத்தியை உயர்த்த உதவும் சில உந்து சக்திகளும் உள்ளன; இவை விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி ஒழுங்கமைப்பை மேம்படுத்துவது சம்பந்தமானவை.

இக்குறியீடு குறையக் காரணமான புற

வயக் காரணிகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது சொல்லாமலேயே அமையும். எனவே உற்பத்தி சாதனங்களின் மீள் வரவு குறைவதற்கு, அடிப்படை உற்பத்தி சாதனங்கள் மோசமாகப் பயன்படுத்தப்படுவதும், அதுவும் இவற்றின் செயல்வன்மை குறைவதும்தான் முழுக் காரணமென்று கூறக் கூடாது என்பதுதான் முதல் நடைமுறை முடிவாகும். அதே பொழுது புறவயக் காரணிகள் என்றழைக்கப்படுபவற்றின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தக் கூடாது. உற்பத்தி ஒழுங்கமைப்பில் உள்ள குறைபாடுகளும், தொழில் நுட்ப, கட்டமைப்புக் கொள்கையின் தவறுகளும், தொழில்நுட்ப முன்னேற்றத்தை உரியபடி மதிப்பிடாததும்தான் அந்தந்த துறைகளில் உற்பத்தி சாதனங்களின் மீள் வரவு குறையக் காரணங்களாகும். இவை பெரும்பாலும் அகவயக் கா்ரணிகளாகும்; அதாவது இவை நிர்வாகத் திறமை, உழைப்பின் பாலான அணுகுமுறை, உற்பத்தி உள்ளாற்றல்களைப் பயன்படுத்தும் பிரச்சினைகளின் மீதான கவனம் ஆகியவற்றைப் பொறுத்தவை; எனவே உற்பத்தி சாதனங்களின் மீள்வரவை உயர்த்தும் வழிகளை நன்கு முழுமையாக பயன்படுத்த வாய்ப்புள்ளது.

நடவடிக்கைகளின் செயல்வன்மையை உயர்த்துவதன் மூலம் புனருற்பத்தியின் விலையேற்றக் காரணிகளையும், உற்பத்தி

சாதனங்களின் மீள்வரவைக் குறைக்கும் மற்ற காரணிகளையும் குறைந்தபட்சமாக்க வேண்டும்; அதே சமயத்தில் விஞ்ஞான-தொழில்நுட்ப, கட்டமைப்பு, முதலீட்டு மற்றும் பொருளாதார உந்து சக்திகள் (இவை உற்பத்தி சாதனங்களின் மீள்வரவின் ஸ்திரநிலைக்கும் வளர்ச்சிக்கும் உதவும்) கணிசமாக தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

அடிப்படை உற்பத்தி சாதனங்களின் புனருற்பத்தியின் எல்லா கட்டங்களிலும் உற்பத்தி உள்ளாற்றலின் பயனைக் கணிசமாக உயர்த்த வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய வாய்ப்புகள் பெரும்பாலான துறைகளில், குறிப்பாக பதப்படுத்தும் துறைகளில் உள்ளன.

அடிப்படை உற்பத்தி சாதனங்களைத் தோற்றுவிக்கும் பொழுது அவற்றின் மீள்வரவை அதிகப்படுத்தும் வழிகளை ஒன்றுதிரட்டுவது சம்பந்தமாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரஸ் மூன்று பெரிய கடமைகளை முன்வைத்தது: அடுத்த பத்தாண்டில் கட்டுமான காலக்கெடுவைக் குறைந்தபட்சம் 2 மடங்கு குறைக்க வேண்டும்; கட்டப்படும் தொழில் நிறுவனங்கள் மற்ற அமைப்புகளின் திட்ட நகல்களின் தொழில்நுட்ப-பொருளாதார அடிப்படையை அடியோடு மேம்படுத்த வேண்டும்; ஏற்கெனவே இயங்கி வரும் தொழில் நிறுவனங்களைத் தொழில்நுட்ப

ரீதியாகப் புதுப்பித்து, மறுகட்டமைப்பதன் மீது கவனம் செலுத்த வேண்டும்.

எந்த ஒரு குறிப்பிட்ட காலகட்டம் முடிந்ததும் முதலீடுகள் பொருளுற்பத்தியின் அதிகரிப்பைத் தரத் துவங்குமோ அந்தக் காலகட்டத்தை கட்டுமான காலக்கெடுக்கள் நிர்ணயிக்கின்றன; இவ்வாறாகத் தான் கட்டுமான காலக்கெடு உற்பத்தி சாதனங்களின் மீள்வரவுக் குறியீடுகள் மீது தாக்கம் செலுத்துகிறது. இந்த கட்டுமான காலக்கெடு எவ்வளவுக்கெவ்வளவு குறைவோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக முதலீடுகள் உற்பத்தி சாதனங்களிலும் உற்பத்தித் திறனிலும் பயனைத் தரத் துவங்குகின்றன. 1984இல் கட்டி முடிக்கப்பட்ட 753 பெரிய தொழில் நிறுவனங்களில் மூன்றிலொரு பகுதியைக் கட்டி முடிக்க குறிப்பிட்ட காலக்கெடுவை விட 2 அல்லது அதற்கு அதிகமான நேரமாயிற்று. சராசரியாக 3—3.5 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட வேண்டிய தொழில் நிறுவனங்களைக் கட்டி முடிக்க நடைமுறையில் 9 ஆண்டுகளாகின்றன. நீண்டகாலக் கட்டுமானம் பொருளாதாரத்தின் மீது சுமையாக விழுகிறது, இதைப் பின்னோக்கி இழுக்கிறது, குறைவான வளர்ச்சி வேகங்களுக்கும் குறைந்த செயல்வன்மைக்கும் சீரிசைவின்மைக்கும் இட்டுச் செல்கிறது.

கட்டுமான காலக்கெடுவை 1 ஆண்டு குறைத்தால் அது கூடுதலாக 10—12 பில்

லியன் ரூபிள் தேசிய வருமானத்தைத் தரும். சென்ற ஐந்தாண்டில் தேசிய வருமானத்தின் சராசரி ஆண்டு அதிகரிப்பு சுமாராக 15 பில்லியன் ரூபிளாக இருந்தது என்பதை கவனத்தில் கொண்டால் மேற்கூறிய தொகை எவ்வளவு பெரியது என்பது நன்கு விளங்கும். எனவே கட்டுமான காலக்கெடுவை 1 ஆண்டு குறைப்பதானது தேசிய வருமானத்தைக் கிட்டத்தட்ட 1.75 மடங்கும் உற்பத்தி சாதனங்களின் மீள்வரவுக் குறியீட்டை 2 கோப்பெக்கும் உயர்த்துவதற்குச் சமமாகும்.

புதிய தொழில் நிறுவனங்கள், அமைப்புகளின் கட்டுமானக் காலக்கெடுவைக் குறைக்கும் முக்கிய நிபந்தனை முதலீடுகளைக் குவிப்பதும், கட்டுமான அரங்கை குறுக்குவதுமாகும். சோவியத் நாட்டில் ஒரே சமயத்தில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட பெரிய, சிறிய அமைப்புகள் கட்டப்படுகின்றன. இதனால் மூலாதாரங்களும் ஆள்பலமும் தேவையின்றி சிதறிக் கிடக்கின்றன. எனவே 1987 முதல் கட்டுமானக் காலக்கெடுவிற்கு கறாராக ஏற்றபடிதான் கட்டுமானம் திட்டமிடப்படுகிறது. அவ்வளவு அதிக முக்கியமில்லாத அமைப்புகளும், பழைய திட்டநகல்களின்படி கட்டப்படுபவைகளும் நிறுத்தி வைக்கப்படுகின்றன; இதனால் ஏற்கெனவே ஆரம்பமான முக்கிய கட்டுமானங்களை விரைவாகக் கட்டி முடிக்க உதவும் வகையில் ஆள்பலத்தையும் மூலாதாரங்

களையும் மறுவினியோகம் செய்யலாம். இந்நடவடிக்கை சிக்கலானது, இதனால் தனிப்பட்ட துறைகள், பிரதேசங்களின் வளர்ச்சி பற்றி ஏற்கெனவே எடுக்கப்பட்ட பல முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிவரும். என்றாலும் இதைத் தாமதப்படுத்தக் கூடாது. இந்த நடவடிக்கையை மேற்கொண்டால், முக்கிய தொழில் நிறுவனங்களின் கட்டுமானத்தைத் துரிதப்படுத்தலாம் என்பதோடு கூட, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் கட்டுமானங்களையும் விரைவாக முடிக்கலாம்.

கட்டுமான காலக்கெடுவையும் கட்டுமான செலவுகளையும் யதார்த்தத்தில் குறைக்க முடியும் என்பதை பைலோருஷ்யாவின் அனுபவம் காட்டுகிறது. இக்குடியரசில் 11வது ஐந்தாண்டில் ஒரே நேரத்தில் கட்டப்படும் அமைப்புகளின் எண்ணிக்கை 21%மும், கட்டுமான காலக்கெடு 1.4 மடங்கும் குறைக்கப்பட்டன. இதன் பயனாய் தொழில் நிறுவனங்கள் இயக்குவிக்கப்படுவது, முதலீடுகளின் அதிகரிப்பை கிட்டத்தட்ட 1.3 மடங்கு விஞ்சியது; கட்டிமுடிக்கப்படாத கட்டுமானங்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட திட்ட வரம்பிற்குள் இருக்கிறது.

இன்னொரு அம்சமும் இங்கு குறிப்பிடத்தக்கது: கட்டுமான காலக்கெடுவைக் குறைப்பதானது, ஏற்கெனவே ஏற்கப்பட்ட தொழில்நுட்ப முடிவுகள் பழையதாகிப் போகாமலிருப்பதற்கான சிறந்த உத்தர

வாதமாகும். தொழில்நுட்ப முன்னேற்றம் இடையறாமல் நடந்து கொண்டேயிருக்கிறது, ஆண்டுதோறும் புதிய, அதிக செயல் வன்மையுள்ள, சிக்கனமான இயந்திரங்களும் தொழில்நுட்பமும் தோன்றுகின்றன. திட்ட நகல்களில் உள்ள தொழில்நுட்ப, பொறியியல் கருத்துகள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக அவை பொருளாதார ரீதியாக ஈடுகட்டப்படும்.

திட்ட வடிவமைப்பு மற்றும் கட்டுமான ஸ்தாபனப் பணியாளர்களின் தோள்கள் மீது புதிதாக தோற்றுவிக்கப்படும் இயந்திரங்களின் செயல்வன்மைக்கும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குமான எவ்வளவு பெரிய பொறுப்பு உள்ளது என்று இதிலிருந்து விளங்குகிறது. இவர்களுடைய உழைப்பின் முடிவுதான் உற்பத்தியின் சிக்கனத்தையும் புதிய தொழில் நிறுவனங்களில் உற்பத்தி சாதனங்களின் மீள்வரவையும் நேரடியாக நிர்ணயிக்கிறது. திட்ட நகல்களின் தரத்தை மேம்படுத்துவதானது கட்டுமான காலக்கெடுவையும் செலவுகளையும் குறைக்க உதவுவதோடு கூட, அடிப்படை உற்பத்தி சாதனங்களை இயக்குவிப்பதோடு தொடர்புடைய செலவுகளை குறைந்தபட்சமாக்கவும், இறுதியாக உற்பத்திப் பொருட்களின் அடக்கவிலையில் அடங்கும் எல்லா செலவுகளையும் குறைக்கவும் உதவுகிறது.

சோவியத் பொறியியல் கட்டமைப்பாளர்கள், வடிவமைப்பாளர்களின் பல பயன் மிகு திட்ட நகல்கள் சோவியத் நாட்டிலும் அயல்நாடுகளிலும் நன்கு பிரபலமானவை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் கட்டுமானத்தின் பொருளாதார அம்சம் உரியபடி மதிப்பிடப்படுவதில்லை, சில தொழில் நிறுவனங்கள் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்ட திட்ட ஆவணங்களின்றி கட்டப்படுகின்றன, சில நேரங்களில் செலவுகளைப் பொருட்படுத்தாமல் பழைய திட்டங்களின்படி கட்டுமானம் நடைபெறுகிறது. திட்ட நகல்கள் நவீன விஞ்ஞான-தொழில்நுட்ப மட்டத்திற்கு ஏற்றவையாக இருக்கவும், கட்டுமானத் தொழிலாளர்கள் திட்ட நகலின் குறியீடுகளை நிறைவேற்றவும் திட்ட வடிவமைப்பு ஸ்தாபனங்கள் நேரடியான பொருளாதாரப் பொறுப்பை வகிப்பதில்லை. பல விஞ்ஞான மற்றும் திட்ட வடிவமைப்பு நிறுவனங்களின் பணி விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் கோரிக்கைகளுக்கு இதுவரை ஏற்றதாக இல்லை. அமைச்சகங்கள், சோவியத் அரசு கட்டுமான ஸ்தாபனம் ஆகியவற்றின் பலவீனமான கண்காணிப்பின் பின்னணியில் இவை தயாரிக்கும் திட்ட நகல்கள் தொடர்ந்து தரக்குறைவானவையாகவே இருக்கின்றன.

12வது ஐந்தாண்டில் ஏற்கெனவே இயங்கும் தொழில் நிறுவனங்களைத் தொழில்

நுட்ப ரீதியில் புதுப்பித்து, மறுதிட்ட அமைப்புப் பணிக்கு முன்னுரிமை அளிக்கப் படுவதன் தொடர்பாய், உற்பத்தி உள்ளாற் றலை வளர்த்து, வலுப்படுத்தும் கொள்கை அடியோடு மாறி வருகிறது. தொழிற்துறை மயப்படுத்தும் கட்டத்திலிருந்து துவங்கி சோவியத் நாட்டில் புதிய தொழில் நிறு வனங்களின் கட்டுமானத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இது அப்போது அவசிய மானதாயிருந்தது, ஏனெனில் நாட்டில் போதுமான உற்பத்தி அடித்தளமோ, பல முக்கியத் துறைகளோ இருக்கவில்லை, தொழில்நுட்ப-பொருளாதார ரீதியில் நாடு பின்தங்கியிருந்தது. ஆனால் இந்த அடித் தளம் தோற்றுவிக்கப்பட்ட பின், ஏற் கெனவே கட்டப்பட்ட தொழில் நிறுவனங் களைத் தொழில்நுட்ப ரீதியில் புதுப் பிக்கும் அவசியம் உடனடிக் கடமையாக முன்நின்ற பொழுது இப்பணி இழுத்தடிக் கப்பட்டது.

ஏற்கெனவே இயங்கி வரும் உற்பத்தி யைத் தொழில்நுட்ப ரீதியில் புதுப்பிப் பதற்குச் சாதகமாய் முதலீடுகளின் கட்ட மைப்பை மாற்றியமைப்பது எவ்வளவு விவேகமானது என்பது பற்றி நீண்ட கால மாகவே கூறப்பட்டு வருகிறது. சில தொழிற் துறைகளின் தொழில் நிறுவனங்களுக்கு பயன்மிகு வகையில் சீரமைப்பதில் நல்ல அனுபவம் கிட்டியுள்ளது. இதன் பொரு ளாதார அனுகூலங்களும் கண்கூடு. சோவியத்

கட்டுமான வங்கி சென்ற ஐந்தாண்டின் நடுப் பகுதியில் 3,500 கட்டுமானங்களில் கணக்கெடுப்பு நடத்தியதில், ஒரு ரூபிள் உற்பத்திப் பொருளுக்கான முதலீடுகள் புதிய கட்டுமானங்களில் 1.21 ரூபிளாயும், ஏற்கெனவே இயங்கும் தொழில் நிறுவனங் களை விரிவுபடுத்திய இடங்களில் 1.09 ரூபிளாயும், மறுகட்டமைப்பு நடந்த இடங் களில் 0.98 ரூபிளாயும், தொழில்நுட்ப ரீதி யாகப் புதுப்பிக்கப்பட்ட இடங்களில் 0.83 ரூபிளாயும் இருந்தது தெரிய வந்தது. புதிய தொழில் நிறுவனங்களைக் கட்டுவதை விட, தொழில்நுட்ப ரீதியாகப் புதுப்பித்து, மறு கட்டமைப்பிற்கு ஆகும் செலவுகள் குறைந்த காலகட்டத்திலேயே ஈடுகட்டப்படுகின்றன.

சென்ற ஐந்தாண்டில்தான் மறுகட் டமைப்புத் திசையில் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு முந்தைய காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் சென்ற ஐந்தாண்டில் மறுகட்டமைப்பிற்கான முத லீடுகள் 1.4 மடங்கு அதிகரித்தன. இது மொத்தமாக உற்பத்திக் கட்டுமானத்திற்கு ஆகும் செலவு அதிகரிப்பு வேகங்களை சுமா ராக இரு மடங்கு விஞ்சுகிறது. ஏற்கெனவே இயங்கும் தொழில் நிறுவனங்களை தொழில்நுட்ப ரீதியாகப் புதுப்பித்து, மறு கட்டமைப்பிற்கு ஆகும் முதலீடுகளின் பங்கு 1980இல் 29% இருந்ததெனில், 1985இல் 38.5% ஆக (சில தொழிற்துறைப் பிரிவு

களிலும் இயந்திரக் கட்டுமானத்திலும் 50—60%) இருந்தது.

சில அமைச்சக தலைவர்களும் பல தொழில் நிறுவனங்களின் இயக்குநர்களும் மறுகட்டமைப்பை விடுத்து புதிய கட்டுமானத்தில் இறங்கினர். பதப்படுத்தும் தொழிற்துறையில் கூட—இங்கு இதன் வளர்ச்சிக்குப் புறவய ரீதியாக எல்லா முன் தேவைகளும் உள்ளன—மறுகட்டமைப்பு மெதுவாக நடந்தது. திட்டமிடலின் தவறான நோக்கங்களும், கட்டுமானங்களுக்கு நிதியையும் பொருளாயத-தொழில்நுட்ப சப்ளையையும் வழங்கும் முறையில் உள்ள குறைகளும், ஆர்டர் தரும் ஸ்தாபனங்கள் மற்றும் கட்டுமான ஸ்தாபனங்களின் பணியை மதிப்பிடுவதில் இப்போதுள்ள முறையும் தான் இதற்கான காரணங்களாகும்.

12வது ஐந்தாண்டில், ஏற்கெனவேயுள்ள அடிப்படை உற்பத்தி சாதனங்களைத் தொழில்நுட்ப ரீதியில் புதுப்பித்து, மறுகட்டமைப்பதன் மூலம் இவற்றை நவீனப்படுத்த சென்ற ஐந்தாண்டை விட 1.7 மடங்கு அதிகமாகச் செலவிடப்படும் (1.5 மடங்கு அதிகமாகச் செலவிடத்தான் திட்டமிடப்பட்டிருந்தது).

உற்பத்தி சாதனங்களின் மீள்வரவை உயர்த்தும் வழிகளில் புதிதாக கட்டப்பட்ட தொழில் நிறுவனங்களில் திட்டக் குறியீடுகளை அடையும் காலக்கெடுவைக் குறைப்

பதற்கும், எல்லா உற்பத்தி சாதனங்களுக்கும் உயர்வான கடமைகளை அளிப்பதற்கும் முக்கியப் பங்குள்ளது. ஆண்டுதோறும் இயக்குவிக்கப்படும் புதிய தொழில் நிறுவனங்களின் பங்கு அவ்வளவு அதிகமல்ல— 1985ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தேசியப் பொருளாதாரத்தில் இருந்த மொத்த அடிப்படை உற்பத்தி சாதனங்களில் இது 8.3% தான். ஆனால் இத்தகைய புதிய தொழில் நிறுவனங்கள் தான் அந்தந்த துறைகளில் உற்பத்தியின் நவீன தொழில்நுட்ப மட்டத்தை வெளிப்படுத்துகின்றன.

ஒரு சில துறைகளிலும் பல பிரதேசங்களிலும் புதிய தொழில் நிறுவனங்கள் மற்றும் உபகரணங்களின் திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. உதாரணமாக, சோவியத் யூனியனின் புள்ளிவிவர ஸ்தாபனம் கணக்கெடுத்த 1,852 தொழில் நிறுவனங்கள், வேலைப் பிரிவுகள், மற்ற அமைப்புகளில்—இவை 11வது ஐந்தாண்டில் இயக்குவிக்கப்பட்டன — 1,237 அல்லது மூன்றிலிரு பங்கு முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை அல்லது வரையிலக்கு காலக்கெடுகள் மீறப்பட்டுதான் இயக்குவிக்கப்பட்டன. இவற்றில் நடைமுறை உற்பத்தியளவு திட்ட அளவை விட 1/3 பங்கு குறைவாயிருந்தது.

கணக்கீடுகள் காட்டும்படி மொத்தமாகத் தொழிற்துறையில் புதிய தொழில் நிறுவனங்களின் திட்டத் திறனை முழுமையாகப்

பயன்படுத்துவதன் மூலம் பொருளுற்பத்தியை 15—16 பில்லியன் ரூபிளுக்கு அதிகப் படுத்தலாம், 7—8 பில்லியன் ரூபிள் தேசிய வருமானம் பெறலாம். உதாரணமாக, கனரகத் தொழிற் துறையில் திட்ட உற்பத்தி அளவை அடைவதானது பொருளுற்பத்தியின் அதிகரிப்பு வேகங்களை கிட்டத்தட்ட இரு மடங்கு கூட்டும். அடுத்த சில ஆண்டுகளில் திட்டக் குறியீடுகளிலிருந்து கணிசமாகப் பின்தங்கியிருப்பதை பாதியளவாவது குறைத்தால் அது தொழிற் துறை பொருட்கள் மற்றும் தேசிய வருமானத்தின் அதிகரிப்பு வேகங்களை இப்போதுள்ளதை விட குறைந்தபட்சம் 1/4 மடங்கு அதிகரிக்கும்.

முந்தைய ஐந்தாண்டுகளில் இயக்குவிக்கப் பட்ட தொழில் நிறுவனங்களில் உற்பத்தி ஆற்றலை சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி சாதனங்களின் மீள்வரவை உயர்த்தும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. 8வது, 9வது ஐந்தாண்டுகளில் தொழிற்துறை உற்பத்திப் பொருட்களின் அதிகரிப்பு, புதிய தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிப்பதை விடக் கூடுதலாக இருந்தது. ஆனால் பிந்தைய காலகட்டத்தில் பழைய தொழில் நிறுவனங்களின் உற்பத்தி ஆற்றலைப் பயன்படுத்துவது குறைந்தது, 10வது ஐந்தாண்டில் பொருளுற்பத்தியின் அதிகரிப்பு முழுவதும் கிட்டத்தட்ட புதிய தொழில் நிறுவனங்களால் அடையப்பட்டது.

ஏற்கெனவேயுள்ள தொழில் நிறுவனங்களின் உற்பத்தியைக் கூட்டுவதன் மீது 11வது ஐந் தாண்டில் முக்கியக் கவனம் செலுத்தப்பட் டது. உற்பத்தி ஆற்றலை சிறப்பாகப் பயன் படுத்துவதன் மூலம் பொருளுற்பத்தியின் அதிகரிப்பு 3/4 பங்கு துறைகளில் மொத்த அதிகரிப்பில் 20% ஆகவும், கால் பங்கிற் கும் மேற்பட்ட துறைகளில் 40%ஆகவும், 1/6 பங்கு துறைகளில் 60%ஆகவும் இருந் தது.

பிரதேச ரீதியில் வேலையிடங்களின் எண் ணிக்கைக்கும் உழைப்புச் சக்திக்கும் இடை யிலுள்ள பொருத்தமின்மையை அகற்று வதானது உற்பத்தி சாதனங்களின் மீள் வரவை உயர்த்தும் முக்கியக் காரணியாகும். ஆள் பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களில் புதிய தொழில் நிறுவனங்களில் உள்ள வேலையிடங்களில் கிட்டத்தட்ட ஐந்தி லொரு பங்கிற்குப் போதிய ஊழியர்கள் இல்லை. இப்பொருத்தத்தை அடைவது புதிய ஐந்தாண்டின் முக்கியக் கடமைகளில் ஒன்றாகும். பொருளாதார பிரதேசங்கள் மற்றும் தனிப்பட்ட துறைகளுக்குத் தேவை யான உழைப்பு சக்தியை அளிப்பதற்கேற்ப, உற்பத்தி சக்திகளின் இடப் பங்கீடும், புதிய தொழில் நிறுவனங்களின் கட்டுமானத்திற் கும் ஏற்கெனவேயுள்ளவற்றின் தொழில் நுட்ப மட்டத்தை உயர்த்துவதற்கும் இடை யிலான விகிதமும், புதிதாகத் தோற்றுவிக்கப் படும் வேலையிடங்களுக்கும் ஏற்கெனவே

யுள்ள வேலையிடங்களுக்கும் இடையி லான விகிதமும் மாற்றமடைகின்றன.

கிழக்குப் பிரதேசங்களில் புதிய கட்டு மானத்தின் அளவுகள் வளர்ந்து வருகின்றன, இங்கே ஆள்பலம் போதவில்லை. 70ஆம் ஆண்டுகளில் நாட்டின் முக்கிய எரிபொருள்-எரிசக்தி தளமாகிய இந்த பிரதேசங்களில், மிகவும் அதிகமான உற்பத்தித் திறனுள்ள தொழில்நுட்பத்தை உடைய தொழில் நிறு வனங்களைத் தோற்றுவிப்பதன் மூலம் உழைப்புச் சக்தியின் பற்றாக்குறையை அகற்றத் திட்டமிடப்படுகிறது. இதனால் இங்கு கூடுதல் ஆட்களை அழைப்பதைக் குறைந்தபட்சமாக்க முடியும்.

பதப்படுத்தும் தொழிற்துறை, விவசாயத் துறையின் பெரும் பகுதி ஐரோப்பிய மண் டலத்தில் உள்ளன, மக்களில் பெரும்பாலா னோரும் இங்குதான் வசிக்கின்றனர், இங்கே ஆள்பலத்தின் அதிகரிப்பு குறைந்து வரு கிறது; இப்பகுதியில் தொழில்நுட்ப மட் டத்தை மேம்படுத்துவதன் மீதும் இயங்கும் தொழில் நிறுவனங்களை மாற்றியமைப்ப தன் மீதும் முக்கியக் கவனம் செலுத்தப் படுகிறது. இதன் மூலம் இப்போதுள்ள உற் பத்தியிலிருந்து மேன்மேலும் அதிகமாக ஆட்களை விடுவித்து, வேலை சக்தியின் பற்றாக்குறையைப் போக்க முடியும்.

மத்திய ஆசிய, டிரான்ஸ் காக்கசஸ் குடி யரசுகளில் ஆள்பலம் வேகமாக அதிகரித்து வருகிறது, இவர்களில் கணிசமான பகுதி

யினர் இன்னமும் வீட்டு வேலைகளில் ஈடு படுத்தப்பட்டுள்ளனர். இவர்களை சமூக உற்பத்தியில் ஈடுபடுத்த புதிய வேலையிடங்கள் தோற்றுவிக்கப்படும். இங்கே புதிய தொழில் நிறுவனங்கள் நுகர்வுப் பொருள், உணவுப் பொருள் தொழிற்துறைகளிலும் சேவைத் துறையிலும் முக்கியமாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. இத்துறைகள்தான் தேசியப் பொருளாதாரத்தில் இந்தக் குடியரசுகளின் விசேஷ தனியம்சத்தை நிர்ணயிக்கின்றன.

ஏற்கெனவேயுள்ள உற்பத்தி அமைப்புகளின் செயல்வன்மையை அதிகரிப்பது சம்பந்தமாக இரண்டு விசேஷ அம்சங்களைக் குறிப்பிட வேண்டும். தொழில் நிறுவனங்களின் பணியை இரண்டு ஷிப்டு முறைக்கு மாற்றுவது பற்றிய லெனின்கிராட் கட்சி ஸ்தாபனத்தின் முன்முயற்சியும், குறிப்பிட்ட வேலையிடங்களின் அவசியத்தை முடிவு செய்வது சம்பந்தமாக சென்ற ஐந்தாண்டில் கொண்டு வரப்பட்ட முறையும்தான் அந்த அம்சங்களாகும்.

இயந்திரங்கள், உபகரணங்களை மிகவும் செயல்வன்மையோடு பயன்படுத்தும் கடமை கடந்த பல ஐந்தாண்டுகளில் முன்வைக்கப் பட்டது. ஆனால் சமீப காலம் வரை பெரும்பாலான இயந்திரக் கட்டுமான தொழில் நிறுவனங்கள் சாராம்சத்தில் ஒரு ஷிப்டு மட்டுமே வேலை செய்தன. உயர் உற்பத்தித் திறனுள்ள உபகரணங்களின்

செயல்வன்மையை உயர்த்துவதுதான் இன்றுள்ள கடமையாகும்; இத்தகைய உபகரணங்கள் இன்று தொழிற்துறையிலும் தேசியப் பொருளாதாரத்தின் மற்ற துறைகளிலும் மேன்மேலும் அதிகமாகப் புகுத்தப்படுகின்றன. உற்பத்தி சாதனங்களின் மீள்வரவை உயர்த்த முதலில் நவீன, உயர் உற்பத்தித் திறனுள்ள இயந்திரங்களுக்கு முழு வேலையளிக்க வேண்டும்.

விலையுயர்ந்த கணிப்பொறிமயப்படுத்தப்பட்ட கடைசல் இயந்திரங்களை, குறிப்பாக ராபட்டுகளின் உதவியால் இயங்கும் உபகரணங்களை மூன்று ஷிப்டுகளில் இடையறாமல் பயன்படுத்தும் பொழுது அது பொருளாதார ரீதியாக ஆதாயம் தருகிறது. ஒரு சில இயந்திரக் கட்டுமானத் தொழிற்சாலைகளில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து, இந்தக் கடைசல் இயந்திரங்களும் சாதாரண முறையிலேயே (அதாவது ஒரு ஷிப்டில் மட்டுமே) பயன்படுத்தப்படுகின்றன என்று தெரிகிறது. ஒரு சில அமைச்சகங்களைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களில் கணிப்பொறிமயப்படுத்தப்பட்ட கடைசல் இயந்திரங்கள் போதுமான வகையில் பயன்படுத்தப்படவில்லையென்று கட்சியின் 27வது காங்கிரசில் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த விலையுயர்ந்த, நவீன இயந்திரங்களைப் பயன்படுத்த, பழையவற்றை கழித்துக் கட்டுவதோடு கூட முற்றிலும் புதியதொரு அணுகுமுறையும் தேவை. லெனின்

கிராட் வாசிகள் இப்படித்தான் செயல்பட முடிவெடுத்துள்ளனர்.

லெனின்கிராட் நகரத்திலும் மாவட்டத்திலும் உள்ள மொத்த அடிப்படை உற்பத்தி சாதனங்களில் சுமார் மூன்றிலொரு பங்கு பழையவை; இவற்றை இயக்குவிக்க கணிசமான அளவு தொழிலாளர்கள் தேவைப் படுகின்றனர். பெரும்பாலும் இந்தக் காரணத்தால்தான் இப்பிரதேசத்தில் தொழிலாளர்களின் எண்ணிக்கையை விட வேலையிடங்கள் 25% அதிகமாக உள்ளன, இதனால் உயர் உற்பத்தித் திறனுள்ள, நவீன உபகரணங்கள் குறைவான பயனைத் தருகின்றன. ஒரு வாரத்தில் வரும் 21 ஷிப்டுகளில் இவை பெரும்பாலான தொழில் நிறுவனங்களில் 5—6 ஷிப்டுகளில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன, ஏனெனில் எஞ்சிய ஷிப்டுகளில் இவற்றை இயக்குவிக்க உரிய பயிற்சியுடையவர்கள் இல்லை.

ஐந்தாண்டு திட்டத்தையும், தொழிற் துறை உற்பத்தியை தீவிரப்படுத்தும் வழிகளையும் தீட்டும் பொழுது தொழில் நிறுவனங்களின் திட்ட நகல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மிகப் பெரும்பாலான அமைச்சகங்கள் தம் கீழுள்ள தொழில் நிறுவனங்களின் இடப்பரப்பு வளர்ச்சி முறைகளைப் பின்பற்றியது தெரிய வந்தது: முதலீட்டில் சுமார் 40% புதிய கட்டுமானத்திற்கும் ஏற்கெனவேயுள்ள தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தவும் ஒதுக்கப்பட்டது.

அதே நேரத்தில் உற்பத்தியைத் தொழில் நுட்ப ரீதியில் மாற்றியமைக்கும் பணி போதுமான அளவு நடைபெறவில்லை.

பன்முக ரீதியில் விவாதம் நடத்திய பின் லெனின்கிராட் மாவட்ட கட்சிக் கமிட்டி, புதிய, நவீன இயந்திரங்களை 2—3 ஷிப்டு களில் பயன்படுத்த வேண்டும், பழைய இயந்திரங்களை அகற்றி விட்டு அந்த இடங் களில் நவீன உற்பத்தியை ஏற்படுத்த வேண் டும் என்று முடிவெடுத்தது. இது 3 மில் லியன் சதுர கி.மீ. உற்பத்திப் பரப்பைத் தரும், நவீன கடைசல் இயந்திரங்களின் எண்ணிக்கையை இரு மடங்கு அதிகப்படுத்தி, தொழிற்துறையின் தரக் குறியீடுகளை மேம் படுத்த உதவுமென கணக்கீடுகள் காட்டு கின்றன.

தொழில் நிறுவனங்களில் அதிக ஷிப்டு கள் கொண்டு வரப்படுவதையடுத்து போக்கு வரத்து, கடைகள், நர்சரிகள், மற்ற ஸ்தா பனங்களின் பணிகளும் மாற்றியமைக்கப் படுகின்றன. லெனின்கிராட் தொழிற்துறை 1986 ஜூலை முதல் 2—3 ஷிப்டு வேலை முறைக்கு மாறியுள்ளது.

இந்த முன்முயற்சி—குறிப்பாக இயந் திரக் கட்டுமானத் துறையில்—நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் தொழிற்துறை வளர்ச் சிக்கு நல்ல வழிகாட்டியாகத் திகழும் என்று கூற கட்சியின் மத்திய கமிட்டி இதை ஆமோதித்துள்ளது. மாவட்டங்கள், பிராந் தியங்கள், குடியரசுகள் ஆகியவற்றின்

தொழில் நிறுவனங்கள் பல ஷிப்டு வேலை முறைக்கு மாற ஐந்தாண்டு திட்டத்தில் இவற்றிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த முத லீட்டு நிதி அப்படியே தக்க வைக்கப்படு மென உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. புதியவற்றைப் புகுத்தியதால் சிக்கனமான நிதிகளை இவை தொழில் நிறுவனங்களின் மறுகட்டமைப்பிற்கும், சமூக-கலாசாரத் துறை வளர்ச்சிக்கும் பயன்படுத்தலாம்.

லெனின்கிராட் வாசிகளின் முன்முயற் சிக்கு நாட்டின் மற்ற தொழில்துறை மையங் களில் ஆதரவு கிட்டியது. ஆகஸ்டு முதல் ஹார்க்கவ் நகர தொழிற்சாலைகள் 2—3 ஷிப்டு வேலை முறைக்கு மாறின. முதல் மாதத்தில் இயந்திரக் கட்டுமானத் தொழிற் சாலைகளில் மட்டும் சுமார் 2,000 கடை சல் இயந்திரங்கள் அகற்றப்பட்டன, இரண் டாவது ஷிப்டில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை 22%லிருந்து கிட்டத்தட்ட 33% வரை உயர்ந்தது. ஐந்தாண்டில் 11,000 பழைய உபகரணங்களை மாற்றுவது, குறைந்தபட்சம் 2,00,000 சதுர கி.மீ. உற் பத்திப் பரப்பை விடுவிப்பது என்று ஹார்க் கவ் நகர வாசிகள் முடிவெடுத்துள்ளனர்.

இன்று தொழிற்துறையில் மட்டும் சுமார் 7 லட்சம் வேலையிடங்கள் காலியாக உள்ளன. இயங்கும் தொழில் நிறுவனங்களில் பழைய உபகரணங்கள் பயன்படுத்தப்படு கின்றன, புதியவற்றிலோ வேலை செய்ய ஆட்கள் இல்லை. புதிய தொழில் நிறுவனங்

களைக் கட்ட பல பில்லியன் ரூபிள்கள் செல விடப்பட்டன, ஆனால் உரிய பயன் இல்லை. பயனை அதிகப்படுத்த வேலையிடங்களின் அவசியத்தை முடிவு செய்யும் முறையைப் பயன்படுத்த வேண்டும். இன்றைய சூழ்நிலை யில் இப்பணியைத் துரிதப்படுத்துவது அவ சியமானது மட்டுமின்றி, இது ஒவ்வொரு தொழில் நிறுவனத்திற்கும் கிட்டக் கூடியது மாகும்; இதுதான் உற்பத்தியை தீவிரப் படுத்தலைத் துரிதப்படுத்தும் ஸ்தாபன, பொருளாதார வழியாகும்.

தினேப்ரபித்ரோவ்ஸ்க் அறுவடை இயந் திரத் தொழிற்சாலை முதலாவதாக உற் பத்தியை தீவிரப்படுத்தும் பணியைத் துவக் கியது; இது 800க்கும் மேற்பட்ட தேவை யற்ற வேலையிடங்களை அகற்றியது. 750க்கும் மேற்பட்டோர் விடுவிக்கப் பட்டனர், இவர்கள் புதிய வேலையிடங் களுக்கு அனுப்பப்பட்டனர், கடைசல் இயந் திரங்களின் முன் பொறியியலாளர்களை நிறுத்தும் அவசியம் மறைந்தது. தேவை யற்ற உபகரணங்களை விற்றதால் தொழிற் சாலைக்கு 10 லட்சத்திற்கும் அதிகமான ரூபிள் கிட்டியது, கிட்டத்தட்ட 4,000 சதுர கி.மீ. உற்பத்தி பரப்பு கிடைத்தது. கடந்த ஐந்தாண்டில் தொழிற்சாலையில் உழைப்பின் உற்பத்தித் திறன் 1.5 மடங்கு அதிகரித்தது, உற்பத்தி அளவு இரு மடங்கு கூடியது, அறுவடை இயந்திரங்களின் தர

உயர்வால் இவற்றின் சேவைக் காலம் 6 ஆண்டிலிருந்து 8 ஆண்டுகளாகியது.

1985இல் 17,000 தொழில் நிறுவனங்களில் (அதாவது 38%) வேலையிடங்களின் அவசியத்தை முடிவு செய்யும் முறை கொண்டு வரப்பட்டது. இந்த ஐந்தாண்டில் இம்முறை தொழிற்துறையின் பிற பிரிவுகளுக்கும் தேசியப் பொருளாதாரத்தின் மற்ற துறைகளுக்கும் பரப்பப்படும்.

## நிர்வாகத்தின் தரத்தை உயர்த்தல்

உற்பத்தியை தீவிரப்படுத்தும் பாதையிலான முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தல் பொருளாதாரப் பணி முழுவதன் மட்டத்தை உயர்த்துவதுடனும் அந்தந்த துறைகளிலும் தொழில் நிறுவனங்களிலும் நிர்வாகத் தரத்தை மேம்படுத்துவதுடனும் தொடர்புடையது. முக்கியமாக உற்பத்திப் பொருட்களின் அடக்கவிலை குறைக்கப்பட வேண்டும், அவற்றின் தரம் பெரிதும் மேம்படுத்தப்பட வேண்டும். இங்கு கடந்த ஐந்தாண்டுகளில் நிலவரம் நடைமுறையில் மேம்படவில்லை, சில விஷயங்களில் கணிசமாக மோசமடைந்துள்ளது. இதனால் தோன்றிய குறைகளை அகற்றுவதானது நிர்வாகத்தின் செயல்வன்மையை உயர்த்துவதற்கான முக்கிய முன்தேவையாகும். 12வது ஐந்தாண்டுத் திட்டக் கடமைகளின் நிறைவேற்றம் மேற்கூறிய மூன்று உந்து

சக்திகளை தீவிரமாகப் பயன்படுத்துவதைப் பெரிதும் பொறுத்துள்ளது.

12வது ஐந்தாண்டில் உற்பத்தியின் பொருளாதாரப் பயன்களை மேம்படுத்துவதில் உற்பத்திப் பொருட்களின் அடக்கவிலைக் குறியீட்டின் பங்கு அதிகரிக்கிறது; 70ஆம் ஆண்டுகளில் இது குறைவது கணிசமாகத் தாமதப்பட்டது. பல்வேறு துறைகள், தொழில் நிறுவனங்களில் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மீது போதுமான கவனம் செலுத்தப்படாததும், இக்காலகட்டத்தில் மொத்த மற்றும் கொள்முதல் விலைகள் கூடியதும் இதற்குக் காரணமாகும்.

நடப்பு ஐந்தாண்டில் அடக்கவிலையைக் குறைப்பது சம்பந்தமான கடமைகள் தொழிற்துறையின் பல பிரிவுகளுக்கு மட்டுமின்றி கட்டுமானத் துறைக்கும் அரசுப் பண்ணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்த அளவுக் குறைப்பு கடந்த ஐந்தாண்டில் அடையப்பட்டதை விட கணிசமாகக் கூடுதலானது. இயந்திரக் கட்டுமானம், இரசாயன மற்றும் எண்ணெய்-இரசாயனத் துறைகளில், அதாவது எங்கெல்லாம் உற்பத்தியைத் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்துவது பரவலாக நடைபெறுகிறதோ அங்கெல்லாம் அடக்கவிலையைப் பெரிதும் வேகமாகக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய ஐந்தாண்டில் திட்டமிடப்பட்டுள்ளபடி புதிய இயந்திரங்கள், தொழில்நுட்பத்தைப் புகுத்துவதானது தொழிற்

துறை உற்பத்திப் பொருட்களின் அடக்க விலையை 28 பில்லியன் ரூபிள் குறைக்க வாய்ப்புளிக்க வேண்டும்.

1986இல் தொழிற்துறை உற்பத்திப் பொருட்களின் அடக்கவிலையை 0.9%மும், கட்டுமானத்தில் அடக்கவிலையை 0.5%மும் குறைக்கத் திட்டமிடப்பட்டது. இக்கடமைகள் நிறைவேற்றப்பட்டன. இதனால் தொழிற்துறையில் 4 பில்லியன் ரூபிள்களுக்கும் கூடுதலாக சிக்கனப்படுத்தப்பட்டது. 1987இல் தொழிற்துறை உற்பத்திப் பொருட்களின் அடக்கவிலையை இன்னமும் 0.8% குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தமாக தேசியப் பொருளாதாரத்தில் அடக்கவிலை குறைவதானது லாப அதிகரிப்பில் பாதிக்கும் மேற்பட்டதற்கு வழிகோலும்; இது 11வது ஐந்தாண்டில் இருந்ததை விட அதிகம்.

அடக்கவிலையைக் குறைக்கும் கடமை விவசாயத் துறையில் இன்னமும் கடுமையாக முன்நிற்கிறது; விவசாயத் துறையில் அடக்கவிலை 50ஆம் ஆண்டுகளிலிருந்து இடையறாமல் அதிகரித்து வந்தது. உதாரணமாக, கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணைகளில் ஒரு ரூபிள் மொத்த விவசாய உற்பத்திப் பொருளுக்கான செலவுகள் (1973ஆம் ஆண்டின் ஒப்பீட்டு விலைகளில்) 8வது ஐந்தாண்டில் 70 கோப்பெக்காகவும், 9வது ஐந்தாண்டில் 89 கோப்பெக்காகவும், 10வது ஐந்தாண்டில் 111 கோப்பெக்காகவும்,

11வது ஐந்தாண்டின் முதல் பாதியில் 1.3 ரூபிளாகவும் இருந்தன. விவசாய உற்பத்திப் பொருட்களின் அடக்கவிலை தொடர்ந்து அதிகரிக்க முக்கியக் காரணம் தொழிற் துறையில் மொத்த விலைகள் கூடியதும், அரசுப் பண்ணைகள், கூட்டுப் பண்ணை களில் ஊதியம் அதிகரித்ததும் ஆகும். 1965ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1983இல் பொருளாயத செலவுகள் 4.3 மடங்கு கூடின; இவற்றில் தொழிற்துறை பொரு ளுற்பத்திக்கான செலவுகள் 5.3 மடங்கு அதிகரித்தன, உழைப்பிற்கான ஊதியம் 2.3 மடங்கு கூடியது.

1982 மே மாதம் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுப் பேரவைக் கூட்டத்தின் முடிவிற்கேற்ப 1983இல் அரசு கொள்முதல் விலைகள் மீண்டும் கூட்டப்பட்டன. இந்த விலைகளின் விகிதங்களில் ஏற்படும் மாற் றங்களைக் கணக்கில் கொண்டு விவசாயத் துறை நிறுவனங்கள் மற்ற துறைகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களுடன் இறுதி யாக கணக்குகளைத் தீர்க்கின்றன. தொழிற்துறை உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவை வசதிகளின் விலைக்ள் அதி கரித்ததால் அரசுப் பண்ணைகள், கூட்டுப் பண்ணைகளுக்கு ஏற்படும் கூடுதல் செலவு களை ஈடுகட்டும் முறை இப்போது பெரும் பாலும் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இன்று இதை சோவியத் யூனியனின் பல்வேறு பகுதி

களில் உள்ள திட்டவட்டமான சூழ்நிலைகளுக்கு ஏற்ப பயன்படுத்தும் பணி முன்நிற்கிறது. இப்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளமும் இன்று விவசாய-தொழிற்துறை இணையத்தில் உருவாகி வரும் பொருளாதார முறையும் முன்னர் காணப்பட்ட விவசாய உற்பத்திப் பொருட்களின் அடக்கவிலை அதிகரிப்பை அகற்றுவதற்கான அடிப்படையை ஏற்படுத்துகின்றன. தொழிற்துறையைப் போன்றே விவசாயத் துறையிலும் அடக்கவிலையைக் குறைக்கும் முக்கிய வழி, மூலாதாரங்களைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதும், பல்வேறு விதமான இழப்புகளையும் உற்பத்தியோடு நேரடித் தொடர்பற்ற செலவுகளையும் (இவை இன்றும் பல இடங்களில் உள்ளன) குறைப்பதும் ஆகும்.

லாபத்தையும் லாப விகிதத்தையும் அதிகரிப்பதில் அடக்கவிலையின் குறைவு மேன்மேலும் அதிகப் பங்காற்றும். லாப விகிதம் என்பது தொழில் நிறுவனத்தின் செயல் வன்மையை இறுதியாகக் காட்டும் சுயப் பொருளாதாரக் கணக்கீட்டுக் குறியீடுகளில் ஒன்றாகும். முதல் பார்வைக்கு 11வது ஐந்தாண்டில் தொழில்துறையில் இதன் மாற்றம் 10வது ஐந்தாண்டில் இருந்ததை விட மேலானதாகக் காணப்பட்டது. 10வது ஐந்தாண்டில் 1975இல் 15.8%ஆக இருந்த லாப விகிதம் 1980இல் 12.2%ஆக குறைந்தது (1985இல் இது 12.1%ஆக இருந்தது).

ஆனால் இதற்கு முக்கியக் காரணம் 1982 ஜனவரி 1 முதல் மொத்த விலைகள் கூட்டப்பட்டதாகும் (உயர்வான விலைகளிலும் கூட நிலக்கரித் தொழிற்துறையின் நஷ்டப் போக்கு அகற்றப்படவில்லை). தொழிற்துறையின் பெரும்பாலான பிரிவுகளில்—இயந்திரக் கட்டுமானம், எண்ணெய், எண்ணெய் இரசாயனப் பிரிவுகளைத் தவிர—புதிய மொத்த விலைகள் அமல்படுத்தப்பட்டும் லாப விகிதம் குறைந்தது. உற்பத்தி சாதனங்களின் மீள்வரவின் வீழ்ச்சி, மூலாதாரங்களின் புழக்கத்தில் ஏற்பட்ட தாமதம், லாபம் சம்பந்தமான திட்டக் கடமைகள் முழுமையாக நிறைவேற்றப்படாதது ஆகியவைதான் இதற்கான முக்கியக் காரணங்களாகும்.

மற்ற துறைகளிலும் லாப விகிதம் குறைந்தது. உதாரணமாக, 1983 வரை பல கூட்டுப் பண்ணைகள் நஷ்டத்தில் வேலை செய்தன; விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான கொள்முதல் விலைகள் மீண்டும் உயர்த்தப்பட்ட போதுதான் இது சரிசெய்யப்பட்டது. 11வது ஐந்தாண்டின் துவக்கத்தில் கூட்டுப் பண்ணைகளுக்கு கிட்டத்தட்ட லாபமே கிட்டவில்லை. மொத்த வருமானம் கிட்டத்தட்ட முழுவதுமாக ஊதியம் வழங்கப் பயன்பட்டது. கொள்முதல் விலைகள் கூட்டப்பட்டதானது லாபம் சேர உதவியது. 1984இல் நிகர வருமானம் கூட்டுப் பண்ணைகளின் மொத்த வருமானத்தில் மூன்றி

லொரு பங்கிற்கு அதிகமாயிருந்தது. சமீப காலம் வரை அடக்கவிலை குறைப்பு லாப விகிதத்தின் மீது செலுத்திய தாக்கம் மொத்தத்தில் அவ்வளவு நன்றாக வெளிப் படவில்லை. இக்காரணியினால் லாப விகிதம் கூடுவதுதான் சமூக உற்பத்தி தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாறுவதைக் காட்டும் முக்கியக் காரணியாகும்.

உற்பத்தியை தீவிரப்படுத்தலின் மேற் கொண்ட வளர்ச்சி மூலாதாரங்கள், புழக்க சாதனங்களின் புழக்க வேகத்தை துரிதப் படுத்துவதைப் பொறுத்தது. சமீப ஐந் தாண்டுகளில் பொருளாதார நிர்வாகிகள் இப்பிரச்சினைகளின் மீது போதிய கவனம் செலுத்தவில்லை. பொருளாதார நிர்வாக முறையை மேம்படுத்தும் நோக்கத்தோடு மத்திய பொருளாதார இலாக்காக்களும் அமைச்சகங்களும் மேற்கொண்ட பணியிலும் இப்பிரச்சினைகள் இரண்டாவது இடத் திற்கு ஒதுக்கப்பட்டன.

இவையெல்லாம் உற்பத்தி அளவு மற்றும் பொருளாயத சாதனங்களின் (மூலப் பொருட்கள், முடிவுபெறா உற்பத்தி மற்றும் கட்டுமானம், தயாரான பொருட்கள்) அதி கரிப்பு விகிதங்களைப் பாதித்தன. உற் பத்திப் பொருட்களை விட இருப்புகள் வேக மாக அதிகரித்தன; இது குறிப்பாக கட்டு மானத் துறையில் நன்கு தெரிந்தது.

இக்காலகட்டத்தில் மொத்த சமூக உற் பத்திப் பொருளுடன் ஒப்பிடுகையில் இருப்பு

களின் அளவு மூன்றிலொரு பங்கு அதிகரித்தது, இது விவசாயத் துறையில் கிட்டத்தட்ட 2 மடங்கும், கட்டுமானத்தில் 3.7 மடங்கும் அதிகரித்தது.

பல தொழில் நிறுவனங்களில் குறிப்பிட்ட வரையளவுகளுக்கு மேல் ஏராளமான இருப்புகள் சேர்ந்தன, கணிசமான அளவு பொருளாயத வளங்கள் தேசியப் பொருளாதார சுழற்சியிலிருந்து திசைதிருப்பப்பட்டன. இதனால் உற்பத்திக்குத் தேவையான பொருளாயத சாதனங்களை வழங்குவதில் சிக்கல்கள் அதிகமாயின.

சொந்தப் புழக்க சாதனங்கள் போதாத தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை கூடியுள்ளது. ஒரு சில சந்தர்ப்பங்களில் தொழில் நிறுவனங்களும் பொருளாதார ஸ்தாபனங்களும் கணக்குகளைத் தீர்க்க தேவையற்ற அளவில் வங்கிக் கடன்களைப் பயன்படுத்துகின்றன.

புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் எல்லா கட்டங்களிலும் புழக்க சாதனங்களின் புழக்க வேகம் 1980இல் 145ஆக இருந்தது, 1984இல் 160 நாட்களாகியது. இவ்வாறு 15 நாட்கள் கூடியதால், உற்பத்திக்குத் தேவையான பொருட்களைப் பெற்ற தருணத்திலிருந்து இவற்றைப் பயன்படுத்தும் தருணம் வரை உற்பத்தி இருப்புகளை சேமிக்கும் சராசரிக் காலக்கெடு 1 வாரம் கூடியது, உற்பத்தி சுழற்சிக்காகும் காலம் 4 நாட்கள் கூடியது, தயாரான பொருட்

கள் தேவையான இடத்திற்கு அனுப்பப் படும் வரை தொழில் நிறுவனங்களின் கிடங்கு களில் தங்கியிருக்கும் காலம் 3 நாட்கள் கூடியது. இதைத் துரிதப்படுத்துவது சம் பந்தமாக கடந்த ஐந்தாண்டு முன்வைத்த கடமைகள் நிறைவேற்றப்படவில்லை. 1981—1984இல் 4.1 பில்லியன் ரூபிள் மதிப்புள்ள மூலாதாரங்களைப் பொருளா தாரச் சுழற்சியில் கொண்டு வர திட்டமிடப் பட்டது. நடைமுறையிலோ கூடுதலாக 6.2 பில்லியன் ரூபிள் மதிப்புள்ள மூலாதாரங் கள் சேம இருப்பில் வைக்கப்பட்டன.

தொழிற்துறையில் புழக்க சாதனங்களில் உள்ள எல்லா பொருளாயத மிச்சங்களில் கிட்டத்தட்ட 60% உற்பத்தி இருப்புகளைச் சாரும். குறிப்பிட்ட பொருள் கிடைத்த தருணத்திலிருந்து இது உற்பத்தியில் பயன் படுத்தப்படுவது வரை கிட்டத்தட்ட ஒன் றரை மாதமாகிறது. இக்காலகட்டத்தை குறைக்க இயன்ற அளவு அதிகமான மூலா தாரங்களைத் தொழில் நிறுவனங்களின் கிடங்குகளிலிருந்து சப்ளை-விற்பனைக் கிடங்குகளுக்கு அனுப்ப வேண்டும்; இவை பொருட்கள் விரைவாகப் பயன்படுத்தப்பட உதவும், இவற்றை தேவையான இடங் களுக்கு விரைந்து அனுப்பும். புழக்க வேகத்தை துரிதப்படுத்தும் முக்கிய வழிகளில் ஒன்று திட்டக் கட்டுப்பாட்டை வலுப்படுத் தல், தொழில் நிறுவனங்கள் சப்ளை ஒப் பந்தங்களுக்கேற்ப, குறிப்பிட்ட பொருட்

களை கறாராக உற்பத்தி செய்தல் ஆகும். இவை சரிவர நிறைவேற்றப்படாவிடில் பொருளாதாரத் தொடர்புகள் குலைக்கப் படும், மூலாதாரங்களின் புழக்க வேகம் குறையுமென பல்லாண்டு அனுபவம் காட்டு கிறது. சப்ளை ஒப்பந்தத்திற்கேற்ப உரிய நேரத்தில் உற்பத்திப் பொருட்களை அளிப் பது சம்பந்தமான நடவடிக்கைகள் புதிய ஐந்தாண்டில் நிர்வாக முறையை மேம் படுத்துவதன் முக்கிய அம்சமாக முன்வைக்கப் பட்டுள்ளன. சப்ளை ஒப்பந்தங்களை கறா ராக நிறைவேற்றுவது பொருளாயத-தொழில்நுட்ப சப்ளையை மேம்படுத்தவும், தொழில் நிறுவனங்களின் ஸ்திரநிலையை அதி கப்படுத்தவும் உதவும். இதனால் தேசியப் பொருளாதாரத்திற்குத் தேவைப்படும் புழக்க சாதனங்கள் இரண்டு வழிகளில்—ஒரு சில தொழில் நிறுவனங்களின் தேவைக் கதிகமான இருப்புகளைப் பொருளாதாரச் சுழற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமும் மற்ற சிலவற்றின் பற்றாக் குறைகளை அகற்று வதன் மூலமும்—குறையும்.

பண்டங்கள், நிதிகளின் புழக்க வேகத் தைத் துரிதப்படுத்தும் இன்னொரு முக்கிய வழி முழுமை பெறா உற்பத்தியைக் குறைப் பதாகும்; இது தொழிற்துறையில் இவற்றின் இருப்பில் 22%க்கும் கூடுதலாகும். இதற்கு முதலில் உற்பத்தி ஒழுங்கமைப்பை மேம் படுத்த வேண்டும், பின் உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்த வேண்

டும், உயர் உற்பத்தித் திறனுள்ள நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

உற்பத்திப் பொருட்களின் மோசமான தரத்தால் இவை பயன்படுத்தப்படாமல் குவிவதையடுத்து மூலாதாரங்களின் புழக்க வேகம் குறைகிறது. புழக்கச் சாதனங்களில் தயாரான பொருட்களின் பங்கு சமீப ஆண்டுகளில் அதிகரித்து தொழிற்துறையில் பண்டங்கள், நிதிகளின் இருப்புகளின் அளவில் 12% எட்டியது. தயாரான பொருட்களை விற்பதில் இடர்ப்பாடுகளைச் சந்திக்கும் துறைகளில் (நுகர்வுப் பொருள் தொழிற்துறை, இயந்திரக் கட்டுமானத்தின் சில துணைத் துறைகள்) தயாரான பொருட்களின் மிச்சங்கள் குறிப்பிட்ட வரையளவுகளை விஞ்சின. உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவது புழக்க சாதனங்களின் புழக்க வேகத்தை துரிதப்படுத்தும் வழியாகும்.

தயாரான பொருட்களை தேவையான இடத்திற்கு அனுப்பும் காலக்கெடுவைக் குறைப்பதும் சுழற்சி வேகத்தை துரிதப் படுத்துவதற்கான வழியாகும். இதில் பெரும் பங்கு போக்குவரத்துத் துறையினரைச் சாரும். சரக்குகளை விரைவாக எடுத்துச் செல்லுதல், போக்குவரத்து முறையின் எல்லா அங்கங்களின் செயல்வன்மையையும் வேலைத் தரத்தையும் மேம்படுத்தல் சம்

பந்தமான கடமைகள் புதிய ஐந்தாண்டில் இவர்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

உற்பத்தியைப் பன்முக ரீதியாக தீவிரப்படுத்துவதானது உற்பத்திப் பொருட்களின் தரத்தை அடிப்படையிலேயே மேம்படுத்துவதுடன் பிரிக்க முடியாதபடி தொடர்புடையது. தரம் என்பது விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மட்டத்தைக் காட்டும் பொதுவான, பாரபட்ச மற்ற குறியீடு; இது உற்பத்தி மற்றும் உழைப்பின் ஒழுங்கமைப்பையும், உற்பத்தியின் செயல்வன்மையைப் பற்றிய மதிப்பீட்டையும் காட்டுகிறது. தர உயர்வுதான்—இத்துறையில் நிறைவேற்றப்படும் நடைமுறை நடவடிக்கைகளின் அளவுகளையும் முக்கியத்துவத்தையும் கவனத்தில் கொண்டு—இன்று பொருளாதார வளர்ச்சியின் உண்மையான புதிய அம்சமாகும்.

உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்தும் பிரச்சினைகள் முன்னரும் பன்முறை முன்வைக்கப்பட்டன, ஆனால் இவை செயல்வன்மையை உயர்த்துவதில் ஒப்பீட்டளவில் இரண்டாம் பட்சமானவையாகக் கருதப்பட்டன. இன்று இப்பிரச்சினைகள் பெரும் முக்கியத்துவத்தை—ஒரு சில துறைகளில் தீர்மானகரமான முக்கியத்துவத்தை—பெற்றுள்ளன. உற்பத்தி மற்றும் தொழிற்துறைக் கட்டுமானம் சம்பந்தமான பல அளவு நிலைக் குறியீடுகளில் சோவியத் யூனியன் நீண்ட காலமாகவே முன்னணி நிலைகளை வகித்து வந்த போதிலும் தரக் குறியீடு

களில் எப்போதும் எல்லாவற்றிலும் நவீன மட்டத்தை அடைய முடியவில்லை. புதிய இயந்திரங்களில் 1/5 பகுதிதான் உண்மையிலேயே புதியவை, நவீனமானவை. பல நேரங்களில் உற்பத்திப் பொருட்கள் உலகத் தரத்திற்கு ஏற்றவையாயில்லை. ''உற்பத்திப் பொருட்களின் தரம், தொழில்நுட்ப-பொருளாதார மட்டம் மற்றும் அழகியல் ரசனை நம் பொருளாதாரத்தின் மிகப் பலவீனமான அம்சங்களாகும், இவைதான் பல இடர்ப்பாடுகள், பிரச்சினைகளுக்கான மூல ஊற்று என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டியில் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தை துரிதப் படுத்துவது பற்றி நடைபெற்ற கூட்டத்தில் மி. செ. கர்பச்சோவ் கூறினார்.*

உற்பத்தியின் தரத்தை உயர்த்தாமல் வெறுமனே உற்பத்தி அளவுகளை மட்டும் அதிகரிப்பதானது பொருள்ாதாரத்தை தீவிரப்படுத்தும் வாய்ப்புகளை பயன்படுத்துவதை கணிசமாகத் தாமதப்படுத்தும் என்பதுதான் கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையாகும். இன்று பல்வேறு விதமான பொருட்களை ஏராளமாக உற்பத்தி செய்வது மட்டும் ஜீவாதார ரீதியாக முக்கியமானதல்ல, முக்கியமானது என்ன

---

* மி.செ. கர்பச்சோவ், தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளும் சொற்பொழிவுகளும், மாஸ்கோ, அரசியல் பதிப்பகம், 1985, பக்கம் 122 (ருஷ்ய மொழியில்).

வெனில் நல்ல தரமுள்ள பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும், தரத்தில் உயர் மட்டத்தை அடைய வேண்டும் என்பதாகும்.

உயர்வான தரம் என்பது முக்கியமாக உழைப்புச் சிக்கனமாகும். உதாரணமாக, கார் டயர்களின் உறுதியை அதிகப்படுத்தினால்—இதற்கு ஒப்பீட்டளவில் குறைவான கூடுதல் உழைப்பே போதும்—அது இந்த டயர்களின் வாழ்நாளை 10% உயர்த்தும்; இது ஆண்டிற்கு 6 மில்லியன் டயர்களை கூடுதலாக உற்பத்தி செய்வதற்குச் சமமானது. இது இன்று தேசியப் பொருளாதாரத்திற்கும் மக்களுக்கும் எவ்வளவு டயர்கள் போதவில்லையோ அதற்கு கிட்டத்தட்ட சமமானது. இது ஏதோ ஒரு தனிப்பட்ட உதாரணமல்ல, இதைப் போன்ற உதாரணங்களை ஒவ்வொரு துறையிலும் காணலாம்.

இருக்கக் கூடிய மாடல்களை, மாதிரிகளை மாற்றுவதன் மூலம் தர உயர்வு நிர்ணயிக்கப்படுவதில்லை, மாறாக புதியதாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தொழில்நுட்ப மேம்பாட்டாலும், புதிய அம்சங்களாலும்தான் தர உயர்வு அடையப்படுகிறது. உலோகம் அறுக்கும் கடைசல் இயந்திரங்களின் உறுதியை அதிகப்படுத்துவதானது இவற்றிற்கான தேவையை 16% குறைக்கும், உலை அழுத்தும் இயந்திரங்களின் தேவை 26% குறையும், லாரிகளின் தேவை 8% குறையும். இப்படித்தான் நடை

முறையில் தர மேம்பாட்டின் மூலம் அளவு பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

உயர்வான தரம் என்பது மூலாதாரங்களின் சிக்கனமாகும். உலோகத்தின் தரம் குறைவாயிருந்தால், இயந்திரங்கள், உபகரணங்களை வடிவமைத்து, உற்பத்தி செய்யும் பொழுது அவை உறுதியாக இருக்க பல்வேறு பகுதிகளின் எடையைக் கூட்ட வேண்டும். உதாரணமாக, இதனால் சில பாரந்தூக்கி இயந்திரங்கள், சரக்கு வாகனங்கள், கார்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் பொழுது 20—25% கூடுதலாக உலோகத்தை செலவழிக்க வேண்டி வருகிறது. எனவே உலோகத்தின் தரத்தை மேம்படுத்தினால், உலோகம் செலவாவதை —குறிப்பாக இயந்திரக் கட்டுமானத் துறையிலும் கட்டுமானத்திலும்—குறைக்கலாம். கட்டுமானப் பொருட்களின் கட்டமைப்பையும் தரத்தையும் மேம்படுத்தினால் இவற்றின் பொருண்மையை குறைந்தபட்சம் 25—30% குறைக்கலாம், கட்டுமானத்தின் உழைப்புச் சுமையைக் கணிசமாகக் குறைத்து, இதற்கான காலக்கெடுகளையும் குறைக்கலாம்.

உயர்வான தரம் என்பது இறுதியாகப் பார்த்தால் சமூகத் தேவைகளை (உற்பத்தி மற்றும் தனிப்பட்ட தேவைகள்) மேன்மேலும் அதிகமாகப் பூர்த்தி செய்வதாகும். அப்பொழுது குறைந்த அளவு பொருட்கள் அதிக தேவைகளைப் பூர்த்தி செய்யும்,

அதாவது நுகர்வு மதிப்புகளின் விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தி நடைபெறும்.

தர உயர்வு பிரச்சினையைத் தீர்க்க பல்லாண்டுகள் தேவைப்படும், இதனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப, பொருளாதார, ஸ்தாபன பிரச்சினைகளைப் பன்முக ரீதியில் அணுக வேண்டும். இதற்கான பொருளாதார முறையை உருவாக்குவது இதில் ஒரு முக்கிய அம்சமாகும்; திட்டமிடல், திட்ட வடிவமைப்பு ஸ்தாபனங்கள், புதியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், புதிது புனைபவர்கள், சிக்கன வழிகளை முன்மொழிபவர்கள் ஆகியோருக்கு பொருளாதார ஊக்குவிப்பை அளித்தல், விலைகளின் முறையை மேம்படுத்தல் ஆகியவை இதிலடங்கும். தேவையான மாற்றங்களைச் செய்வதை முன்னர் பல நேரங்களில் நடந்ததைப் போல் தள்ளிப் போடக் கூடாது.

புதிய பொருளாதார நிர்வாக முறைகளுக்கு மாறியதையடுத்து, தொழில் நிறுவனங்களின் பணியை மதிப்பிடும் பொழுது உற்பத்திப் பொருட்களின் தரக் கோரிக்கைகள் கறாராகின்றன. தரத்திற்கேற்ப உற்பத்திப் பொருட்களுக்கு தரச் சான்றிதழ் வழங்கும் முறையின் பங்கு அதிகரிக்கும். முன்னர் 3 விதமான ரகங்கள் இருந்தன, இவை இன்று 2ஆக (உயர் ரகம், முதல் ரகம்) குறைக்கப்பட்டுள்ளன. உலக தர மட்டத்தைப் பற்றி துல்லியமான தகவலைத் தரும் அதிகாரிகள் பொருளாதார, நிர்

வாகப் பொறுப்பை ஏற்க வேண்டும்; உற்பத்தியாகும் பொருட்களின் தரம் இந்தத் தர மட்டத்துடன்தான் ஒப்பிடப்படும். உற்பத்திப் பொருட்களின் தொழில்நுட்ப மட்டம், மற்ற குணாம்சங்களை உலக மற்றும் சொந்த மாதிகளுடன் பாரபட்சமற்று ஒப்பிட்டு மதிப்பிடுவதும் இன்று குறிப்பாக முக்கியமானதாகும். உயர் ரக உற்பத்தி-தொழில்நுட்பப் பொருட்களுக்கு அவற்றின் பொருளாதார செயல்வன்மையைப் பொறுத்து, மொத்த விலையோடு 30% வரையில் கூடுதல் தொகை சேர்க்கப்படும். இப்பொருளுக்கு பின்னர் தரச் சான்றிதழ் வழங்கும் பொழுதும் இதே ரகம் அளிக்கப்படுமானால் இக்கூடுதல் தொகை அப்படியே இருக்கும். இயந்திரங்கள், உபகரணங்கள், உபரிப் பகுதிகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணி பெற்றுத் தர உதவும் தொழிற்சாலைகளுக்கு இவற்றின் உற்பத்தியைப் பெருக்க கூடுதல் ஊக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

பழையதாகிப் போன உற்பத்திப் பொருட்களுக்கு மொத்த விலையிலிருந்து தள்ளுபடி அளிப்பது விரிவுபடுத்தப்படுகிறது. இத்தள்ளுபடிகளை முன்னரே கொண்டு வந்திருக்கலாம், ஆனால் இவை அபூர்வமாகத்தான் கொண்டு வரப்பட்டன, அமைச்சகங்கள், இலாக்காக்களின் ஆதரவோடு தொழில் நிறுவனங்கள் இவற்றிற்கு எதிரான சாக்கு போக்குகளைக் கண்டுபிடித்தன. 1986 ஜனவரி முதல்

இந்தத் தள்ளுபடிகள் கண்டிப்பாக அமல் படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, முதல் ரக உற்பத்திப் பொருளுக்கு மொத்த விலை யிலிருந்து முதலாமாண்டு 5% தள்ளுபடியும், இரண்டாமாண்டு 10% தள்ளுபடியும், மூன்றா மாண்டு 15% தள்ளுபடியும் உண்டு. இத் தொகைகள் உற்பத்திப் பொருள் விற்பனை யின் திட்ட நிறைவேற்றத்தில் சேர்க்கப் படா, இவை அரசு பட்ஜெட்டிற்குள் வரும். இரண்டாம் முறை தரச் சான்றிதழ் வழங் கப்படும் பொழுது இந்த உற்பத்திப் பொரு ளுக்கு உயர் ரகம் அளிக்கப்படாவிடில் அது உற்பத்தியிலிருந்து அகற்றப்படும். மொத்த விலைகளுக்கு அளிக்கப்படும் தள்ளுபடிகள் தொழில் நிறுவனத்தின் வருமானங்களைக் குறைக்கின்றன, தொழிலாளர்களின் பொரு ளாதார ஊக்குவிப்பை நேரடியாகப் பாதிக் கின்றன. இப்போது தள்ளுபடியில் 70% வரை பொருளாதார ஊக்குவிப்பு நிதியி லிருந்து ஈடு கட்டப்படும்.

ஒரு தரப்பிற்கு மறு தரப்பு மீண்டும் மீண் டும் தரக் குறைவான உற்பத்திப் பொருட் களை வழங்கினால் முதல் தரப்பு ஒரு தலைப்பட்சமாக ஒப்பந்தத்தை ரத்து செய் யலாம். தொழில் நிறுவனங்களில் உள்ள தொழில்நுட்ப கட்டுப்பாட்டு பிரிவின் பணி மாற்றியமைக்கப்படுகிறது; இனி இப்பிரி வின் ஊதியம் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மட்டுமே பொறுத்திருக்கும், முன் பிருந்ததைப் போல இதன் நிர்வாக நட

வடிக்கையைப் பொறுத்திருக்காது. ஒரு விசேஷ கட்டுப்பாட்டு உறுப்பு—அரசு ஏற்பு உறுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது; இது தர மாதிரிகள் சம்பந்தமான சோவியத் அரசு கமிட்டிக்கு கீழ்ப்பட்டது. தேசியப் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான பொருட்களையும் நுகர்வுப் பொருட்களையும் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளில் இம்முறை 1987 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த சில ஆண்டுகளிலேயே உயர் ரகப் பொருட்களின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும், இயந்திரங்களின் வேலைத் தரத்தை உயர்த்த வேண்டும், பன்முக தரக் கட்டுப்பாட்டு முறைக்குப் பெரும்பாலும் மாறியாக வேண்டும். விவசாயத் துறைப் பொருட்கள், கட்டுமானம், சேவை வசதிகளின் தரம் கணிசமாக உயர்த்தப்படும். ஐந்தாண்டுத் திட்டக் கடமைகள் கடினமானவை என்றாலும் இவற்றைக் குறைந்தபட்சக் கடமைகளாகத்தான் கருத வேண்டும்; அப்போதுதான் எல்லா துறைகளிலும் தரத்தை மேம்படுத்தும் கூடுதல் வழிகளைக் கண்டு பிடிக்க இயலும்.

## 4. உற்பத்தியை தீவிரப்படுத்தும் முறை நடைமுறைக்கு வருதல்

சோவியத் பொருளாதாரத்தை தீவிரப் படுத்தும் பாதைக்கு மாற்றுவதானது தேசியப் பொருளாதாரத்தின் நிர்வாகத்தை மேம்படுத்துவதுடன் பிரிக்க இயலாத படி தொடர்புடையது. நிர்வாக முறையின் பன்முக வளர்ச்சியானது, திட்டமிடல், பொருளாதார உந்து சக்திகள், ஊக்குவிப்புகள், நிர்வாகத்தின் ஸ்தாபனக் கட்டமைப்பு ஆகியவற்றின் அங்கக இணைப்பிற்கும் பயன் மிகு பரஸ்பரச் செயலாக்கத்திற்கும் உதவ வேண்டும்.

பொருளாதார நிர்வாகத்தை இடையறாது எப்போதும் மேம்படுத்தி வர வேண்டும். ஆனால் இத்துறையில் இன்று நிறைய பிரச்சினைகள் சேர்ந்துள்ளதால் தனிப்பட்ட மாற்றங்கள் போதாது என்ற நிலை ஏற்பட்டது, அடிப்படை சீரமைப்பு தேவைப் பட்டது. அதாவது நடைமுறையில் உற்பத்தி முழுவதையும் சமூகத் தேவைகளுக்கு, மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உட்படுத்த வேண்டும்; நிர்வாகத்தின் நோக்கம் செயல்வன்மையையும் தரத்தையும் உயர்த்துவதாயும், விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்

படுத்துவதாயும், உழைப்பின் விளைபயனில் உழைப்பாளிகளின் அக்கறையை வளர்ப்ப தாயும், தேசியப் பொருளாதாரத்தின் ஒவ் வொரு அங்கத்திலும், குறிப்பாக உற்பத்தி யாளர் கூட்டுகளில் முன்முயற்சியை வளர்ப் பதாயும் இருக்குமாறு செய்ய வேண்டும். சாராம்சத்தில் பார்த்தால், பொருளாதாரக் கொள்கையின் வேலைத்திட்டக் கடமை களுக்கு ஏற்றபடியான நிர்வாக முறையை உருவாக்குவதைப் பற்றி இங்கே குறிப்பிடப் படுகிறது.

## பிரச்சினையின் வரலாற்றுச் சுருக்கம்

சோவியத் பொருளாதாரத்தின் வெற்றி கள் சோஷலிசத் திட்டமிடலிலிருந்து பிரிக்க இயலாதவை. சோவியத் யூனியன்தான் முதன் முதலாக திட்டமிட்ட தேசியப் பொருளாதார நிர்வகிப்பில் இறங்கியது. உற்பத்தி சாதனங்களின் மீதான பொது வுடைமையும் சோஷலிசத்தின் பொருளா தார முறையும்தான் இதன் அடிப்படை யாகும். இந்த வரம்புகளுக்குள்தான் தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் திட்டமிட்ட உற்பத்தி ஒழுங்கமைப்பு முறைகள் உரு வாக்கி, வளர்க்கப்பட்டன; சோஷலிச சமு தாயத்திற்கே உரித்தான இம்முறைகள் முத லாளித்துவ முறைகளிலிருந்து கோட்பாட்டு ரீதியாக மாறுபட்டவை. சோஷலிச தொழில் நிறுவனங்களின் செயல்வன்மையை, சோஷ

லிசப் பொருளாதாரம் முழுவதன் செயல் வன்மையை உயர்த்துவதற்கான ஊக்குவிப்பு முறைகளும் திட்ட அம்சங்களும் இவற்றிலடங்கும்.

சோஷலிச சமுதாயத்தில் புதிய, திட்டமிட்ட உழைப்பு ஒழுங்கமைப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது; இது மக்கள் அனைவரின் நலன் கருதி உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை துரிதப்படுத்தியது. இதன் மூலம் உற்பத்தி சாதனங்களின் மீதான தனியுடைமைதான் பொருளாதார ஒழுங்கமைப்பிற்கான இயற்கையான, விவேகமான வடிவம் என்ற பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களின் கூற்று உடைத்தெறியப்பட்டது.

முதலாளித்துவத்தில் சமுதாய ரீதியாக அவசியமான உழைப்புச் செலவைக் குறைக்கும் சாதனம் போட்டியாகும். சந்தைக்கான பண்ட உற்பத்தியும், லாப வேட்டையும் உற்பத்தியின் தொழில்நுட்ப அடித்தளத்தை மேம்படுத்தும்படியும், செலவுகளைக் குறைக்கும்படியும், உற்பத்திப் பொருட்களைப் புதுப்பிக்கும்படியும், அவற்றின் தரத்தை மேம்படுத்தும்படியும் முதலாளிகளை நிர்ப்பந்திக்கின்றன. ஆனால் முதலாளித்துவ சிக்கனம் தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டுவதால் அடையப்படுகிறது, சாராம்சத்தில் இது பகை முரண்பாட்டுத் தன்மையை உடையது. முதலாளித்துவத்தில் ''உழைப்பின் உற்பத்தித் திறன்தான் மூலதனத்தின் உற்பத்தித் திறனாகத் திகழு

கிறது''*. இதன் தவிர்க்க இயலா விளைவாக உற்பத்தியின் தான்தோன்றித்தனமும் அராஜகத் தன்மையும் வலுப்படுகின்றன.

முதலாளித்துவ புனருற்பத்தியின் முரண்பாடுகளும் இவற்றின் விளைவாக தொழில் நுட்ப முன்னேற்றத்தின் சாத்தியப்பாடுகளுக்கும் இவற்றை நடைமுறையில் பயன்படுத்துவதற்கும் இடையில் தோன்றிய பிளவும் ஏகாதிபத்திய சகாப்தத்தில் குறிப்பாக வலுப்பட்டன. ஏகபோகங்களின் ஆதிக்கமும், இவை அரசு உறுப்புடன் இணைந்துள்ளதும், இவை கட்டவிழ்த்து விட்டுள்ள ஆயுதப் போட்டியும் முதலாளித்துவப் போட்டியின் இழப்புகளை அதிகப்படுத்தியுள்ளன, இதை இன்னமும் கடுமையானதாக, அழிவுகரத் தன்மையுள்ளதாக மாற்றியுள்ளன.

சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் அடைந்த வெற்றிகள், முதலாளித்துவ உற்பத்தி இயங்கும் முறை, இதை ஊக்குவிக்கும் உந்து சக்திகள் பற்றிய பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் தத்துவார்த்த கருத்துகள் வளர்ச்சியடைவதன் மீது தாக்கம் செலுத்தின.

இன்று சோவியத் யூனியனில் பொருளாதாரத் துறையிலும் சமூக உறவுகளிலும் ஆழ்ந்த மாற்றங்கள் ஏற்பட்டு வரும்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 26, பாகம் 1, பக்கம் 400 (ருஷ்ய மொழியில்).

பொழுது கடந்த கால அனுபவத்தின் மீதும் இன்றைய நடப்புகள் மீதும் ஆர்வம் அதிகரிக்கிறது.

சோஷலிச தேசியப் பொருளாதாரத்தைத் திட்டமிடுவதில் பொருளாதாரத்தின் செயல்வன்மையை அதிகரிக்கும் முறைகளும் ஊக்குவிப்புகளும் அடங்கியுள்ளன, இவை முதலாளித்துவத்தில் உள்ளவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. உற்பத்தி சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமை தேசியப் பொருளாதாரத்தின் வளங்களை நீண்ட கால லட்சியங்களுக்கும் பொருளாதாரக் கட்டுமானத்தின் கடமைகளுக்கும் பகிர்ந்தளிக்கவும், முதலாளித்துவப் போட்டியால் சமுதாயத்திற்கு ஏற்படும் இழப்புகளை அகற்றவும் சோஷலிச அரசிற்கு வாய்ப்பளித்தது. ''உற்பத்தி சாதனங்களை பொதுச் சொத்தாக மாற்றினால், அது இப்போது உற்பத்தி வளர்ச்சிக்கு உள்ள செயற்கையான தடையை அகற்றுவது மட்டுமின்றி, உற்பத்தி சக்திகளும் உற்பத்திப் பொருட்களும் நேரடியாக விரயப்படுத்தப்பட்டு அழிக்கப்படுவதற்கும்—இன்று உற்பத்தியின் தவிர்க்க இயலா துணை அம்சங்களாக விளங்கும் இப்போக்குகள் நெருக்கடிகளின் பொழுது உச்ச கட்டத்தை அடைகின்றன—ஒரு முடிவு கட்டும்''* என்ற எங்கெல்சின் மேதைமை மிக்க கணிப்பு நிறைவேறியது.

---

* K. Marx, F. Engels, *Collected Works*, Moscow, Progress Publishers, Vol. 25, p. 270.

சமூக உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்தும் திட்ட முறையில் உற்பத்தி வளர்ச்சிக்கான நடவடிக்கைகள், கடமைகளைத் திட்டமிடுவதும், இதற்காக சுயப் பொருளாதாரக் கணக்கீட்டு முறைகள், ஊக்குவிப்புகளைப் பயன்படுத்துவதும் அடங்கும். அதுவும் ஊக்குவிப்புகள் வெளி அம்சமாக இல்லாமல், தேசியப் பொருளாதாரத் திட்ட முறை முழுவதன் ஓர் அங்கமாகத் திகழுகின்றன.

முதலாவது ஆண்டுத் திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டங்களிலிருந்தே உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதும் உற்பத்திப் பொருட்களின் அடக்கவிலையைக் குறைப்பதும் உற்பத்தியின் செயல்வன்மையை அதிகரிக்கும் திட்ட கடமைகளாக நிர்ணயிக்கப்படுகின்றன. இக்கடமைகளோடு பல தொழில்நுட்ப-பொருளாதாரக் குறியீடுகள் மேன்மேலும் இணைக்கப்பட்டன; இக் குறியீடுகள் ஒரு அலகு உற்பத்திப் பொருளுக்கு எவ்வளவு உற்பத்தி சாதனங்களும் உழைப்பும் செலவாயின என்பதைக் காட்டின.

திட்டத்தின் சமூக-பொருளாதார லட்சியங்களின் அடிப்படையில் உற்பத்தியின் செயல்வன்மையை மதிப்பிடும் புதிய தேசியப் பொருளாதார வரையளவுகள் யுத்தத்திற்கு முந்தைய காலகட்டத்திலேயே உருவாக்கப்பட்டன; அந்தந்த துறைகள்,

தொழில் நிறுவனங்களில் இதற்கான குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டன.

சோவியத் யூனியனில் உருவான பொருளாதார நிர்வகிப்பு முறை மாற்றமின்றி இருக்கவில்லை. உற்பத்தி சக்திகளோடு சேர்ந்து, நாட்டின் முன் நின்ற புதிய கடமைகளை கணக்கில் கொண்டு இதுவும் வளர்ச்சியடைந்தது. 60ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் திட்டமிடலிலும் நிர்வாகத்திலும் ஏற்பட்ட மாற்றங்களையும் இன்று நடைபெறும் மறுசீரமைப்பையும் முக்கியமான கட்டங்களாகச் சுட்டிக் காட்டலாம். ஒவ்வொரு கட்டத்திலும் மையத் திட்டத் தலைமையின் பொதுக் கோட்பாடுகள் அப்படியே இருக்க, மைய அம்சத்திற்கும் அமைச்சகங்கள், தொழில் நிறுவனங்களின் சுதந்திரத்திற்கும் இடையிலான விகிதமும், திட்டம், சுயப்பொருளாதாரக் கணக்கீடு மற்றும் பொருளாதார உந்து சக்திகளின் பரஸ்பரத் தொடர்பும் நிர்வாகத்தின் ஸ்தாபன வடிவங்களும் மாற்றமடைந்தன.

சமூக உற்பத்தியின் செயல்வன்மையை நிர்ணயித்து, திட்டமிடும் முறையியலில் கணிசமான மாற்றங்கள் 8வது, 9வது ஐந்தாண்டுகளில் செய்யப்பட்டன. இந்தப் பத்தாண்டில் தேசியப் பொருளாதாரத் திட்டமிடலின் முறையியல் வளர்ச்சியில் பின்வரும் அம்சங்கள் காணப்பட்டன: திட்டங்களைத் தீட்டும் பொழுதும், திட்ட நிறைவேற்றத்தை மதிப்பிடும் பொழுதும் செயல்வன்மையைக் காட்டும்

குறியீடுகளின் பங்கு வலுப்படுத்தப்பட்டது, இக்குறியீடுகள் மேம்படுத்தப்பட்டன, உற்பத்தியை தீவிரப்படுத்தல் கடமைகளுக்கு மிகவும் ஏற்ற நிர்வாக மற்றும் உற்பத்தி ஒழுங்கமைப்பு வடிவங்களும் முறைகளும் தேடப்பட்டன.

இதனால் உற்பத்தியின் வளர்ச்சி தேசியப் பொருளாதாரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் நுகர்வாளர்களின் நலன்களுக்கு ஏற்றபடி இருப்பதையும் தன் நோக்கமாகக் கொண்டது. பண்டக் குறியீடுகள் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சியை அளவிடவும் அடிப்படையாக அமைந்தன. திட்டமிடலில் லாபத்தின் பங்கு அதிகரித்தது, இதன் பின்னணியில் சுயப்பொருளாதாரக் கணக்கீட்டை ஒழுங்கமைப்பதும் மாறியது. தொழில் நிறுவனங்களின் பொருளாதார நிலை, இவை தோற்றுவிக்கும் உற்பத்தி வளர்ச்சி, ஊக்குவிப்பு நிதிகள் (செய்பவர்களுக்கான போனஸ், வீட்டு, சமூக-கலாசாரக் கட்டுமானத்திற்கான நிதி) ஆகியவை லாபத்தின் அளவை மேன்மேலும் பெரிதும் சார்ந்திருக்கலாயின. இவை உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பிலும் அடக்கவிலையைக் குறைப்பதிலும் உற்பத்தியில் உள்ளவாய்ப்புகளைப் பயன்படுத்துவதிலும் தொழில் நிறுவனங்களுக்குள்ள அக்கறையை அதிகப்படுத்தும் கடமையை முன்வைத்தன.

உற்பத்தியின் லாப விகிதம் திட்டக் குறியீடாகச் சேர்க்கப்பட்டது, இதை நிர்ண

யிக்கும் முறை மாற்றப்பட்டது. தொழிற் துறையில் லாப விகிதமானது லாபத்திற்கும் உற்பத்திப் பொருளின் அடக்கவிலைக்கும் உள்ள விகிதத்தால் முன்னர் கணக்கிடப்பட்டது; இப்போது இது லாபத்திற்கும், தொழில் நிறுவனத்திடம் உள்ள அடிப்படை உற்பத்தி சாதனங்கள் மற்றும் புழக்க சாதனங்களின் மதிப்பிற்கும் உள்ள விகிதத்தால் கணக்கிடப்படுகிறது. அடக்கவிலையையும் ஒரு ரூபிள் பண்டத்திற்கு ஆகும் செலவுகளையும் மையப்படுத்தப்பட்ட திட்டத்தால் குறைக்கும் முறை மாற்றப்பட்டது. உற்பத்திப் பொருளின் அடக்கவிலையோடு கூட வேலையிடங்களின் எண்ணிக்கையையும் பொருளாயத செலவுகளின் மட்டத்தையும், 8வது ஐந்தாண்டில் உழைப்பின் உற்பத்தித் திறனையும் திட்டமிடும் உரிமை தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

தொழிற்துறையை அடுத்து அரசுப் பண்ணைகள், போக்குவரத்து மற்றும் வர்த்தக ஸ்தாபனங்கள், சேவைத் துறையைச் சேர்ந்த சுயப்பொருளாதாரக் கணக்கீட்டு நிறுவனங்கள் ஆகியவையும், 9வது ஐந்தாண்டில் பெரும்பாலான கட்டுமான ஸ்தாபனங்களும் புதிய திட்டமிடும் முறைகளுக்கும் பொருளாதார ஊக்குவிப்பு முறைகளுக்கும் மாற்றப்பட்டன.

தொழிற்துறையில் உற்பத்தி மற்றும் விஞ்ஞான-உற்பத்திக் கூட்டமைப்புகளைத் தோற்றுவித்ததானது உற்பத்திக் குவிப்பு

மூலமும் தொழில் நிறுவனங்களின் தனித் துறைப்பாட்டை ஆழப்படுத்துவதன் மூலமும் உற்பத்தியின் செயல்வன்மையை அதிகப் படுத்தும் வாய்ப்புகளைப் பெருக்கியது. 1976ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உற்பத்திக் கூட்டமைப்புகள் தொழிற்துறையின் மொத்த உற்பத்தியில் 24% தந்தன. விவசாய-தொழிற்துறை இணையங்கள் தோற்றுவிக்கப்பட்டதையடுத்து விவசாயத் துறையிலும் உற்பத்திக் குவிப்பு வளர்ச்சியடைந்தது. கீழ்மட்டத்தில் உற்பத்திக் கூட்டமைப்புகளோடு சேர்ந்து 9வது ஐந்தாண்டின் இறுதியில் நிர்வாகத்தின் நடு மட்டத்தில் அகில யூனியன் மற்றும் குடியரசு சுயப் பொருளாதாரக் கணக்கீட்டு தொழிற்துறை கூட்டமைப்புகள் தோன்றலாயின.

உற்பத்தியின் செயல்வன்மையைத் திட்டமிடும் முறையியலின் வளர்ச்சியானது தேசியப் பொருளாதாரத்தின் எல்லா மட்டங்களிலும் ஒரே மாதிரியான செயல்வன்மைக் குறியீடுகளின் முறையை உருவாக்கியதில் வெளிப்பட்டது. இம்முறையின் முக்கிய அம்சங்கள் 9வது ஐந்தாண்டு திட்டத்தின் முறையியல் குறிப்புகளில் சுட்டிக் காட்டப்பட்டன. 10வது ஐந்தாண்டுத்திட்டத்தின் குறிப்புகளில் உற்பத்தியின் செயல்வன்மைத் திட்டக் குறியீடுகளைப் பற்றிய விளக்கமும், இவற்றை நிர்ணயிக்கும் கோட்பாடுகள், முறைகளும், திட்டமிடும் பொழுது

இவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதும் இடம் பெற்றுள்ளன.

உற்பத்தியின் செயல்வன்மை பற்றிய திட்டக் குறியீடுகளின் முறையில் கண்டிப்பான குறியீடுகளோடு கூட சில கணக்கீட்டுக் குறியீடுகளும் உள்ளன. உழைப்பின் உற்பத்தித் திறன் மற்றும் லாப விகித அதிகரிப்பு பற்றிய குறியீடுகள் கண்டிப்பான குறியீடுகளாகும். செயல்வன்மை பற்றிய மற்ற குறியீடுகளைத் திட்டமிடும் பொறுப்பு அந்தந்த துறைகள் (அமைச்சகங்கள்), கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது; அரசு திட்டக் கடமைகளின் அடிப்படையில் இவை நிர்ணயிக்கப்படும்.

செயல்வன்மையைப் பற்றிய பொதுவான குறியீடுகளும், ஆள் பலம், அடிப்படை உற்பத்தி சாதனங்கள், முதலீடு ஆகியவற்றைப் பயன்படுத்துவது, பொருளாயத செலவுகள் முதலியவற்றைக் காட்டும் குறியீடுகளும் உற்பத்தியின் செயல்வன்மையைக் காட்டும் திட்டக் குறியீடுகளின் முறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆனால் பொருளாதார முறையில் செய்யப்பட்ட மாற்றங்கள் உற்பத்தியை தீவிரப்படுத்தலின் அடிப்படைக் கடமைகளை நிறைவேற்ற போதுமானவையாக இல்லை. திட்டமிடும் முறையும் ஊதிய முறையும் மற்றும் ஊக்குவிப்பு முறைகளும் பெரும்பாலும் அளவுநிலைக் குறியீடுகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இது மாறிய

பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு ஏற்றதா யில்லை; இது எல்லா வழிகளையும் அணி திரட்டி, உற்பத்தி உள்ளாற்றலைச் சிறப பாகப் பயன்படுத்துவதில் உழைப்பாளிகளின் அக்கறையைக் கணிசமாக வலுப்படுத்தும் அவசியத்திற்கும் உகந்ததாயில்லை. இது தவிர 70ஆம் ஆண்டுகளில் கூட்டமைப்பு கள், தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப் பட்ட உரிமைகள் மட்டானவையாக இருந் தன, காரியாலய நிர்வாக முறைகளை அதிகப்படுத்தும் போக்கு திரும்பியது, இவற் றின் செயல்வன்மையை உயர்த்தும் பணி தளர்த்தப்பட்டது.

பொருளாதார நிர்வாக முறையை அடி யோடு மாற்றியமைக்கும் கடமை, செலவு களை அதிகப்படுத்தும் போக்கிலிருந்து மாறும் கடமை மேன்மேலும் உடனடியான, முக்கியக் கடமையாகியது. அதே நேரத்தில் இதற்குத் தீர்வு காணும் வழிகளும் தெட்டத் தெளிவாகத் தெரிந்தன. இது கடந்த ஐந்தாண்டில் நன்கு வெளிப்பட்டது; நிர் வாகத் தலைமையை மேம்படுத்தும் பணி தீவிரப்படுத்தப்பட்டதையடுத்து உற்பத்தி வளர்ச்சியின் தரக் குறியீடுகள் இக்கட்டத் தில் கணிசமாக மேம்பட்டன.

## பதினொன்றாம் ஐந்தாண்டின் அனுபவம்

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி யின் 26வது காங்கிரசின் முடிவுகளுக்கேற்ப

இக்காலகட்டத்தில் தொழில் நிறுவனங்கள், பல்வேறு துறைகளின் செயல்வன்மையை உயர்த்த பொருளாதார இலாக்காக்களும் அந்தந்த அமைச்சகங்களும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. கட்சியின் மத்திய கமிட்டி முழுப் பேரவைக் கூட்டங்களில் அரசு பொருளாதார, சமூக வளர்ச்சியின் திட்ட நகல்கள் விவாதிக்கப்பட்ட பொழுதும், சோவியத் பொருளாதார வளர்ச்சியின் முக்கியப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்ட பொழுதும் மேற்கூறிய அம்சங்கள் பன்முறை பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவற்றில் முக்கியமானவற்றைப் பற்றி கட்சி மத்திய கமிட்டியும் அரசாங்கமும் முக்கியத் தீர்மானங்களை ஏற்றன, இவற்றின் நிறைவேற்றம் குறைகளை அகற்ற உதவியது. இவற்றில் முக்கியமானவற்றை—திட்ட நிர்வாகம் மேம்படுத்தப்பட்டது, உற்பத்தியில் கட்டுப்பாடும் ஒழுங்கமைப்பும் வலுவாக்கப்பட்டது, தொழில் நிறுவன நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் பொருளாதார அம்சங்களை வலுப்படுத்தல்—பார்ப்போம்.

**மையத் திட்டமிடலை மேம்படுத்துவதென்பது** உற்பத்தியை தீவிரப்படுத்தலின் காரணிகளில் ஒன்றாகும். இதை மேன்மேலும் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது கட்சி ஆவணங்களிலிருந்து நன்கு தெரிகிறது. உதாரணமாக இந்நோக்கங்களுக்காக நீண்ட கால திட்டமுறையைப் பயன்

படுத்துவது அதிகரித்தது; இதன் அனுகூலங்கள், வாய்ப்புகளைப் பற்றி 70ஆம் ஆண்டுகள் பூராவும் கூறப்பட்டது. பின்வரும் நீண்ட கால பன்முகச் செயல்திட்டங்கள் பதினொன்றாம் ஐந்தாண்டில் தீட்டப்பட்டு, ஆமோதிக்கப்பட்டன: உணவுப் பொருள் செயல்திட்டம் (1982), எரிசக்தி செயல் திட்டம் (1983), நீர்ப்பாசனத் திட்டம் (1984), இயந்திரக் கட்டுமான வளர்ச்சி திட்டம், தேசியப் பொருளாதாரத்தை இரசாயனமயப்படுத்தும் திட்டம், மக்களுக்கான நுகர்வுப் பண்ட உற்பத்தி மற்றும் சேவை வசதி திட்டம், பரஸ்பரப் பொருளாதார உதவி கவுன்சில் நாடுகளின் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்ற திட்டம் (1985).

இத்திட்டங்களில் பல 2000ஆம் ஆண்டு, அதற்குப் பிந்திய காலகட்டம் வரையிலானவை. இவற்றின் நிறைவேற்றத்தில் முதல் கட்டம் பதினொன்றாம் ஐந்தாண்டில் இருந்தது, இதன் கடமைகள் அந்தந்த ஆண்டுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டன. இது நீண்ட கால செயல்திட்டங்களில் இடம் பெற்றுள்ள பிரச்சினைகளின் தீர்வில் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவியது, தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் சிக்கனத்தை வலுப்படுத்த உதவியது.

திட்ட நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தவும் ஆண்டு திட்டங்களுக்கும் அதிக ஸ்திரத்தன்

மையை அளிக்கவும் பெரும் கவனம் செலுத்தப்பட்டது. தனிப்பட்ட துறைகள், பொருளாதாரப் பிரதேசங்களின் வளர்ச்சி சம்பந்தமாக யூனியன் குடியரசுகளின் அமைச்சரவைகள், ஸ்தல கட்சி மற்றும் சோவியத் உறுப்புகள் வைத்த முன்மொழிவுகளின் எண்ணிக்கை ஐந்தாண்டின் ஆரம்பத்தில் பெருகியது; இவற்றில் பல அரசுத் திட்டங்கள் ஆமோதிக்கப்பட்ட பின் வந்தன. இதில் உள்ள வாய்ப்புகளை விட கணிசமான அளவு கூடுதலாக நிதி கோரப்பட்டது. திட்ட அமைப்புகளோ இவற்றிற்கு யதார்த்தமாகத் தேவையான பொருளாயத, நிதி வசதிகளின்றியே இவற்றை ஆதரித்தன.

இப்படிப்பட்ட நடைமுறை—இதற்கு எவ்வளவு நல்லெண்ணம் இருந்தாலும்—சோஷலிசப் பொருளாதார நிர்வாகத்தின் முக்கியக் கருவி என்ற வகையில் அரசுத் திட்டத்தின் ஒழுங்கமைப்பு பணியைக் குலைத்தது, சீரிசைவான, விகிதாசாரமான பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தது. திட்டங்கள் தீட்டப்படும் பொழுதே உரிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும், அப்பொழுதுதான் இவற்றை நன்கு கவனத்தில் எடுத்துக் கொள்ள முடியும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

திட்டக் கட்டுப்பாட்டை பின்பற்றுவதன் மீதான கண்காணிப்பும், திட்டக் கடமைகளின் நிறைவேற்றம் மீதான க்ண்காணிப்பும் வலுப்படுத்தப்பட்டன. முன்னர் இப்

பிரச்சினைகள் சாதாரணமாக காலாண்டு, அரையாண்டு, ஆண்டிற்கான தேசியப் பொருளாதார வளர்ச்சி முடிவுகள் விவாதிக்கப்படும் பொழுது சோவியத் அமைச்சரவையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

11வது ஐந்தாண்டின் நடுப்பகுதியிலிருந்து திட்ட நிறைவேற்றத்தின் கண்காணிப்பில் மைய, ஸ்தல கட்சி ஸ்தாபனங்கள் தீவிரமாக ஈடுபடலாயின. பொருளாதாரக் கட்டுமானத்திற்கு கட்சி அளித்த தலைமை இதில் பிரதிபலித்தது. திட்ட நிறைவேற்றம் பற்றி கட்சியின் மத்திய கமிட்டி, யூனியன் குடியரசுகளின் கட்சி மத்திய கமிட்டிகள், பிராந்திய, மாவட்ட, வட்ட, அடிமட்ட கட்சி ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் அடிக்கடி விவாதிக்கப்பட்டது. இத்தகைய விவாதங்களின் பொழுது சாதனைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன, குறைகள் சுட்டிக் காட்டப்பட்டன, வெற்றிகரமான திட்ட நிறைவேற்றத்திற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திட்டக் கடமைகளின் நிறைவேற்றத்தின் மீது கட்சி ஸ்தாபனங்கள், உழைப்பாளர் கூட்டுகளின் கவனம் அதிகரித்துள்ளது அந்தந்த ஆண்டுகளின் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளிலிருந்து தெரிகிறது. ஐந்தாண்டின் துவக்கத்தில் தொழிற்துறை வளர்ச்சி வேகங்கள் திட்டமிட்டதை விடக் குறைவாக இருந்ததெனில் ஐந்தாண்டின் நடுப்பகுதியிலிருந்து திட்டக் கடமைகள்

வெற்றிகரமாக நிறைவேற்றப்படலாயின. 1983இல் தொழிற்துறையின் உற்பத்தி அளவு 4.2% கூடியது (3.2% அதிகரிப்புதான் திட்டமிடப்பட்டிருந்தது), 1984இல் 4.2% கூடியது (திட்டப்படி 3.8%). 1985இல் தொழிற்துறை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பு திட்டமிட்டபடியே 3.9%ஆக இருந்தது.

ஐந்தாண்டின் நடுப்பகுதியிலிருந்து சோஷலிச உழைப்புக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதன் மீது எங்கும் கவனம் செலுத்தப்பட்டது, இதற்கு சட்ட, நிர்வாக முறைகளோடு கூட பொருளாதார முறைகளும் வலுப்படுத்தப்பட்டன. இப்பணி நல்ல விளைவுகளைத் தந்தது. தொழிற்துறையிலும் கட்டுமானத்திலும் 1983இல் வேலை நேர இழப்பு குறைந்தது; இது இதற்கு முந்திய எட்டு ஆண்டுகளின் குறைப்பிற்குச் சமமாயிருந்தது. இதன் சமூக, தார்மீக விளைவுகள் குறிப்பிடத்தக்கவை—எல்லா இடங்களிலும் உற்பத்தியில் ஒழுங்குமுறை வலுப்பட்டது, தத்தம் கடமைகளை பொறுப்புணர்வோடு அணுகலானார்கள்.

1983 ஜூனில் உழைப்பாளர் கூட்டுகளைப் பற்றிய சட்டம் ஏற்கப்பட்டது. உற்பத்தியில் நன்கு வேலை செய்பவர்கள், புதிது புனைபவர்கள், நீண்ட காலம் நேர்மையாக பணி புரிபவர்கள் ஆகியோருக்கு அந்தந்த தொழில் நிறுவனத்தின் நிதிகளைக் கொண்டு கூடுதல் சலுகைகளை வழங்கும்

படி உழைப்பாளர் கூட்டுகளின் நிர்வாகிகள், தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்கு கூறப்பட்டது. ஆண்டு விடுமுறையை நிர்ணயிக்கும் பொழுதும் வீடுகளின் வினியோகத்தின் பொழுதும் ஓய்வில்லங்கள், விடுமுறையில்லங்களுக்கு அனுப்பும் பொழுதும் சம்பந்தப்பட்டவரின் உழைப்பு முழுமையாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதே நேரத்தில் உழைப்புக் கட்டுப்பாடு மீறப்படுகையில் நிர்வாக கண்டிப்போடு கூட பொருளாதார பொறுப்பையும் தொழிலாளர்கள் ஏற்றாக வேண்டும். உரிய காரணங்களின்றி வேலைக்கு வராதவர்கள், ஒரு வேலை நாளில் 3 மணி நேரத்திற்கு மேலாக வேலையிடத்தில் இல்லாதவர்கள் ஆகியோருக்கு ஆண்டு விடுமுறை குறைக்கப்பட்டது. உழைப்புக் கட்டுப்பாட்டை மீறுபவர்களைக் குறைவான ஊதியமுள்ள வேலைக்கு 3 மாத காலத்திற்கு மாற்றவும் இவர்களின் போனஸை குறைக்கவும் தொழில் நிறுவன நிர்வாகிகளுக்கு உரிமை வழங்கப்பட்டது; தொழில் நிறுவனத்திற்கு இழப்பு ஏற்பட்டாலும், தரக் குறைவான பொருட்களை உற்பத்தி செய்தாலும் அதற்கான பொருளாதார பொறுப்பு அதிகரிக்கப்பட்டது.

உழைப்பு மற்றும் உற்பத்திக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதிலிருந்து துவங்கிய சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி இன்னமும் அதிகமான பின்விளைவுகளை

ஏற்படுத்த வல்ல சீர்திருத்தங்களைத் தீட்டி, நிறைவேற்றுவதில் இறங்கியது. சோஷலிச நிர்வாகத்தை மேம்படுத்துவது சம்பந்தமான தனிப்பட்ட முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட அதே சமயம், திட்டமிட்ட பொருளாதாரத்தின் அனுகூலங்களை மேலும் சிறப்பாகப் பயன்படுத்துவது சம்பந்தமான நவீன பொருளாதார செயல் திட்டத்தின் கோரிக்கைகளுக்கேற்ப பொருளாதார நிர்வாக முறையை மாற்றியமைக்கும் பொதுக் கருத்தமைப்பை முன்வைப்பதன் மீது கட்சியின் தத்துவார்த்த சிந்தனையும் நடைமுறை நடவடிக்கையும் மேன்மேலும் குவிக்கப்பட்டன.

மைய திட்டமிடலை மேம்படுத்தும் பாதையில் இப்பணியின் முக்கியப் போக்குகளைப் பற்றி முன்னர் கூறப்பட்டது. இப்போது இதன் இன்னொரு அம்சத்தை—தொழில் நிறுவனங்களின் முன்முயற்சியின் வளர்ச்சி—கவனிப்போம். நிர்வாகத்தை மேம்படுத்துவதில் இதன் முக்கியத்துவம் 11வது ஐந்தாண்டின் நடுப்பகுதியிலிருந்து கணிசமாக அதிகரித்தது.

நடைமுறை அனுபவத்தைப் பொதுமைப் படுத்தியதானது, திட்டமிடலிலும் நிர்வாக நடவடிக்கையிலும் உற்பத்திக் கூட்டமைப்புகளின் (தொழில் நிறுவனங்களின்) உரிமைகளை விரிவுபடுத்துவது, உழைப்பின் முடிவுகள் மீதான பொறுப்பை அதிகப் படுத்துவது ஆகியவை சம்பந்தமாக கூடுதல்

நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று காட்டுகிறது.

உற்பத்திக் கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்களின் திட்ட நடவடிக்கையை மேம்படுத்தும் கடமையும், தரமான, உயர் உற்பத்தித் திறனுள்ள உழைப்பையும், முன்முயற்சியையும், சோஷலிச உணர்வையும் ஊக்குவித்து, விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தை துரிதப்படுத்தி, உற்பத்தியை தீவிரப்படுத்த உதவும் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும் கடமையும் முன்வைக்கப்பட்டன. மைய பொருளாதார நிர்வகிப்பை மேற்கொண்டு மேம்படுத்தி, வலுப்படுத்துவது, தேசியப் பொருளாதார தலைமையில் ஜனநாயக அடிப்படைகளை வலுப்படுத்துவது, தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் நிர்வகிப்பில் உழைப்புக் கூட்டுகளின் பங்கை உயர்த்துவது, சுயப்பொருளாதாரக் கணக்கீடு முறையைத் தொடர்ச்சியாகப் புகுத்துவது ஆகியவைதான் மேற்கூறிய நடவடிக்கைகளின் நோக்கமாகும்.

இந்த நோக்கத்தோடு 1984 ஜனவரியில், இரண்டு அகில யூனியன் இயந்திரக் கட்டுமான அமைச்சகங்கள் (கனரக மற்றும் போக்குவரத்து இயந்திரக் கட்டுமானம், மின்சார-தொழில்நுட்ப இயந்திரத் துறை), மூன்று குடியரசு அமைச்சகங்கள் (உக்ரேனிய உணவுத் தொழிற்துறை, பைலோருஷ்ய நுகர்வுப் பொருள் தொழிற்துறை, எஸ்தோனிய ஸ்தல தொழிற்துறை) ஆகிய 5

அமைச்சகங்களில் பொருளாதாரப் பரிசோதனை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இது மொத்தத்தில் தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் பொருளாதார நடவடிக்கை மீது நல்ல செல்வாக்கு செலுத்தியது. முக்கியக் குறியீடுகளில் ஒன்றின் (ஒப்பந்தங்களுக்கேற்ப பொருள் விற்பனை) திட்ட நிறைவேற்றமும் பொருளாதாரப் பணியும் மேம்பட்டன. 1984இல் பொருளுற்பத்தி அதிகரிப்பு முழுவதும்உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பால் அடையப்பட்டது, அடக்கவிலை குறைப்பு சம்பந்தமான கடமைகளும் சோஷலிச கடப்பாடுகளும் குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாக நிறைவேற்றப் பட்டன. தொழில் நிறுவனங்களில் ஆங்காங்கேயுள்ள வாய்ப்புகள் முழுமையாகப் பயன்படுத்தப்படலாயின. பல உழைப்பாளர் கூட்டுகள் உற்பத்தி அதிகரிப்பு வேகங்களை துரிதப்படுத்தின, உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்தின.

அதே நேரத்தில், புதிய சூழ்நிலையில் கிட்டிய வாய்ப்புகள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்று பரிசோதனையின் பூர்வாங்க முடிவுகள் காட்டின. ஆனால் பரிசோதனைகளுக்கேற்றபடி அமைச்சகங்கள், மத்தியப் பொருளாதார இலாக்காக்களின் பணி மாற்றியமைக்கப்படவில்லை, தொழில் நிறுவனங்களின் உரிமைகளை மட்டுப்படுத்தும் முயற்சிகளை இவை கைவிடவில்லை. மறுபுறம், செயல்வன்மையை

உயர்த்துவது சம்பந்தமான ஊக்குவிப்புகள் எல்லா இடங்களிலும் வேலையிடம், பிரிகேடு வரை எடுத்துச் செல்லப்படாததும் தன் தாக்கத்தை செலுத்தியது. தொழில் நிறுவன உழைப்பாளர் கூட்டுகள், அகில யூனியன் மற்றும் குடியரசுகளின் தொழில் கூட்டமைப்புகள், அமைச்சகங்கள், மத்தியப் பொருளாதார இலாக்காக்கள், ஸ்தல கட்சி மற்றும் சோவியத் ஸ்தாபனங்கள் ஆகியவற்றிடமிருந்து பொருளாதாரத் துறையில் தீவிரமாக சீரமைத்துக் கொள்ளுமாறும் தலைமை முறைகள், பாணிகளை மாற்றிக் கொள்ளும்படியும் கோரப்பட்டது.

சோவியத் யூனியன் அமைச்சரவை, யூனியன் குடியரசுகளின் அமைச்சரவைகள் ஆகியவற்றின் முன்மொழிவுகளுக்கேற்ப 1985 முதல் புதிய பொருளாதார நிலைமைகள் இன்னும் சில துறைகளுக்கும்—இயந்திரக் கட்டுமானம், இரும்பு உலோகத் தொழிற்துறை, உணவுத் தொழிற்துறை, நுகர்வுப் பொருள் மற்றும் ஸ்தலத் தொழிற்துறை, குடிமக்களுக்கான சேவை வசதிகள்—பரவின. இதனால் மேற்கூறிய அவசியம் இன்னமும் அதிகரித்தது.

இத்துறைகளில் உள்ள தொழில் நிறுவனங்களின் வேலைக் குறியீடுகள் ஐந்தாண்டின் இறுதி ஆண்டில் மேம்பட்டன, அதுவும் புதிய பொருளாதார முறைகளைக் கிரகிப்பதற்காக எங்கு பெரும் பணி நடந்ததோ அங்கு இவை நன்கு மேம்பட்டன. ஏற்ற

கடமைகளின் நிறைவேற்றத்திற்கான தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் பொறுப்பு அதிகரித்தது, தரமும் உயர்ந்தது. புதிய நிர்வாகச் சூழல் குறைந்த எண்ணிக்கையிலான வேலையாட்களுடன் திட்டங்களை நிறைவேற்ற உதவுகிறது. உற்பத்தி வளர்ச்சி நிதிகள், உழைப்பாளிகளின் பொருளாதார ஊக்குவிப்பு நிதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் தொழில் நிறுவனங்களின் சுதந்திரம் அதிகரித்தது.

பரிசோதனையின் ஒரு சில சூழ்நிலைகள் மேம்படுத்தப்பட வேண்டும், குறிப்பாக விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதன் மீது பொருளாதார முறையின் தாக்கத்தை வலுப்படுத்த வேண்டும், சுயப் பொருளாதாரக் கணக்கீட்டு முறையை மேற்கொண்டு பலப்படுத்த வேண்டும், அந்தந்தத் துறைகளின் விசேஷத் தன்மையை கவனத்தில் கொள்ள வேண்டும். பரந்த அனுபவம் இதை ஊர்ஜிதப்படுத்தியது.

நீண்ட காலகட்டத்தில் ஏராளமான குறைகள் சேர்ந்ததால், குறுகிய காலகட்டத்தில் இவற்றை அகற்றுவது இயலாததாகியது. தனிப்பட்ட சில நடவடிக்கைகளால் தீய போக்குகளை அகற்றவோ, பொருளாதாரத்தை ஸ்திரமான, சீரிசைவான பாதைக்கு மாற்றவோ இயலவில்லை. பொருளாதாரப் பரிசோதனை உரிய பயனைத் தராததற்கு

இது பன்முகத் தன்மையற்று இருந்ததுதான் காரணம் ஆகும்.

சாராம்சத்தில் புதிய முறைகள் பழைய தாகிப் போன பொருளாதார இயந்திரத்தில் சேர்க்கப்பட்டன, இவை நிர்வாகத்தின் எல்லா அடுக்குகளுக்கும் பொருளாதார உறவுகளின் எல்லா அம்சங்களுக்கும் செல்லவில்லை. துறைகள், பிரதேசம் மற்றும் தேசியப் பொருளாதார மட்டங்களில் திட்ட முறைகள் மேம்படுத்தப்படவில்லை. பொருளாயத-தொழில்நுட்ப சப்ளை, விற்பனை, நிதி-கடன் முறை, விலையமைப்பு ஆகியவை மாற்றமின்றி இருந்தன. ஏற்கெனவே நிலவிய முறையில் தொழிற்துறையுடன் இணைந்த துறைகளாகிய தொழிற்துறைக் கட்டுமானம், போக்குவரத்து, வர்த்தகம் ஆகியவை இயங்கின. இவையெல்லாம் சேர்ந்து குறைந்தபட்ச செலவில் திட்டங்களை நிறைவேற்றும் அக்கறையை உழைப்பாளர் கூட்டுகளுக்கு ஏற்படுத்தும் நிர்வாக முறையை தோற்றுவிக்க இடையூறாக விளங்கின; தொழில் நிறுவனங்களின் உள் விவகாரங்களில் அளவிற்கதிகமான தலையீட்டை அகற்றுவதிலும் இவை குறுக்கே நின்றன.

அடிப்படை மாற்றங்கள், ஆழ்ந்த சீரமைப்பு தேவைப்பட்டன, நாட்டின் முன் நின்ற கடமைகளுக்கான அடிப்படைத் தீர்வுகளை கட்சி அயர்வின்றி தேடியது. 1985 ஏப்ரலில் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக்

கமிட்டியின் முழுப் பேரவைக் கூட்டம் இப்படிப்பட்ட சீரமைப்பைத்தான் சுட்டிக் காட்டியது; இது சோவியத் சமுதாயத்தின் வாழ்வில் திருப்புமுனையாகியது.

## அடிப்படை சீரமைப்பு

மிக முக்கிய தத்துவார்த்த கருத்துகளும் கருத்தமைப்புகளும் 27வது கட்சி காங்கிரசில் புதிய விதத்தில் வரையறுக்கப்பட்டன. உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான பரஸ்பரச் செயலாக்கம், சோஷலிச சொத்தும் இதன் பொருளாதார வடிவங்களும், பண்ட-பண உறவுகள், மத்திய நிர்வாகத்திற்கும் ஸ்தாபனங்களின் பொருளாதார சுதந்திரத்திற்கும் இடையிலான இணைப்பு போன்றவை (இவை சோஷலிச அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சினைகளாகும்) இவற்றிலடங்கும்.

சோஷலிச உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் தன்மைக்கு தாமாகவே ஏற்றவையாகும் என்ற கருத்து தவறானது என்று இப்போது புரிந்துள்ளது. இப்படிப்பட்ட கண்ணோட்டங்கள் பரவியிருந்ததானது புதிய சோஷலிச நிர்வாக பொருளாதார முறைகளை உருவாக்க சித்தாந்த ரீதியாகத் தடையாக இருந்தது. இடப்பரப்பு வளர்ச்சிப் பொருளாதாரம் மேலோங்கியிருந்த பொழுது உற்பத்தித் துறையில்

தோன்றிய சில உறவு முறைகள் பழையவை என்று ஒப்புக் கொள்வதானது பழைய பொருளாதார முறைகளை உறுதியோடு மறுத்து, இவற்றைப் புதியவற்றால் மாற்றும்படி தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் வழிகாட்டுகிறது.

நிர்வாக வடிவங்களும் முறைகளும் சோஷலிச கோட்பாடுகளுக்குப் பொருந்தி வருவதைப் பற்றிய பழைய கருத்துகளையும் மூட நம்பிக்கைகளையும் (பொருளாதார இயந்திரத்தில் எந்த ஒரு மாற்றத்தை செய்தாலும் அது சோஷலிசத்திலிருந்து வழுவுவதாக கருதப்பட்டது) கட்சி கண்டித்து, விமர்சனம் செய்தது. இது பெரும் தத்துவார்த்த முக்கியத்துவமுடையதாக இருந்தது. யதார்த்தமான பொருளாதார, சமூக விளைபயன்களும் சோஷலிசம் உண்மையிலேயே வலுப்படுவதும்தான் மேற்கூறிய பொருத்தத்திற்கான உயர் அளவு கோலாகும். இந்த அளவு கோலின் அடிப்படையில்தான் கட்டளைக் குறியீடுகளுக்கும் பொருளாதார வரையளவுகளுக்கும் இடையிலான விகிதத்தின், தொழில் நிறுவனங்களின் சுதந்திரத்திற்கும் பொறுப்புணர்விற்கும் இடையிலான விகிதத்தின் தன்மையும் செயல் வன்மையும் மதிப்பிடப்பட வேண்டும். பொருளாதார விஞ்ஞானமும் நிர்வாக நடைமுறையும் உருவாகியுள்ள நிலைமையைப் பகுப்பாய்வு செய்து, பழையதாகிப் போனவற்றை உறுதியோடு மாற்றி, சீரமைக்க

உதவ வேண்டும். இதில் தம்பட்டமடிப்பதும், விஷயத்தின் சாரத்தை வெற்றுத் தீர்மானங்களால் மாற்றுவதும் அனுமதிக்கத் தகாதது என்று கோடிட்டுக் காட்டப்பட்டது.

பொருளாதாரத்தில் சோஷலிச சுய நிர்வாகத்தை மேம்படுத்துவது, இலாக்கா, ஸ்தல நலன்களுக்கு முன் பொது நலன்களுக்கு முன்னுரிமை வழங்குவது, சுயப் பொருளாதாரக் கணக்கீட்டு முறையை வலுப்படுத்த பண்ட-பண உறவுகளைப் பயன்படுத்துவது, உயர் உற்பத்தித் திறனுள்ள உழைப்பிற்கு ஊக்கமளித்தல் ஆகியவற்றைப் பற்றிய கருத்துகளை மி.செ.கர்பச்சோவ் தன் உரையில் முன்வைத்தார். நிர்வாகத்தை செயல்வன்மை மிக்க முறையில் சீரமைப்பதில் இதற்குப் பெரும் தத்துவார்த்த முக்கியத்துவம் உண்டு.

பொருளாதார இயந்திரத்தை பெருமளவில் சீரமைத்தல், முழுமையான, செயல்வன்மையுள்ள, வளைந்து தரும் நிர்வாக முறையைத் தோற்றுவித்தல் ஆகியவற்றின் பாலான கோட்பாட்டு வழிப்பட்ட திசைகளையும் நடைமுறை அணுகுமுறைகளையும், கட்சி ஸ்தாபனங்கள், அரசு நிர்வாக உறுப்புகளுக்கு இவற்றிலிருந்து வரக் கூடிய கடமைகளையும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரஸ் வரையறுத்தது. பொருளாதார நிர்வகிப்பின் வடிவங்கள், முறைகளை நவீன கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு மாற்றும் பன்முக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணி

கட்சியின் மத்திய கமிட்டிக்கும் சோவியத் அமைச்சரவைக்கும் அளிக்கப்பட்டது.

இதில் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு: கட்சியின் பொருளாதார செயல்திட்டத்தின் முக்கிய கடமைகளை நிறைவேற்றும் பொழுது மையப்படுத்தப்பட்ட தலைமையின் செயல்வன்மையை உயர்த்த வேண்டும், அதே நேரத்தில் தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் பங்கும் சுதந்திரமும் வலுப்படுத்தப்பட வேண்டும், தேசியப் பொருளாதாரத்தின் எல்லா மட்டங்களிலும் பொருளாதார நிர்வாக முறைகளுக்கு மாற வேண்டும், நிர்வாகத்தில் நவீன ஸ்தாபன கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும், துறை ரீதியான நிர்வகிப்பிற்கும் பிரதேச ரீதியான நிர்வகிப்பிற்கும் இடையில் சாலச் சிறந்த பொருத்தத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நிர்வாகத்தை மேம்படுத்துவதில் சிந்தனை மாற்றம் பெரிதும் முக்கியம், நிர்வாக ஊழியர்களும் பரவலான உழைப்பாளிகளும் புதிய கடமைகளை நன்கு புரிந்து கொள்ள வேண்டும், பழைய மாதிரிகளைக் கைவிட வேண்டும் என்று கட்சி மத்திய கமிட்டியின் அரசியல் அறிக்கை மீதான காங்கிரஸ் தீர்மானத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது.

சீரமைப்பு ஆரம்பமாகி விட்டது, இது ஒரே நேரத்தில் மேல் மட்டத்திற்கும் கீழ் மட்டத்திற்கும் செல்கிறது, படிப்படியாக எல்லா நிர்வாக மட்டங்களையும், அரசியல்,

அரசுத் தலைமையின் எல்லா அடுக்குகளையும் ஆட்கொள்கிறது; இது உற்பத்திக் கூட்டுகளில் நடைபெறும் சீரமைப்புடன் ஒன்று கலக்கிறது.

1987 ஜனவரியில் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுப் பேரவைக் கூட்டத்தில் மி. செ. கர்பச்சோவ் பின்வருமாறு கூறினார்: ''சீரமைப்பு என்றால், சோவியத் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் தீவிரக் காரணிகளின் பங்கை இடையறாது உயர்த்த வேண்டும்; தேசியப் பொருளாதாரத்தின் நிர்வகிப்பில் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளைப் புனர்நாட்டி வளர்க்க வேண்டும், பொருளாதார நிர்வாக முறைகளை எல்லா இடங்களிலும் புகுத்த வேண்டும், கண்மூடித்தனமாக அதிகாரம் செய்வதைக் கைவிட வேண்டும், பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளும் முழு சுயப் பொருளாதாரக் கணக்கீட்டு முறைக்கும் புதிய விதமான உழைப்பு, உற்பத்தி ஒழுங்கமைப்பு முறைகளுக்கும் மாற வேண்டும், புதிய சோஷலிச முன்முயற்சிகளுக்கு எல்லா இடங்களிலும் ஊக்கமளிக்க வேண்டும் என்று பொருள்படும்.''*

---

* சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் முழுப் பேரவைக் கூட்டத்தின் (1987 ஜனவரி) ஆவணங்கள், மாஸ்கோ, அரசியல் பதிப்பகம், 1987, பக்கம் 15 (ருஷ்ய மொழியில்).

நடப்பு ஐந்தாண்டின் முதலாண்டில் முக்கியக் குறியீடுகளின் விஷயத்தில் திட்ட வரையளவுகள் விஞ்சப்பட்டன, முன்னோக்கிய பாதையில் முக்கிய அடி எடுத்து வைக்கப்பட்டது. சோவியத் சமுதாயத்தின் வாழ்வில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, நல்ல போக்குகள் விரைவடைந்து வருகின்றன, புதிய தார்மீக மனப்பாங்கு உருவாகி வருகிறது. ஒளிவுமறைவின்மை, உண்மை, குறைகளைச் சகியாமை, உள்ளதை மேம்படுத்தும் போக்கு ஆகியவை மேன்மேலும் நிலைபெற்று வருகின்றன.

மைய திட்டமிடலை மேற்கொண்டு வலுப்படுத்துவதுதான் புதிய பொருளாதார இயந்திரம் உருவாவதில் முக்கிய அம்சமாகும். மையத் திட்டமிடலின் வடிவங்கள் கணிசமாக மாறியாக வேண்டும். மையத் திட்டமிடலை வலுப்படுத்துவது சம்பந்தமாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரஸ் முடிவுகளில் பின்வரும் கோரிக்கைகள் அடங்கியுள்ளன: பொருளாதார நிர்வாகத்தின் மேலடுக்குகளின் முயற்சிகள் சமூக-பொருளாதார வளர்ச்சி சம்பந்தமான முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும், தேசியப் பொருளாதார விகிதாச்சாரங்கள் மேம்படுத்தப்பட வேண்டும், முக்கிய விஞ்ஞான-தொழில்நுட்பக் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

இன்று பல திட்ட அம்சங்கள் அந்தந்த

துறைகள், பிரதேசங்கள், தொழில் நிறுவனங்களின் பொறுப்பில் விடப்படுகின்றன. இது மையத் திட்டமிடலின் விஞ்ஞான அடிப்படையையும் செயல்வன்மையையும் உயர்த்த உதவுகிறது, இதனால் உற்பத்தியை தீவிரப்படுத்தலின் உள்ளாற்றலை சிறப்பாகப் பயன்படுத்த முடிகிறது.

பொருளாதார இயந்திரத்தை மேம்படுத்துவதில் சுயப் பொருளாதாரக் கணக்கீட்டு முறையை வளர்ப்பது, தொழில் நிறுவனங்களின் இறுதி முடிவுகளுக்கும் இவை தோற்றுவிக்கும் உற்பத்தி வளர்ச்சி, பொருளாதார ஊக்குவிப்பு நிதிகளுக்கும் இடையில் நெருங்கிய பரஸ்பரத் தொடர்பை ஏற்படுத்துவது ஆகியவற்றின் மீது முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. இந்நிதிகள் தொழில் நிறுவன நடவடிக்கையில் உற்பத்தி மற்றும் சமூக அம்சங்களை அதிகமாக நிர்ணயிக்கும்.

சுயப் பொருளாதாரக் கணக்கீட்டு முறையின் வளர்ச்சி பின்வரும் திசைகளில் நடைபெறும்:

—உற்பத்தி வளர்ச்சி நிதியை தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் மாற்றத்திற்கான முக்கிய மூல ஊற்றாக மாற்றுதல்;

—உழைப்பாளிகளின் வீட்டு வசதிகள், மற்ற சமூக வசதிகளை மேம்படுத்துவதில் உழைப்பாளர் கூட்டுகள் சம்பாதித்தவற்றின் பங்கை அதிகரித்தல்;

—ஒவ்வொரு பணியாளரின் உழைப்பிற்

கான ஊதியமும் உற்பத்தியின் இறுதி விளைவில் அவருடைய தனிப்பட்ட பங்கை மேன் மேலும் சார்ந்திருக்குமாறு செய்தல்;

—ஒரு சில தொழில் நிறுவனங்களின் பொறுப்பின்மை மற்ற சிலவற்றின் நல்ல உழைப்பால் சரி செய்யப்படும் வழிகளை அடைதல்;

—ஒப்பந்த உறவுகளை மேற்கொண்டு விரிவுபடுத்தல், தாம் மேற்கொண்ட உறுதி மொழிகளை நிறைவேற்றுவதில் தொழில் நிறுவனங்களின் பொறுப்பை அதிகப்படுத்தல்.

இத்தோடு கூட திட்டமிடல் மற்றும் நிர்வாகம் சம்பந்தமான எல்லா பிரச்சினைகளிலும் தொழில் நிறுவனங்களின் உரிமைகள் விரிவுபடுத்தப்படுகின்றன, தேவையற்ற அரவணைப்பை அனுமதிக்காதிருக்கவும் உழைப்பாளர் கூட்டுகளின் சட்டபூர்வமான உரிமைகளில் மேல்மட்ட உறுப்புகள் தலையிடாதிருக்குமாறு செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, தொழில் நிறுவனங்கள் சுயப் பொருளாதார கணக்கீட்டு முறைக்கு மாற்றப்படுகின்றன. அடிப்படை உற்பத்தி அங்கத்தின் உரிமைகள் விரிவுபடுத்தப்படுவதையடுத்து பல்வேறு அமைச்சகங்கள், பிரதேச நிர்வாக உறுப்புகள், பொருளாதார இயந்திரத்தின் எல்லா மட்டங்களிலும் பொருளாதாரப் பணி மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

எல்லா துறைகளும் புதிய நிர்வாக முறை

களுக்கு மாறும் பொழுது, இவற்றின் நிர்வாக ஸ்தாபன கட்டமைப்புகள் மேம்படும் போக்கில் உற்பத்தியை தீவிரப்படுத்தலின் திட்டவட்டமான வடிவங்கள் உருவாகின்றன.

இயந்திரக் கட்டுமானம் மற்றும் விவசாயத்-தொழிற்துறை இணையத்தின் தலைமையை மேம்படுத்துவது தொடர்பாக சென்ற ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் 12வது ஐந்தாண்டின் துவக்கத்தில் நடைமுறை ரீதியாக நிறைவேற்றப்பட்டன.

இயந்திரக் கட்டுமானம் சம்பந்தமான சோவியத் அமைச்சரவையின் காரியாலயம் தோற்றுவிக்கப்பட்டது. ஒரே ஐக்கிய விஞ்ஞான-தொழில்நுட்ப கொள்கையை உருவாக்கி செயல்படுத்துவது, இயந்திரக் கட்டுமான துறைகளின் பன்முக வளர்ச்சிக்கும் இவற்றின் உற்பத்தி மற்றும் விஞ்ஞான-தொழில்நுட்ப கூட்டுறவிற்கும் வழியமைத்தல், இவற்றை ஒரே முழுமையான தேசியப் பொருளாதார இணையமாக மாற்றுதல், தனித்துறைப்பாடு, பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட வல்ல பொருட்களின் உற்பத்தி மீது கவனம் செலுத்துதல் ஆகியவை இக்காரியாலயத்தின் முக்கிய நோக்கங்களாகும். 1986 ஜனவரி முதல் இயந்திரக் கட்டுமானத் துறைகளில் யூனியன் மற்றும் குடியரசு தொழில் நிறுவனக் கூட்டமைப்புகள் கலைக்கப்பட்டுள்ளன, பெரும்பாலும் இரண்டு மட்ட நிர்வாக கட்டமைப்பு புகுத்

தப்பட்டுள்ளது, அமைச்சகங்களின் முக்கிய செயல்முறைப் பிரிவுகள் வலுப்படுத்தப் பட்டுள்ளன, சில உற்பத்தி மற்றும் விஞ் ஞான-உற்பத்திக் கூட்டமைப்புகள் இணைக் கப்பட்டுள்ளன. விஞ்ஞான-ஆராய்ச்சி மற் றும் திட்ட வடிவமைப்பு ஸ்தாபனங்களை உற்பத்தி மற்றும் விஞ்ஞான-உற்பத்திக் கூட்டமைப்புகளில் சேர்த்ததன் மூலம் விஞ் ஞானத்திற்கும் உற்பத்திக்கும் இடையிலான தொடர்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஐந்தாண்டில் விவசாயத் துறை யிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன; கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணை கள், இவற்றிற்கு சேவை புரியும் தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்களை பொருளா தார ரீதியாகவும் ஸ்தாபன ரீதியாகவும் இணைக்கும் புதிய நிர்வாக உறுப்புகள் தோன்றியுள்ளன. விவசாயத்-தொழிற்துறை இணையங்களை நிர்வகிக்கும் மத்திய அரசு உறுப்பு (கோஸ்அக்ரோபுரோம்) உருவாக் கப்பட்டுள்ளது; இது குடியரசுகள், பிராந் தியங்கள், மாவட்டங்களில் உள்ள விவ சாயத்-தொழிற்துறை இணையங்களை வழி நடத்துகிறது. கோஸ்அக்ரோபுரோம் அர சாங்கத்தின் தலைமையின் கீழ் செயல்படு கிறது, யூனியன் குடியரசுகளின் அமைச்சகங் களுடன் சேர்ந்து உணவுப் பொருட்களின் உற்பத்திக்கு முழு பொறுப்பேற்கிறது. மத் திய நிர்வாக உறுப்பு என்ற வகையில் இது விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தை

துரிதப்படுத்துவதன் மீதும், விவசாய-தொழிற்துறை இணையத்தின் எல்லா துறைகளின் (விவசாயத் துறை மற்றும் உணவுப் பொருள் உற்பத்தியுடன் தொடர்புடைய எல்லா அமைச்சகப் பிரிவுகளும் இவற்றிலடங்கும்) சீரிசைவான வளர்ச்சி மீதும் தன் கவனத்தை ஒருமுகப்படுத்துகிறது. சுயப் பொருளாதாரக் கணக்கீட்டு முறையில் இயங்கும் பிரதேச விவசாயத்-தொழிற்துறை இணையங்கள் பல்வேறு பிராந்தியங்களிலும் மாவட்டங்களிலும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன; இவற்றில் விவசாயத் தொழில் நிறுவனங்களுடன் சேர்ந்து இவற்றிற்கு சப்ளை செய்யும் பிற தொழில் நிறுவனங்களும் அடங்கும்.

12வது ஐந்தாண்டில் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுப் பண்ணைகளும் அரசுப் பண்ணைகளும் எவ்வளவு தானியம் விற்க வேண்டும் என்று நிலைநாட்டப்பட்டது, இந்த அளவு மட்டம் 1986ஆம் ஆண்டு மட்டத்தில் உள்ளது. அதே சமயம் திட்டத்திற்கு மேல் விற்கப்படும் தானியத்திற்கு 50—100% கூடுதல் விலை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதிகம் விரும்பப்படும் தொழிற்துறை உற்பத்திப் பொருட்களை கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணைகளுக்கு விற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அரசுத் திட்டத்திற்கு மேல் உற்பத்தி செய்யப்பட்டவை அனைத்தும் யூனியன் குடியரசுகள், ஸ்தல சோவியத்துகளின் வசமிருக்

கும். திட்டப்படி விளைவிக்கப்படும் உருளைக் கிழங்கு, மற்ற காய்கறிகளில் 30% வரையும், திட்டத்திற்கு மேல் உற்பத்தி செய்பவற்றையும் விவசாய நிறுவனங்கள் நுகர்வுக் கூட்டுறவுகளுக்கும் கூட்டுப் பண்ணை சந்தையிலும் விற்கலாம்.

மொத்தத் தொழிற்துறை உற்பத்திப் பொருட்களில் பாதிக்கு மேற்பட்டவற்றை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் 1986 ஆரம்பத்திலிருந்தும் தொழிற்துறை முழுவதும் 1987லிருந்தும் புதிய வேலை முறைக்கு மாறின. இதில் பொருளாதார நிர்வாகத்தின் எல்லா பிரிவுகளும்—ஸ்தாபனக் கட்டமைவுகள், திட்டமிடல், நிதியமைப்பு, சப்ளை, விலைக் கொள்கை, ஊக்குவிப்புகள், பண்ட-பண உறவுகளின் மற்ற அம்சங்கள்—பன்முக ரீதியில் மேம்படுத்தப்படுகின்றன.

நிர்வாகத்தில் ஜனநாயக மத்தியத்துவத்தை நடைமுறை ரீதியாக புகுத்துவதில் நிதி, திட்ட, சப்ளை உறுப்புகளும் பல்வேறு அமைச்சகங்களும் காட்டும் தாமதமும், உற்பத்தி மற்றும் விஞ்ஞான, வடிவமைப்புக் கூட்டுகளில் தொடரும் தலையீடும், இவை பொருளாதார நிர்வாக முறைகளைப் புகுத்துவதில் காட்டும் தாமதமும் 1986 ஜூனிலும் 1987 ஜனவரியிலும் நடைபெற்ற கட்சி மத்திய கமிட்டியின் முழுப் பேரவைக் கூட்டங்களில் கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டன. இன்னமும் ஒரு

சில துறைகளில் பொருளாதார சீரமைப்பு தடைகளுடன் நடக்கிறது, பழைய அணுகு முறைகள் பின்னோக்கி இழுக்கின்றன, சடத்துவம் வலிமையாக இருக்கிறது. இவற்றிற்குப் பல எடுத்துக் காட்டுகள் உள்ளன. பல தொழில் நிறுவனங்கள் முன்போன்றே போதிய அளவு சீரிசைவாகச் செயல்படவில்லை; எப்பாடுபட்டாவது திட்டத்தை நிறைவேற்று என்ற கோஷம் இன்னமும் ஒலிக்கிறது. தர உயர்வு, செயல்வன்மை, புதிய நிர்வாக முறைகள் ஆகியவற்றை நோக்கிய மாற்றம் இடர்ப்பாடுகளுடன் நடைபெறுகிறது. ஒரு சில துறைகளில் இன்னமும் மொத்தக் குறியீடுகள் திட்ட மற்றும் மதிப்பீட்டுக் குறியீடுகளாக உள்ளன. மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எல்லா இடங்களிலும் பிரச்சினைகளின் அளவுகளுக்கும் தன்மைக்கும் ஏற்றவையாக இல்லை, இந்நடவடிக்கைகள் போதிய செயல் வன்மை, உறுதியுடன் மேற்கொள்ளப்படவில்லை.

சீரமைப்பின் முரண்பாடுகளும் இடர்ப்பாடுகளும் புரிகின்றன. தேசியப் பொருளாதாரத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் பல உள்ளன; புதிய பொருளாதார நிர்வாக முறைகளை உருவாக்கி, பயன்படுத்துவதன் மீது இவை தாக்கம் செலுத்துகின்றன. இது ஒரு புறமிருக்க, பழையதும் புதியதும் சேர்ந்தே நிலவுகின்றன, புதியதைப் புகுத்துவதும் பழையதை அகற்றுவதும் ஒரே நேரத்

தில் நடைபெறுவதில்லை. அகவய ரீதியான இடர்ப்பாடுகளும் உள்ளன; நிர்வாகிகள், பொறியியல்-தொழில்நுட்ப பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் கூட்டுப் பண்ணை விவசாயிகளில் ஒரு பகுதியினர் புதிய பொருளாதார நிர்வாக முறைகளை கிரகிப்பதுடன் இவை தொடர்புடையவை. ஒரு சிலரின் குறைந்த தகுதி, இவர்களின் பழமைவாதப் போக்கு, சந்தேக மனப்பாங்கு ஆகியவையும் தாக்கம் செலுத்துகின்றன. இவையெல்லாம் வளர்ச்சியின் யதார்த்த சூழ்நிலைகளாகும். ஆனாலும் முக்கியமானது என்னவெனில் பெரும்பாலான உழைப்பாளிகள் மாற்றங்களின் தேவையைப் புரிந்துகொண்டு, புதிய சூழலில் உழைக்கத் தாம் தயார் என்று அறிவிப்பதாகும். இதுதான் துரிதப்படுத்தலின் தீர்மானகரமான காரணியாகும், இது துரிதமான முன்னோக்கிய இயக்கத்திற்கு உத்தரவாதமளிக்கிறது.

சீரமைப்பு மற்றும் கட்சியின் ஊழியர் கொள்கை பற்றி 1987 ஜனவரியில் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி முழுப் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தில், கடமைகளின் நிறைவேற்றத்தில் தலைமை ஊழியர்கள், கட்சி ஸ்தாபனங்கள், எல்லா கம்யூனிஸ்டுகளுக்கும் எவ்வளவு பெரிய வரலாற்றுப் பொறுப்பு உண்டு என்பது கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இவர்களின் பணியில் முக்கிய அம்சம், இவர்கள் சீரமைப்பு பணி

களை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும் என்பதும் இதற்காக எல்லாத் திசைகளிலும் முயற்சிகளை அதிகப்படுத்த வேண்டும் என்பதுமாகும். இன்று ஆரம்பக் கட்டத்தில் யதார்த்த நிலையில் நிற்பதும், செய்தவற்றைப் பாரபட்சமின்றி மதிப்பிடுவதும் முக்கியமாகும், செய்தவற்றை கடந்த காலத்துடன் ஒப்பிடுவது மட்டுமின்றி கட்சி தீட்டிய திட்டங்களின் நோக்கு நிலையிலும் பார்க்க வேண்டும். எவ்வித விதிவிலக்குமின்றி எல்லோரும் நேர்மையாக உழைத்தால் தான் வெற்றி கிட்டும். எவ்வித ஊசலாட்டமும் இல்லாமல் படிப்படியாக கொள்கைகளை அமல்படுத்துவது, சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் வேறுபாடுகள் இல்லாமல் செய்வது, இம்மாற்றங்களை யாரும் திசைதிருப்பாமலிருக்கும்படி செய்வது என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி உறுதி பூண்டுள்ளது.

சீரமைப்பால் தோன்றிய முரண்பாடுகளை அகற்றும் போக்கில் உற்பத்தியை தீவிரப் படுத்தும் கடமைகள் தீர்க்கப்படுகின்றன. இதைக் கணக்கில் கொண்டு, 27வது கட்சி காங்கிரசிற்குப் பின் நிர்வாகத்தை மேம் படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட பணிகளைப் பார்ப்போம். இக்கால கட்டத்தில் உருவாக்கப்பட்ட பல புதிய அம்சங்கள் இப்போதுதான் செயல்படுத்தப் பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும்.

முதலில், பல்துறை நிர்வாக ஒத்திசைவு வலுப்பட்டதையும் இதன் ஸ்தாபனக் கட்டமைவு மேம்பட்டதையும் குறிப்பிட வேண்டும். பரஸ்பரத் தொடர்புடைய துறைகளை வழிநடத்த நிர்வாக உறுப்புகள் ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்டிருந்தன. குறுகிய கால கட்டத்தில் இவற்றிற்கு கூடுதலாக, எரிபொருள்-எரிசக்தி இணையம் பற்றிய சோவியத் அமைச்சரவையின் பியூரோ தோற்றுவிக்கப்பட்டது; எரிசக்தி செயல் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பும், எரிபொருள் மற்றும் எரிசக்தி வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பும் இதற்கு அளிக்கப்பட்டது. இது தவிர அரசுக் கட்டுமான கமிட்டியும் அரசு வெளி நாட்டுப் பொருளாதாரக் கமிஷனும் தோற்றுவிக்கப்பட்டன. அதே நேரத்தில் கட்டுமானத்திலும் வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகளிலும் பொருளாதார உறவுகள் சீரமைக்கப்பட்டன. இவையெல்லாம் தொழிற்துறையிலும் விவசாயத் துறையிலும் நடைபெறும் மாற்றங்களுடன் சேர்ந்து சீரமைப்பை தேசியப் பொருளாதாரத்தின் பெரும் பகுதிக்குப் பரப்பின.

இக்காலகட்டத்தில், கட்சி காங்கிரஸ் முன்வைத்த கடமைகளை நிறைவேற்றும் வழிகளைத் திட்டவட்டமாக்கும் பல முக்கிய தீர்மானங்கள் ஏற்கப்பட்டன. இத்தீர்மானங்கள் பல்வேறு துறைகள், பிரச்சினைகளைப் பற்றியவை என்றாலும் இவை

யனைத்தும் கட்சியின் நவீன பொருளாதார, சமூகக் கொள்கையின் பொதுக் கோட்பாடு களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை யாகும். உதாரணமாக, நிர்வாகத்தில் ஐந் தாண்டு திட்டங்களின் பங்கை உயர்த்த வும், ஆமோதிக்கப்படும் திட்டக் குறியீடு களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், உழைப்பாளர் கூட்டுகளின் செயற்பாட்டை இறுதி விளைவுகளின்படி (இதில் ஒப்பந்த நிறைவேற்றத்திற்கும் லாபக் குறியீட்டிற் கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்) மதிப் பிடுவதற்கும் திட்டமிடப்படுகிறது. இவ் வாறு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொழில் நிறுவனங்களின் உரிமைகளை —குறிப்பாக உற்பத்தியைத் தொழில்நுட்ப ரீதியாகப் புதுப்பிப்பதிலும் சமூக வளர்ச்சிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும்—கணிச மாக விரிவுபடுத்துகின்றன, திட்ட நிறை வேற்றத்தில் இவற்றின் பொறுப்பை அதி கப்படுத்துகின்றன.

பிரதேசங்களின் பன்முக வளர்ச்சிக்கு வழிகோலும் நோக்கம் நிர்வாகத்தில் அதிக மாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும், ஸ்தல சோவியத்துகளின் உரிமைகள் விரிவு படுத்தப்பட வேண்டும், குறிப்பாக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் துறைகளின் நிர்வாகத்தில் இவற்றின் உரிமைகள் விரிவு பட வேண்டும் என்ற அம்சங்களின் அடிப் படையில்தான் மேற்கூறிய எல்லா ஆவணங் களும் ஏற்கப்பட்டன. 1987ஆம் ஆண்டிற்

கான திட்டம் தீட்டப்பட்ட பொழுதும், சோஷலிச உற்பத்தி நிறுவனங்கள் (கூட்டமைப்புகள்) பற்றிய திட்ட நகலிலும் (இது 1987 பிப்ரவரியில் பொது மக்கள் விவாதத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது) மேற்கூறிய அணுகுமுறைகள் இடம் பெற்றிருந்தன.

கட்டுமான இணையத்தின் நிர்வகிப்பு முறை புதிய தொழிற்துறை மற்றும் ஸ்தாபன மட்டத்தை அடைவதற்காக மாற்றியமைக்கப்பட்டது. அரசுக் கட்டுமான கமிட்டி, யூனியன்-குடியரசு அரசுக் கட்டுமான கமிட்டியாக மாற்றியமைக்கப்பட்டது. சமீப காலம் வரை கட்டுமானம், அகில யூனியன் மற்றும் யூனியன்-குடியரசுக் கட்டுமான அமைச்சகங்களின் மூலம் நடத்தப்பட்டது. நிர்வாக அமைப்பு மேன்மேலும் சிக்கலானதாகியது, பல கட்டங்களை உடையதாகியது, ஆங்காங்கே கட்டுமானம் பல்வேறு அமைச்சகங்களின் ஸ்தாபனங்களால் நடத்தப்பட்டது, இதனால் சக்திகள் தேவையற்று விரயமாயின.

புதிய முறையில் துறை ரீதியான நிர்வகிப்பு பிரதேச நிர்வாகத்துடன் இணைந்துள்ளது. ருஷ்ய சமஷ்டிக் குடியரசில் நான்கு அகில யூனியன் பிரதேச கட்டுமான அமைச்சகங்கள் (வடக்கு மற்றும் மேற்கு பிரதேசங்களில், தெற்கு பிரதேசங்களில், யூராலிலும் மேற்கு சைபீரியாவிலும், கிழக்கு பிரதேசங்களில்) தோற்றுவிக்கப்பட்டன. யூனியன்-

குடியரசுக் கட்டுமான அமைச்சகங்களின் கட்டுமான ஸ்தாபனங்கள் யூனியன் குடியரசுகளின் அமைச்சகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டன. விசேஷ கட்டுமான அமைச்சகங்களில் மட்டுமே துறை ரீதியான நிர்வகிப்பு முறை அப்படியே விட்டு வைக்கப்பட்டது. இப்போது ஒவ்வொரு துறையிலும் கட்டுமானம், சாதாரணமாக, ஒரு அமைச்சகத்தின் கட்டுமான ஸ்தாபனங்களால் நடத்தப்படும்.

வெளிநாட்டு பொருளாதார தொடர்புகளிலும் செயல்முனைப்பான நிர்வாக இயந்திரத்தைத் தோற்றுவிக்கத் திட்டமிடப்படுகிறது. வெளிநாட்டு பொருளாதார நடவடிக்கையில் அரசின் ஏகபோகக் கோட்பாட்டைப் பேணிக் காத்து வளர்க்கும் அதே நேரத்தில் இத்துறையில் அமைச்சகங்கள், இலாக்காக்கள், தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்களின் உரிமைகளை விரிவுபடுத்தி, பொறுப்பை அதிகப்படுத்துவதும் இவை சுயமாக வெளிச் சந்தைக்கு வர அனுமதிப்பதும் விவேகமானதாயிருக்கும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இது சர்வதேசக் கூட்டுறவை வளர்ப்பதிலும், விஞ்ஞான-தொழில் நுட்ப சாதனைகளைப் புகுத்துவதிலும் வெளிநாட்டு வர்த்தகத்தின் செயல்வன்மையை உயர்த்துவதிலும் தொழில் நிறுவனங்களின் அக்கறையை அதிகப்படுத்தும். பரஸ்பரப் பொருளாதார உதவி கவுன்சிலில் உள்ள மற்ற உறுப்பு நாடுகளின் தொழில்

நிறுவனங்கள், ஸ்தாபனங்களுடன் நேரடியாகத் தொடர்பேற்படுத்திக் கொள்ளவும் உற்பத்தி மற்றும் விஞ்ஞான-தொழில் நுட்பக் கூட்டுறவு சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், ஒத்துழைப்பிற்கான பொருளாதார நிபந்தனைகளை நிர்ணயம் செய்யவும் பெரும் உற்பத்திக் கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. நேரடி ஏற்றுமதி-இறக்குமதியில் ஈடுபடும் உரிமை இன்னும் சில அமைச்சகங்கள், சோவியத் மற்றும் யூனியன் குடியரசுகளின் இலாக்காக்கள் ஆகியவற்றிற்கும் வழங்கப்பட்டது. அமைச்சகங்கள், இலாக்காக்களில் சுயப்பொருளாதாரக் கணக்கீட்டு முறை அடிப்படையில் வெளிவர்த்தக ஸ்தாபனங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன, உயர் தரமுள்ள உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதிக்காகக் கணிசமாக வழங்கும் வாய்ப்புகள் உள்ள விஞ்ஞான-உற்பத்தி மற்றும் உற்பத்தி கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்களின் கீழ் சுயப்பொருளாதார வெளிவர்த்தக கம்பெனிகள் ஏற்படுத்தப்படுகின்றன. எரிபொருள், மூலப்பொருட்கள், உணவுப் பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் இதரவற்றின் வர்த்தகம் சோவியத் வெளிவர்த்தக அமைச்சகத்திடமே இருக்கும்.

புதிய பொருளாதார நிர்வாக இயந்திரத்தின் பல்வேறு அம்சங்கள், முதன்முதலாக

பொருளாதார பரிசோதனையில் இறங்கிய தொழிற்துறையிலும் சோதிக்கப்பட்டு வருகின்றன. 1987 முதல் தொழிற்துறையின் எல்லாப் பிரிவுகளும் பரிசோதனைக் கட்டத்தில் இறங்கியுள்ளன.

இயந்திரக் கட்டுமானத் துறையில் மிகப் பெரும்பாலான துறை ரீதியான விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புத் தொழில் நுட்ப ஸ்தாபனங்கள் (எண்ணிக்கையில் சுமாராக 75—80%) உற்பத்தி மற்றும் விஞ்ஞான-உற்பத்திக் கூட்டமைப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தந்த துறையில் முக்கியமான, மிகப்பெரிய நிறுவனங்கள் மட்டுமே சுயமானவையாக விட்டு வைக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இயங்கும் இவை துறைகளின் வளர்ச்சியில் முக்கியப் போக்குகளை நிர்ணயிக்கும், தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளுக்கு புதிய தொழில்நுட்ப உற்பத்தியைத் துவக்குவது சம்பந்தமான திட்டவட்டமான லட்சியங்களை உருவாக்கும், இவற்றை அடையும் முறைகளை நிர்ணயிக்கும், இவற்றிற்கான முழு பொறுப்பையும் ஏற்கும்.

இயந்திரக் கட்டுமான அமைச்சகங்களில் 430 சக்தி மிக்க உற்பத்திக் கூட்டமைப்புகளும் 150 விஞ்ஞான-உற்பத்திக் கூட்டமைப்புகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இந்த மிகப்பெரும் உள்ளாற்றல் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் எல்லா முக்கிய

பிரச்சினைகளையும் ஆட்கொண்டு, இயந்திரக் கட்டுமானத்தின் முன் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான விஞ்ஞான-வடிவமைப்புத் தீர்வுகளைத் தர வல்லது. விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் முக்கிய திசைகளில் பல்துறை விஞ்ஞான-தொழில்நுட்ப இணையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன; இவற்றில் எல்லா பணிகளையும் நிறைவேற்ற விஞ்ஞான-தொழில்நுட்ப, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப ஸ்தாபனங்களும் பரிசோதனை தொழில் நிறுவனங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

பொருளாதார நிர்வாக முறைகளை வளர்க்க முதலில் சுயபொருளாதாரக் கணக்கீட்டு சூழ்நிலையில் ''ஆட்டோவாஸ்'' உற்பத்திக் கூட்டமைப்பு மற்றும் சூம்ஸ்கியில் உள்ள ஃபுரூன்சே இயந்திரக் கட்டுமான கூட்டமைப்பு ஆகியவற்றின் அனுபவத்தைப் பரப்ப வேண்டும். இவை 1985 முதல் சுயப் பொருளாதாரக் கணக்கீட்டு முறையை வலுப்படுத்தி, வேலையின் இறுதி விளைவுக்கான பொறுப்புணர்வை அதிகப்படுத்துவது சம்பந்தமான ஒரு பொருளாதாரப் பரிசோதனையை நடத்தின. இவற்றின் லாபத்திலிருந்து பட்ஜெட், அமைச்சகம், உற்பத்தி வளர்ச்சி நிதி, விஞ்ஞான-தொழில்நுட்ப வளர்ச்சி நிதி, சமூக-கலாசார, வீடு கட்டுமானம், பொருளாதார ஊக்குவிப்பு ஆகியவற்றிற்கு எவ்வளவு தொகை ஒதுக்க வேண்

டும் என்பது சம்பந்தமாக ஐந்தாண்டு திட்டத்தில் வரையளவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

சாதாரணப் புனருற்பத்திக்கு மட்டுமின்றி விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்திக்கும் தொழில் நிறுவனங்களின் சொந்த நிதியிலிருந்து ஏற்பாடு செய்யும் முறை இப்பரிசோதனையில் வளர்ச்சியடைந்தது. லாபத்திலிருந்து, திட்டவட்டமான வரையளவுகளுக்கேற்ப உற்பத்தி வளர்ச்சி நிதியும், தொழில் நிறுவனத்தின் மற்ற நிதிகளும் ஏற்படுத்தப்படுகின்றன. உற்பத்தி வளர்ச்சி நிதி தொழில்நுட்ப மேம்பாட்டிற்குச் செல்கிறது. தொழில் நிறுவனத்தை விரிவுபடுத்துவதற்கான நிதி கூட்டமைப்பின் வசமே தங்கும் லாபத்திலிருந்தும், கடன்களிலிருந்தும் (இவை பின்னர் லாபத்தால் சரிசெய்யப்படுகின்றன) பெறப்படுகிறது. புதிய கட்டுமானத்திற்கான நிதி மைய முதலீடுகளிலிருந்து அளிக்கப்படுகிறது.

1986 முதல் பின்வரும் 5 அமைச்சகங்கள் மேற்கூறிய நிர்வாக முறைக்கு மாற்றப்பட்டுள்ளன: இரசாயன மற்றும் எண்ணெய் துறை இயந்திரக் கட்டுமானம், உபகரண உற்பத்தி, தானியங்கி சாதனங்கள், எண்ணெய் பதப்படுத்தும் மற்றும் எண்ணெய்-இரசாயனத் தொழிற்துறை, வாகன தொழிற்துறை, நீர் போக்குவரத்து; மற்றும் இதர 17 அமைச்சகங்களைச் சேர்ந்த 36 தொழில் நிறுவனங்களும் கூட்டமைப்புகளும்

இவ்வாறு புதிய முறைக்கு மாற்றப்பட்டுள்ளன.

இவை பெரும்பாலும் தம் சுய நிதிகளிலிருந்து விஞ்ஞான-தொழில்நுட்ப, உற்பத்தி மற்றும் சமூக வளர்ச்சிக்கு வகை செய்ய வேண்டும்; தம் பொருளாதார நடவடிக்கைக்கும், சப்ளை உறுப்புகள், நுகர்வு உறுப்புகள், பட்ஜெட் மற்றும் வங்கிகள் முன் தம் கடமை நிறைவேற்றத்திற்கும் முழுமையாகப் பதில் சொல்லியாக வேண்டும்.

முக்கிய பொதுப் பொருளாதாரக் குறியீடு என்ற வகையில், உற்பத்தி மற்றும் சமூக வளர்ச்சிக்கு வகை செய்யும் முக்கிய மூல ஊற்று என்ற வகையில் லாபமானது தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் பொருளாதார நடவடிக்கையின் அடிப்படையாக வைக்கப்பட்டுள்ளது. சொந்த இருப்புகள், வருமானங்களுக்கும் (இவற்றை தொழில் நிறுவனங்கள் சுயமாகத் தம் விருப்பப்படி கையாளலாம்) தொழில் நிறுவனங்களின் செயல்வன்மைக்கும் இடையிலும் நேரடித் தொடர்பு நிலைநாட்டப்படுகிறது.

சுயப்பொருளாதாரக் கணக்கீட்டு முறையை வலுப்படுத்துவது சம்பந்தமான நடவடிக்கைகளோடு கூட மற்ற பொருளாதார உந்துகோல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொருட்களின் உயர்வான தொழில்நுட்ப மட்டத்தையும் தரத்தையும் ஏற்பாடு செய்வதில் வடிவமைப்பாளர்களின் பங்கும்

பொறுப்புணர்வும் அதிகரிக்கப்பட்டுள்ளன, இவற்றை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களின் பொருளாதார பொறுப்பு உயர்த்தப்பட்டுள்ளது, மாதிரியளவுகள், தொழில்நுட்ப சூழலை மீறினால் அதற்கான பொருளாதார, நிர்வாக நடவடிக்கைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. வரையளவுகளிலிருந்து பிறழ்ந்து தயாரிக்கப்படும் பொருட்கள் திட்ட நிறைவேற்றத்தினுள் சேர்க்கப்பட மாட்டா, இவற்றை விற்று கிடைக்கும் தொகை குறிப்பிட்ட தொழில் நிறுவனத்திற்குச் செல்லாமல் அரசு பட்ஜெட்டிற்குச் செல்லும்.

1987 ஜனவரி 1 முதல், திட்டக் கடமைகளையும், சப்ளை சம்பந்தமான ஒப்பந்தங்களையும் 100% நிறைவேற்றுவது பொருளாதார நடவடிக்கையின் முக்கிய மதிப்பீட்டுக் குறியீடாக்கப்பட்டுள்ளது. எல்லா துறைகளிலும், ஒப்பந்தங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டால் பொருளாயத ஊக்குவிப்பு நிதி 15% கூட்டப்படும், இது ஒவ்வொரு விழுக்காடும் நிறைவேற்றப்படாவிட்டால் 3% குறைக்கப்படும்.

தத்தம் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பதில் அந்தந்த நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகளுக்கு உள்ள உரிமைகள் விரிவாக்கப்பட்டுள்ளன. நிர்வாகப் பிரிவு பணியாளர்களின் எண்ணிக்கையில் வரம்புகளை கொண்டு வருவதும், இவர்களைப் பராமரிப்

பதற்கு ஆகும் செலவுகளின் அளவுமட்டுப் பாடும் மாற்றப்பட்டுள்ளன. ஊதிய நிதி, தலைமைப் பணியாளர்கள், பொறியியல்-தொழில்நுட்ப பணியாளர்கள், மற்ற ஊழியர்களை அமர்த்துவதும் பொது வரையளவுகளின் வரம்பிற்குள் அந்தந்தத் தொழில் நிறுவனத்தால் சுயமாக நிர்ணயிக்கப்படும்.

நுகர்வுப் பொருள் தொழில்துறை மற்றும் வர்த்தகத் துறையின் (இவைதான் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் அதிக பட்சம் தொடர்புடையவை) பொருளாதார இயந்திரத்திலும் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மொத்த மற்றும் பண்ட பொருட்களின் குறியீடுகள் திட்டக் குறியீடுகளாக இருந்த நிலை மாற்றப்பட்டது. இத்துறைகளின் திட்டங்கள் இப்போது ஒப்பந்தங்களின் அடிப்படையில் தீட்டப்படுகின்றனவேயன்றி மையத்தில் அங்கீகரிக்கப் பட்ட கடமைகளின் அடிப்படையில் (இவை முன்னர் பொருளாதார அடிப்படையற்று இருந்தன) தீட்டப்படவில்லை.

வர்த்தகத் துறையின் ஆர்டர்களின் அடிப் படையில்தான் நுகர்வுப் பொருள் தொழிற் துறை நிறுவனங்களின் திட்டங்கள் தீட்டப் படும். நுகர்வுப் பொருள் தொழில் நிறுவனங்களுக்கும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் இடையிலான நீண்ட பொருளாதாரத் தொடர்புகள் மேலும் வளர்ச்சியடையும்,

அதாவது ஒரு சில ஆண்டுகளுக்கான ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படும். மக்கள் விரும்பி வாங்கும் பொருட்களின் உற்பத்தியை விரிவுபடுத்துவதிலும் இவற்றின் பட்டியலை அதிகரிப்பதிலும் தரத்தை மேம்படுத்துவதிலும் நுகர்வுப் பொருள் தொழிற்துறைக்கு உள்ள அக்கறையை பொருளாதார உந்துகோல்கள் வலுப்படுத்தும்.

வர்த்தகத் துறையைப் பொறுத்தமட்டில் வர்த்தக நிறுவனங்களின் சுதந்திரம் விரிவுபடுத்தப்படுகிறது, தேவைகளை சரிவர நிர்ணயித்தல், தேவைகளை பூர்த்தி செய்தல், தொழிற்துறையின் ஆர்டர்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் இவற்றிற்குள்ள சொந்தப் பொறுப்பு வலுப்படுத்தப்படுகிறது. ஐந்தாண்டு மற்றும் ஆண்டு திட்டங்களில் குறைந்த அளவு குறியீடுகள் மட்டுமே ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றன. அவையாவன: பண்ட சுழற்சியின் (மதுபானங்களைச் சேர்க்காமல்) அளவு, மையப்படுத்தப்பட்ட முதலீடுகள், கட்டுமான மற்றும் துணைப் பணிகளின் உச்சகட்ட அளவுகள், அடிப்படை உற்பத்தி சாதனங்கள், உற்பத்தி அமைப்புகளை இயக்குவிப்பது. இது தவிர வர்த்தக நிறுவனங்கள் தம் வருமானத்திலிருந்து எவ்வளவு தொகையை பட்ஜெட்டிற்கு தர வேண்டும், எவ்வளவு தொகையை மைய சேம இருப்பிற்கும் மேலேயுள்ள ஸ்தாபனங்களுக்கும் அளிக்க வேண்டும் என்பது சம்பந்தமான

ஐந்தாண்டு வரையளவுகளும், எஞ்சியதில் எவ்வளவு பகுதியை ஊதிய நிதிக்கும் உற்பத்தி மற்றும் சமூக வளர்ச்சிக்கும் ஒதுக்க வேண்டும் என்பது சம்பந்தமான வரையளவுகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. ஊதிய நிதி மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு நிதியை உள்ளடக்கிய ஒரே ஐக்கிய உழைப்பு நிதி தோற்றுவிக்கப்படுகிறது.

திட்ட நிர்வகிப்பின் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்று பல்வேறு துறைகளின் தலைமைக்கும் பிரதேச தலைமைக்கும் இடையிலான சீரிசைவிப்பாகும். மிகப்பெரும் நிலப்பரப்பையும் பல்வேறு இயற்கை-தட்ப வெப்ப சூழ்நிலைகளையும் கொண்ட சோவியத் நாட்டிற்கு இது மிகவும் முக்கியமானதாகும். சோவியத் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளிலிருந்தே கனரகத் தொழிற்துறை மற்றும் போக்குவரத்து துறையில் மைய நிர்வகிப்பு நிலவிய அதே நேரத்தில் பொருளாதாரக் கட்டுமானத்தில் யூனியன் குடியரசுகளுக்கும் ஸ்தல உறுப்புகளுக்கும் பெரும் உரிமைகள் வழங்கப்பட்டன.

27வது கட்சி காங்கிரசின் முடிவுகளுக்கேற்ப சமூக-பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதில் மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளுக்கு உள்ள பங்கை அதிகப்படுத்தி இவற்றின் பொறுப்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் 1986 ஜூலையில் நிர்ணயிக்கப்பட்டன. இதனால் சோவியத்துகளின் நடவடிக்கையில் புதிய வாய்ப்புகள் தோன்று

கின்றன, நிர்வாகத்தில் பிரதேச அம்சங்களையும் துறை ரீதியான அம்சங்களையும் முழுமையாக ஒத்திசைவிக்க முடிகிறது, சோவியத் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு நன்கு தீர்வு காண முடிகிறது.

பொருளாதார இயந்திரத்தின் பிரதேச அம்சங்களை வளர்ப்பது சம்பந்தமான புதிய கருத்துநிலைகளில் ஒரு சிலவற்றைப் பார்ப்போம். பன்முக பொருளாதார, சமூக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்களின் திட்டங்கள் உருவாக்கப்படுவதிலும் சோவியத்துகளின் ஒத்திசைவிப்பு பங்கு அதிகப்படும். அதே நேரத்தில் ஸ்தல சோவியத்துகளின் வரம்புகளில் உள்ள தொழில் நிறுவனங்களின் பணிகளை மேம்படுத்துவதில் இவற்றிற்குள்ள அக்கறை வலுப்படும்.

பொருளாதார முறையை சீரமைப்பதை துரிதப்படுத்துவதில் அரசு தொழில் நிறுவனங்கள் (கூட்டமைப்புகள்) பற்றிய சோவியத் சட்டத்திற்கு மிகப் பெரும் பங்குண்டு. இச்சட்டம், சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நவீன பொருளாதார கொள்கை வழி நின்று தொழில் நிறுவனங்களின் பொருளாதார செயற்பாட்டிற்கான சட்ட அடிப்படைகளை நிர்ணயிக்கிறது. தேசியப் பொருளாதார வளர்ச்சி சம்பந்தமான முக்கியக் கடமைகளின் நிறைவேற்றத்தில் மத்தியத்துவ அம்சங்கள் இதில்

வலியுறுத்தப்பட்டுள்ளன; அதே சமயம் பொருளாதார் நிர்வாக முறைகளை வளர்ப்பது, சுயப்பொருளாதாரக் கணக்கீட்டு முறையைப் பரவலாகப் பயன்படுத்துவது ஆகியவற்றின் மீதும் கவனம் செலுத்தப்படுகிறது. இது சோஷலிச சுயநிர்வாகத்தை மேற்கொண்டு வளர்க்கிறது, தொழில் நிறுவனங்களுக்கும் அரசாட்சி, நிர்வாக உறுப்புகளுக்கும் இடையிலான உறவுகளை நிர்ணயிக்கிறது.

தொழில் நிறுவனங்கள் செயல்படுவது சம்பந்தமான கோட்பாடுகள் திட்டவட்டமாகவும், பெரும்பாலும் புதிய விதத்திலும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. நுகர்வாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு, அரசுத் திட்டத்தின் அடிப்படையில் வேலைகளை ஒழுங்கமைத்தல், சொந்த லாப நஷ்டக் கணக்கு முறை ஆகியவைதான் இக்கோட்பாடுகளாகும். அந்தந்த உழைப்பாளர் கூட்டு சம்பாதித்ததைக் கொண்டு தான் உற்பத்தி மற்றும் சமூக செலவுகள் சரிகட்டப்பட வேண்டும், உழைப்பிற்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும்; அதிலும் வரவு அல்லது லாபம் என்பதுதான் பொருளாதார நடவடிக்கையின் பொதுக் குறியீடாக விளங்க வேண்டும். வரவில் ஒரு பகுதி அரசு பட்ஜெட், வங்கிகள், மேல்மட்ட உறுப்பின் முன்னுள்ள கடமைகளை நிறைவேற்றச் செல்லும், இன்னொரு பகுதி தொழில் நிறுவனத்திடமே

இருக்கும்; இந்த இரண்டாவது பகுதி ஊதிய நிதியோடு சேர்ந்து குறிப்பிட்ட உழைப்பாளர் கூட்டின் சொந்த வரவை உருவாக்கும்.

சோஷலிச சுயநிர்வாகத்தின் பங்கும் முக்கியத்துவமும் புதிய கட்டத்திற்கு உயரும். உழைப்பாளர் கூட்டுதான் குறிப்பிட்ட தொழிற்சாலையில் முழு எஜமானன், இது தான் உற்பத்தி மற்றும் சமூக வளர்ச்சி பற்றிய எல்லா பிரச்சினைகளையும் தீர்க்கிறது. தொழில் நிறுவனத்தின் இயக்கத்தில் கிட்டும் வெற்றியோ இழப்போ அந்த உழைப்பாளர் கூட்டின் சொந்த வரவின் மீது, ஒவ்வொரு உழைப்பாளியின் வரவின் மீது தாக்கம் செலுத்தும். குறைந்த செலவில் நுகர்வாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நடக்கும் பொருளாதாரப் போட்டியின் பங்கு தொழில் நிறுவனத்தின் நடவடிக்கையில் அதிகரிக்கும்.

நேரடியான ஜனநாயகத்தை செயல்வன்மையோடு பயன்படுத்த வேண்டும் என்பது சம்பந்தமாக கட்சியின் 27வது காங்கிரஸ் முன்வைத்த கொள்கை நிலைகளில் ஒன்று மேற்கூறிய சட்டத்தில் நடைமுறையில் அமல்படுத்தப்படுகிறது. தொழில் நிறுவனங்கள், பெரும் கூட்டமைப்புகளின் இயக்குநர்கள் உட்பட தலைமை நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை படிப்படியாகப் பரவும், உற்பத்தி, சமூக, ஊழியர் பிரச்சினைகளைத் தீர்க்கும் அதிகாரமுள்ள உழைப்

பாளர் கூட்டு கவுன்சில்கள் தோற்றுவிக்கப் படுகின்றன.

தொழில் நிறுவனங்களுக்கும் அமைச் சகங்கள், இலாக்காக்கள், ஸ்தல சோவி யத்துகளுக்கும் இடையிலான உறவுகள் திட்டமிட்ட நிர்வாகம், சுயப்பொரு ளாதாரக் கணக்கீட்டு முறை, சுயநிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டுமென சட்டம் கூறுகிறது. மேற் கூறிய அரசு உறுப்புகள் ஐந்தாண்டு திட்டங் கள், அரசு ஆர்டர்கள், நீண்டகால பொரு ளாதார வரையளவுகள் ஆகியவற்றின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் பொரு ளாதார முறைகளைப் பயன்படுத்தி தொழில் நிறுவனங்களை வழிநடத்த வேண் டும். தொழில் நிறுவனங்கள் பயன்மிகு வகையில் இயங்கவும் இவற்றின் உரிமைகள் கறாராகப் பின்பற்றப்படவும் தேவையான சூழலை அரசு உறுப்புகள் ஏற்படுத்த வேண் டும்.

அரசுத் துறையிலும் கூட்டுப் பண்ணை களிலும் பொருளாதார இயந்திரம் அடிப் படை ரீதியாக மாற்றியமைக்கப்பட்ட அதே சமயம், தனியார் உழைப்பு சம்பந்தமாக பொருளாதார, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. நாடு பூராவும் 160க்கும் மேற்பட்ட உழைப் பாளர் கூட்டுகளில் நடைபெற்ற பூர்வாங்க விவாதத்திற்குப் பின் சோவியத் யூனியனின் நாடாளுமன்றம் 1986 நவம்பரில் தனியார்

உழைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. இது 1987 மே முதல் அமலுக்கு வந்தது.

இன்று சேவைத் துறையில் தனியார் உழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 20 லட்சமென்று நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் அவ்வப்போது மட்டுமே வேலை செய்கின்றனர். இந்த அம்சத்தை கணக்கில் கொண்டால் சேவைத் துறையில் 17—18 மில்லியன் நபர்கள் வேலை செய்கின்றனர் எனலாம். கிட்டத்தட்ட 28 மில்லியன் நபர்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளனர் (விவசாயத் துணை ஸ்தாபனங்களும் தனியார் தோட்டங்களும் இதிலடங்கும்). கிட்டத்தட்ட இவர்கள் அனைவருக்கும் சொந்தத் தோட்டங்களும் வீட்டுப் பிராணிகளும் உண்டு. சிறு மற்றும் நடுத்தர நகரங்களில் பல லட்சம் தொழிலாளர்களும் ஊழியர்களும் தனி வீடுகளில் வசிக்கின்றனர், இவர்களிடமும் சாதாரணமாக சிறு தோட்டம் உண்டு. இது தவிர பல நகரவாசிகளுக்கு கிராமப் புறங்களில் கோடையில்லங்கள் உண்டு.

தனியார் உழைப்பு நடவடிக்கையின் முக்கியத்துவம் பல ஆண்டுகளாக உரியபடி மதிக்கப்படவில்லை, இதன் சில வகைகள் சட்டப்பூர்வமாக ஒழுங்கமைக்கப்படவில்லை. தனியார் உழைப்பில் ஈடுபட்டால், மக்களின் கவனம் சமூக உற்பத்தியில் ஈடுபடுவதிலிருந்து திசை திரும்பும் என்றொரு

கருத்து உருவாகியது, இதனால் ஒரு சில பொருட்களின் சப்ளைகளும் சேவை வசதிகளும் பாதிக்கப்பட்டன. இன்று இந்த தேவையற்ற கட்டுப்பாடுகள் அகற்றப்படுகின்றன.

புதிய சட்டத்தைப் பற்றி போதுமான விவரங்களை அறியாததாலும் பல நேரங்களில் வேண்டுமென்றேயும் மேலைய நாடுகளில் இது ஏதோ தனியுடைமையை அனுமதிப்பதாயும், இது சோஷலிசப் பொருளாதாரக் கோட்பாடுகளிலிருந்து விலகுவதைக் குறிப்பதாயும் கருத்துகளைக் கேட்க நேரிடுகிறது. திட்டமிட்ட பொருளாதாரம் செயல் வன்மையற்றது, இதனால் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய இயலவில்லை என்று ஒப்புக் கொள்வதைப் போலாகிறது என்றும் கூறப்படுகிறது.

இன்று நிலவும் சில வரையளவுகள், கருத்துநிலைகளை மறுபரிசீலனை செய்யும் பொழுது இது சில மாதிரிகளிலிருந்து மாறுவதைக் குறிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. சோஷலிச தொழில் நிறுவனங்களின் நிர்வகிப்பில் மட்டுமின்றி, அரசால் நேரடியாகத் திட்டமிடப்படாத துறைகளின் துரித வளர்ச்சிக்கும் வழியமைக்க வேண்டும் என்பதுதான் கட்சியின் 27வது காங்கிரசின் முடிவாகும். புதிய சட்டம் சோஷலிசப் பொருளாதார முறையுடன் முழுக்க முழுக்க ஒத்துப் போகிறது, இது எவ்வித தனியுடைமைக்கு மாறிச் செல்வதையும் குறிக்கவில்லை.

சமூக உற்பத்தியின் வளர்ச்சிதான் சோவியத் மக்களின் அன்றாட வாழ்க்கை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான முக்கிய வழியாக இருந்தது, இருக்கிறது. ஊதிய உயர்வு, சமுதாய நுகர்வு நிதிகளின் அதிகரிப்பு, அரசு மற்றும் கூட்டுறவு வர்த்தகத்தின் வளர்ச்சி, வீடு கட்டுமானம், சமூக-கலாசார கட்டுமான வளர்ச்சி—இவையெல்லாம் அரசு பட்ஜெட் மற்றும் தொழில் நிறுவனங்களின் நிதிகளால் நடைபெறுகின்றன.

குடிமக்களின் தனிப்பட்ட உழைப்பின் அடிப்படையில் — அதாவது யாரையும் கூலிக்கு வேலைக்கமர்த்தாமல்—தனியார் உழைப்பை மேலும் வளர்க்கத் திட்டமிடப் படுகிறது. தனியுடைமைக்கும் மனிதனை மனிதன் சுரண்டுவதற்கும் முன்போன்றே இடமில்லை. தனிப்பட்ட உழைப்பு அல்லது கூட்டுறவு மட்டுமே அனுமதிக்கப்படும். சோவியத் அரசியல் சாசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளபடி சோவியத் அரசு தனியார் உழைப்பை சமுதாய நலன் கருதி மேலும் வளர்க்க உதவும். பொருளாதார மற்றும் சட்ட உந்துகோல்களை (அனுமதிகள் வழங் கப்படும் நிபந்தனைகள், முறை, வரி முறை இத்தியாதி) சட்டம் நிர்ணயிக்கிறது. இவற் றின் மூலம் தனியார் உழைப்பு நடவடிக்கை பொது பொருளாதார இயந்திரத்தில் சேர்ந்து, நிர்வாக முறை முழுவதுடனும் இணைந்து செயல்படுகிறது. இத்துறையில்

மறைமுக பொருளாதார ஒழுங்கமைப்பு முறைகள் முக்கியமாகப் பயன்படுத்தப்படு கின்றன.

நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி, சேவை துறை, உணவு விடுதிகள் ஆகியவற்றில் கூட்டுறவுகள் தோற்றுவிக்கப்படு கின்றன. இவை பண்டங்கள், சேவை வசதி களில் மக்களின் தேவைகளை மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்யும். இக்கூட் டுறவுகள் சொந்த லாப நஷ்டக் கணக்கின் அடிப்படையில் இயங்கும், தம் பொருளா தாரச் செயல்பாட்டிற்கான முழுப் பொறுப் பையும் தாமே ஏற்கும். ஓய்வு பெற்றவர் களும் சமுதாய உற்பத்தியில் ஈடுபடாத மற்றவர்களும் மாணவர்களும் இக்கூட்டுறவு களில் பங்கேற்பார்கள். கூட்டுறவுகளைத் தோற்றுவிக்கவும் அவற்றின் பணியை வலுப் படுத்தவும் ஸ்தல உறுப்புகள் சகல உதவி களையும் வழங்க வேண்டும்.

குடிமக்களின் தனியார் உழைப்பு நிபந் தனைகளைப் பற்றிய சட்டத்தை பொது வாக பொருளாதார இயந்திரத்தை மேம் படுத்துவதிலிருந்து தனியாகப் பிரிக்கக் கூடாது, அதுவும் எதிராக வைக்கக் கூடாது. இதன் நிறைவேற்றம், சட்டவிரோதமாக பெறும் பணத்திற்கு (லஞ்சம், கள்ள வியா பாரம் இன்ன பிற) எதிரான போராட்டம் வலுப்படுவதுடன் தொடர்புடையது. எங் கெல்லாம் சோஷலிச சொத்து திருடப்படு வதற்கான வழிகள் மூடியடைக்கப்படவில்

லையோ, எங்கெல்லாம் சோஷலிச தொழில் நிறுவனங்கள், தனிப்பட்ட நபர்களின் பொருளாதார செயற்பாடு சம்பந்தமான சட்டதிட்டங்கள் மீறப்படுகின்றனவோ, எங்கெல்லாம் உழைப்பின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ற ஊதியம் பற்றிய சோஷலிசக் கோட்பாடு திரிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் சட்டவிரோதமாக பணம் பெற வாய்ப்பேற்படுகிறது.

பொருளாதார இயந்திரத்தின் சீரமைப்பு இதில் உழைப்பாளிகளின் பங்கேற்போடு நெருக்கமாகத் தொடர்புடையது. இவர்கள் சீரமைப்பில் எவ்வளவுக்கெவ்வளவு சுறுசுறுப்பாகப் பங்கேற்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றிகரமாக புதிய முறைகள் பயன்படுத்தப்படலாம். சோஷலிசத்தின் பொருளாதார அடிப்படைகளை மேம்படுத்துவது, சோஷலிச ஜனநாயகத்தை சகல விதங்களிலும் விரிவுபடுத்துவது, சுயநிர்வாகத்தை வளர்ப்பது ஆகியவை உழைப்பாளிகளின் படைப்பாற்றல் வளர்ச்சிக்கும், இவர்கள் சமுதாயப் பிரச்சினைகளின் தீர்வில் உண்மையாகப் பங்கேற்கவும் ஏற்ற சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கின்றன. இதனுடன் தொடர்புடைய பல விஷயங்களில் ஒன்றை—சோஷலிசப் போட்டியின் செயல்வன்மையை உயர்த்துவதைப் பற்றி—பார்ப்போம். தொழில் நிறுவனங்களின் பொருளாதார சுதந்திரத்தை விரிவுபடுத்துவதால் இங்கே புதிய வாய்ப்புகள் தோன்றுகின்றன.

ஐந்தாண்டின் ஆரம்பத்தில் புதிய முன் முயற்சிகள் தோன்றின, போட்டியில் தரக் குறியீடுகளை நோக்கிய படிப்படியான மாற்றம் காணப்படுகிறது. உழைப்பின் உற் பத்தித் திறனை கூட்டுவது சம்பந்தமான இரண்டாண்டு திட்டங்களை (உயரிய தரத் தில்) மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் 70ஆம் ஆண்டு நிறைவு விழா தருணத்திற்குள் நிறைவேற்றுவதாக பல்லா யிரம் உழைப்பாளிகள் உறுதிமொழி மேற் கொண்டுள்ளனர். 12வது ஐந்தாண்டை வெற்றிகரமாக நிறைவேற்ற பரவலாக சோஷலிசப் போட்டியில் இறங்குமாறும் துணிவான திட்டங்களையும் எண்ணங்களை யும் நடைமுறையில் செயல்படுத்துமாறும் கட்சியின் மத்திய கமிட்டி சோவியத் உழைப் பாளிகளுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

ஆனால் சோஷலிசப் போட்டியை சீர மைப்பது இப்போதுதான் ஆரம்பமாகியுள் ளது. ஒரே சூழ்நிலையில் தனிப்பட்ட நபர் கள் மட்டுமின்றி முழு உழைப்பாளர் கூட்டு களும் வெவ்வேறாக வேலை செய்கின்றனர், நல்ல அனுபவம் மெதுவாகப் பரவுகிறது; இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. போட்டிகளை ஒழுங்கமைப்பதில் பழைய அம்சங்கள் மேலோங்கி நிற்கின்றன. உற்பத்தி யின் உண்மை விளைபயன்களை திரித்துக் காட்டும் மொத்தக் குறியீடுகளைக் கணக் கில் எடுத்துக் கொள்வது, சோஷலிச கடப் பாடுகளைப் பற்றி உழைப்பாளர் கூட்டு

களின் கருத்துகளை அறியாமல் அப்படியே பின்பற்றுவது, உழைப்புச் சூழல் மற்றும் மக்களின் வாழ்க்கை வசதிகள் மீது போதிய கவனமின்மை ஆகியவற்றை இங்கு குறிப்பிட வேண்டும்.

சோஷலிசப் போட்டியை சம்பிரதாய சடங்குகளிலிருந்து விடுவிக்க வேண்டும், இதற்கு உண்மையான சுதந்திரத்தையும் உத்வேகத்தையும் அளிக்க வேண்டும், ஒளிவு மறைவின்மைக்கு வழிகோல வேண்டும், அதாவது சோஷலிசக் கட்டுமானத்தின் ஆரம்பத்தில், முதல் ஐந்தாண்டுகளின் பொழுது அதற்கிருந்த பண்புகளைத் திரும்பித் தர வேண்டும் என்ற கோரிக்கை கட்சி மத்திய கமிட்டியின் அறைகூவலில் அடங்கியுள்ளது. சோஷலிச கடப்பாடுகள்தான் பெரும் திட்டங்களின் அடிப்படையாகத் திகழ வேண்டும். இதற்குப் போட்டிக் குறியீடுகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்களின் போனஸ் முறையைத் திட்ட நிறைவேற்றத்தின் சாதனைகளுடன் இணைக்க வேண்டும்.

* * *

இன்று சோவியத் யூனியன் தன் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையில் அடியெடுத்து வைத்துள்ளது. சோவியத் சமுதாயத்தின் வாழ்க்கையில் அடிப்படை ரீதியான, சாராம்சத்தில் புரட்சிகரத் தன்மையை உடைய

மாற்றம் நடைபெறுகிறது, எல்லா துறைகளிலும் சீரமைப்பு நடக்கிறது. இது ஓரிரு நாட்களில் நடைபெற்று முடிந்து விடும் செயல் அல்ல, இது ஒரு குறிப்பிட்ட வரலாற்று காலகட்டத்தின் வரம்புகளுக்குள் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்காகும். பொருளாதாரத் துறையில் சீரமைப்பில் முக்கியத் திசை—விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகள், நவீன நிர்வாக, பொருளாதார முறைகளைப் பயன்படுத்தி, இதில் உழைப்பாளிகளைப் பரவலாக ஈடுபடுத்தி உற்பத்தியை சகல விதங்களிலும் தீவிரப் படுத்துவதாகும். சீரமைப்பின் போக்கில் சோவியத் சமுதாயம் வலுப்படுகிறது; அனுபவம் சேருகிறது, புதிய சூழ்நிலையில் உழைக்கும் திறமை வளருகிறது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**விற்பனையாளர்கள்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**
*41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098*

**ஷோ-ரூம்**
*136, அண்ணாசாலை, சென்னை—600002*

**கிளைகள்**
*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001*
*3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018*
*42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008*
*செர்ரி ரோடு, சேலம்—636001*

**விற்பனை நிலையங்கள்**
*3—22—75—D, மதுரை சாலை; திருநெல்வேலி ஜங்ஷன்—627001*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்*
*சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001*
*நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001*